இலட்சியப்பெண்

அக்டோபர் — 86. 9

நவ. 86. 10

ப்ட
Y15ம211,N86.
N86.1
128584.

அக்டோபர், 86
மாத இதழ்
விலை: ரூ.2/-

# இலட்சியப் பெண்





## இலங்கை சகோதரிகளே

ஓ எங்கள் அருமை சகோதரிகளே
எங்களில் நீங்கள் மேலானவர்கள்
ஏனெனில்,
மாற்றான் உங்களை அழிக்கின்றான்
ஆனால்,
இங்கோ, வேலியே பயிரை மேய்கின்றது
ஆம்
நம் பங்காளி ஆண் இனம்
சந்தையில் மாடுகளென எங்களை
விலை கேட்குது, விலை போகுது
பணம் இருக்கும் வரை நாங்கள்
படுக்கையறை பதுமைகள்-பிறகுப்
பத்து பேரானாலும் பரஞ்சாவி

— விஜயலட்சுமி

## உறங்கும் உணர்வுகள்

எங்கள் பெண்களுக்கு
சமையலறையே பள்ளியறை
மாமியார் நாத்தனார்களின்
ஏசல்களே தாலாட்டு
அதனால்
உறங்கிப் போவது
அவர்கள் மட்டுமல்ல
துடிப்பான உணர்வுகளும் கூடத்தான்

— வசந்தகோகிலம்

## சட்டம் சமைப்போம்

மனுநீதி முதலாய்
மானுடச் சட்டங்கள் யாவும்
ஆண்களே தயாரித்ததால்
பெண்கள் இன்னும்
அடிமைகளாகவே இருக்கிறார்கள்

கலை இலக்கியம்
பண்பாடு கலாச்சாரம்
இப்படி எத்தனையோ
போர்வைகளுடன்
பெண்ணடிமை இருள்
பூமியை வந்து சூழ்ந்தன

பூவிலங்கு என்றும்
பொன் விலங்கு என்றும்
பெயரிட்டு விட்டதால்
பெண்களே தங்கள் விலங்குகளை
போட்டுக் கொண்டார்கள்

வானத்தில் மிதக்கவே
கற்றுக் கொடுக்கப்பட்டதால்
மண்ணில் கால் பாவ
மறந்து போனார்கள்



—கழனியூரான்

## ஏனெனில் நான் உனது கணவன்...

பொபதி ஹிரண்டானி —இந்தி
தமிழில்— இந்திரன்

இந்த வீடு என்னுடையது,
நான் உன்னைத் தொட்டேன்,
முத்தமிட்டேன்,
முகர்ந்தேன்; அனுபவித்தேன்;
இதனாலேயே நான் உன்னை இங்கு
வைத்திருக்கிறேன்.

இந்த வீட்டிற்கு பளிங்குத்தரை
உண்டு.

மேசை, நாற்காலிகள் போடப்
பட்டுள்ளன.

மேலே கூரையும் பக்கத்தில் சுவர்களும்,
அருகில் சமயலறை,
நீ எனக்காக சமையல் செய்கிறாய்,
அதற்காக
என்னிடமிருந்து இருவேளை உணவு
பெறுகிறாய்.

இந்த வீட்டில் ஆரோக்கியமான
குழந்தைகள் உள்ளனர்.
அவை என் இரத்தத்தின் வாரிசுகள்.
அவர்கள் என் சொத்தை பயன்படுத்து
வார்கள்.

என்பெயரை புனிதமாக மதிப்பார்கள்.
என் வம்சத்தை நிலை நிறுத்துவார்கள்.
என் உயிரை அனுசரனையுடன் வழி
அனுப்புவதற்காக,

இந்த உலகில் இல்லாவிடினும்
அடுத்த உலகிற்கான உணவை
எனக்குக் கொடுப்பார்கள்.

நீ என் குழந்தைகளின் தாயாக
இருக்கிறாய்.

இதனாலேயே
என் மனைவி எனும் நிலையை
அனுபவிக்கிறாய்.

நான் இவர்களின் தந்தையெனும்
பதவியை

மறுப்பேன் எனில்
நீ தாய்மையை இழந்துவிடுவாய்.

நீ எனக்குச் சொந்தமானவள்.
முழுமையாகவும், உண்மையாகவும்
நீ எனக்குச் சொந்தமானவள்.
உன்னுடைய அனைத்தும் எனக்குச்
சொந்தம்.

ஏனெனில்,
நான் உனது கணவன்.

# காந்தி ஒரு சிந்தனை



23 அக் 1986

காந்தியின் சகாப்தம் பொது வாழ்வில் பெண்கள் ஈடுபடத் தொடங்கிய காலம். கவிக்குயில் சரோஜினியின் குலத்தை சுட்டிக் காட்டி "அவருக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கலாமா" என்று சிலர் கேட்ட போது "அதற்காக வெட்கப்படவேண்டியது சரோஜினி அல்ல... நீங்களும் நானும் தான்" என்று பதிலடி கொடுத்தவர் காந்தியடிகள்... அவரை நாம் இப்படி நினைவு கூறுவோம்.

காந்தியின் அமைப்புகள் இன்று அரசியல் பிழைப்புக்கான பஜனைக் கூடங்களாகச் சிதைந்து எவரெவர் மனதிலோ புகுந்து எவரெவர் நாவிலும், எழுத்திலும் அசுத்தமாகி எந்தெந்த இரகசிய இடங்களிலோ கொச்சைப் படுத்தப்பட்டு, சமாபந்திமைக் கூடுகளாக மாறிவிட்டன...

எளிமையான காந்தியின் நிர்மாணத் திட்டங்கள் ஆடம்பரமான விழாக்களில் இச்சு இச்சு மூட்டியே கொல்லப்பட்டு அவரின் புதிய வாரிசுகளின் 'குரோட்டன்ஸ்' நந்தவனங்களில் உரமாக்கப்பட்டுவிட்டன.

காந்தியின் கதர் இன்று பல 'தேசிய' முதலைகளுக்கும் சமுதாயத் திமிங்கலங்களுக்கும் பரிவட்டமாகி நாடு முழுவதும் அலைந்து வலம்வரும் மத்திய அரசின் கொத்தடிமைகள் பலரின் சீருடையாகவும் (Uniform) மாறிவிட்டது.

காந்தியின் தத்துவங்கள், அவரது எதிரி பொக்கைவாய் சிரிப்புக்கு லேயே அவருடைய சிஷ்யர்களால் அதீதமான நடைமுறைச் சிந்தனையோடு கற்பழிக்கப்பட்டு, நூல்நிலைய சந்து பொந்துகளில் வீசியெறியப் பட்டுவிட்டன. ஆண்டில் இரண்டு நாள் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் — ஆம் அக்டோபர் 2-ஆம் தான்.

இந்தியர்கள் காந்தியை மகாத்மா வாக்கி கொன்று விட்டார்கள்.

1948 - லிருந்து காந்தியாரின் உடமைகளை ஒவ்வொன்றாக விற்கத் தொடங்கிய இந்தியர்களிடம் கடைசியாக எஞ்சி இருந்தது. 'காந்தி' என்ற மனிதன் ஒன்றுதான்.

—நல்ல வேளை 'காந்தி'யை இங்கிலாந்துக்காரர் ('காந்தி' திரைப்படமெடுத்து அட்டன்பரோ) கடத்திச் சென்றுவிட்டார்— இல்லை... இல்லை... 'காந்தி'யே (தப்பிச் சென்று) பிரிட்டிஷாரிடம் 'சரணடைந்து' விட்டார்...!!!

1815-ல் தமது எதிரிகளுள் ஒன்றான பிரிட்டிஷாரிடம் சரணடையும் போது நெப்போலியன் இதை கூறினான்...

"Of all my enemies your Majesty is the most magnanimous one"

-ஜ கதீசன்

128584
சென்னை-600 008.

# மஞ்சிக்களும் தவிர்க்க முடியவில்லை

சில வாரங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை...... நான் பயணம் செய்த பேருந்து சிக்னலுக்காக அண்ணாசாலை, அண்ணா சிலையருகே வந்து கொண்டிருக்க, எங்களுக்கும் சற்று முன்னதாக அங்கு வந்து நின்ற பஸ்ஸிலிருந்து தமது பையனுடன் ஒருவர் அவசரமாக இறங்கிக் கொண்டிருந்தார்.

ஒரு நொடியில் அந்தப் பஸ்ஸிலிருந்தவர்கள் சிறுவனை உள்ளே இழுக்கவில்லையென்றால் அந்த இடத்திலேயே அந்த சிறுமலர் சிதைந்து போயிருக்கும்.

இரண்டு பேருந்துகளிலும் இருந்தோர் அனைவருமே 'ஐயோ' என்று கதறி விட்டார்கள். சிறுவனுக்கு இந்த வயதிலேயே சிக்னலில் இறங்கக் கற்றுக் கொடுக்கும் அந்த 'பொறுப்பான' தந்தையை வாய்க்கு வந்தபடி ஏசினர்...

உணர்ச்சி வயப்பட்டு நான் கூட 'படுபாவி' இப்படி ஒரு தந்தையா?'' என்று என் ஆதங்கத்தை பக்கத்தில் அமர்ந்திருந்தவரிடம் பரிமாறிக் கொள்ள இடதுபுறம் திரும்பினேன்...

வாயில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு 40 வயது மதிக்கத்தக்க அந்த ஆசாமி இங்கே நடந்த எதிலுமே சம்மந்தப்படாதவர் போல், தலையைக்கூட நிமிராமல்... ''ம்...?'' என்றார்... கையிலே தரங்கெட்ட படங்கள் நிறைந்த ஒரு சினிமாப் பத்திரிக்கை...

பேருந்து புறப்பட்டு 'தாராப்பூர் 'டவர்' அருகே நின்றது... வலதுபுற நெடிதுயர்ந்த சுவரை பல வண்ணங்களில் அலங்கரித்துக் கொண்டிருந்த அத்தனை சினிமா சுவரொட்டிகளையும் வைத்த கண் வாங்காமல், தான் பார்த்தது மட்டுமல்லாமல் தன் அருகில் அமர்ந்து வரும் மகனுக்கு (10 வயதிருக்கும்) 'ரன்னிங் கமெண்ட்ரி' வேறு கொடுத்துக் கொண்டு வந்தார்.

அடுத்து புதுப்பேட்டை நிறுத்தம்... வலது புறக் கடையின் முன்பாக மாலைப் பத்திரிக்கை ஒன்றின் 'போஸ்டர்' தொங்கிக் கொண்டிருந்தது.

பக்கத்திலிருந்த அவர் உரத்தக் குரலில் ''ஆ மஞ்சுளா மரணமா...?''

''என்னப்பா?... யார் செத்துப் போயிட்டா?''

''சினிமா நடிகை மஞ்சுளா செத்து போயிட்டாளாம்.'' பஸ்ஸில் சிறு சலசலப்பு. மஞ்சுளா இறந்ததற்கல்ல; இவர் செய்த ஆர்ப்பாட்டத்திற்கு.

எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது... ''அண்ணா சிலையருகே தன் மகனை விபத்திற்குள்ளாக்கப் பார்த்த ஒரு தந்தை... இங்கே தன் மகனை இந்த வயதிலேயே இப்படி ஒரு மாயைக்குள்ளாக்கப் பார்க்கும் இன்னொரு தந்தை; இந்த இரண்டு பேரில் யார் பெரிய குற்றவாளி...?''

அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. என் பக்கம் திரும்பி... ''ஏன் சார், எந்த மஞ்சுளா?... விஜயகுமார் 'ஒய்ஃபா?'' என்றார்.

''ம்... எனக்கு ரொம்ப அவசியம் இது...!'' என்றேன் எரிச்சலுடன்.

• • • •

கடந்த சனிக்கிழமை உச்சி வேளைக்குப் பிறகு சற்று ஒய்வாக அமர்ந்திருந்தேன். மூன்றாண்டுகளுக்கு முன்னர் என்னிடம் M.A. படித்து விட்டுச் சென்ற மாணவி நிஷா தன் இரண்டு வயதுக் குழந்தையுடன் என்னைப் பார்க்க வந்திருந்தார்.

அரசாங்கத்தில் துணைச் செயலரின் மகளாகப் பிறந்து, ஒரு டாக்டரை மணந்து வாழும் வசதியான பெண் தான். பொதுவான சில விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம், ''M.A. படித்து விட்டு வீட்டில் சும்மா இருப்பது 'bore' ஆக இருக்கிறது— படித்த படிப்பெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து போய்க் கொண்டிருக்கிறது சார்...'' என்ற தன் 'in active' வாழ்க்கையை பற்றி அங்கலாய்த்துக்கொண்ட நிஷா பிறகு தன் சக மாணவர்களைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்,

''எங்க 'கிளாஸ் மேட்ஸ்' யாரை யாவது சமீபத்தில் பார்த்தீங்களா சார்?''

''பாலச்சந்திரன், ராதாவை சென்ற வாரம் பார்த்தேன்.''

''M.A. முடிச்சுட்டு மூணு வருஷமா அலைஞ்சிட்டு இருந்தானே, பாலச்சந்திரன் ஏதாவது வேலையில் இருக்கானா?''

''ஆமாம். வேலூரிலே ஏதோ பிரைவேட் கம்பெனியிலே வேலையிலே இருக்கிறதா சொன்னான்.''

''ராதா 'ரிசர்ச்' பண்ணிக்கிட்டு இருந்தாளே... அவளுக்கு கலியாணம் ஆயிடுச்சா...?''

''... ... ... !''

அது என்ன யாராக இருந்தாலும், ஆணைப் பற்றி விசாரிக்கும் போது அவன் வேலையைப் பற்றியும், பெண்ணென்றால் அவள் திருமணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்களே...! வாழ்க்கையின் குறிக்கோள் இரண்டு மனிதப் பிறவிகளிடையே ஏன் வேறுபட வேண்டும்?

• • • •

சென்ற 20-ம் தேதி சேலத்திலிருந்து ஒரு வாசக அன்பரின் கடிதம். நமது பத்திரிகையின் மீது மிகவும் இதய சுத்தியான பற்றுதலும், அதன் வளர்ச்சியில் ...தீவிரமான ..ஆர்வமும் கொண்ட அவரது கடிதம் என்னை மிகவும் கவர்ந்தது.

பத்திரிக்கையின் அம்சங்களைவிட அதன் அமைப்புகளை மிகவும் அக்கறையோடு விமரிசித்திருந்த பாங்கும், இத்தகைய நல்லெண்ணமுடைய வாசக நண்பர்களே, நமது மிகப் பெரிய வலிமை என்று பூரிக்கச் செய்தது. அவரின் சில யோசனைகளை நாம் முயற்சிக்காமல் இருக்கக்கூடாது ''கடிதத்தின் இந்தப் பகுதி பிரசுரிப்பதற்கல்ல'' என்ற அவரின் வேண்டுகோளின்படி அந்தப் பகுதி இங்கு இடம் பெறவில்லை.

அவரது கடிதத்தின் இரண்டாம் பகுதி தமிழ் பத்திரிக்கையில் இடம் பெறும் ஆங்கிலவார்த்தைகள் பற்றிய ஆத்திரமான ஒரு தாக்குதல்.

தமிழியக்கப் போராட்டத்தின் பல தள நாயகர்களே கூட ஆங்கில மறுப்பை ஏற்றுக் கொண்டதில்லை, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றோரே இதற்கு சாட்சி.

ஆங்கிலம் உலகைப் பார்க்க நமக்கு வாய்த்த சன்னல்; கிட்டப் பார்வை கண்ணாடி என்றுதான் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

மற்றும் தமிழ் வாசகங்களில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவது இரண்டு காரணங்களுக்காக,

ஒன்று பாத்திரங்களின் உரையாடல்கள் இயல்பாக இருக்க.

மற்றொன்று சில ஆங்கில வார்த்தைகள் தமிழைப் போல் புழக்கத்தில் வந்துவிட்டதால், அதன் தமிழ்மொழி பெயர்ப்பை விட எல்லோருக்கும் எளிதில் விளங்குவதாக இருப்பதால்..

இதனால் தமிழின் 'கற்பு' அழிந்து விடாது. ஏனென்றால் கலக்கும் இன்னொரு மொழியும் உருவகப்படி தாய் தான். ஆங்கிலம் இப்போது நமது பணியாள். இனி அது எப்போதும் நமது எஜமானியாக ஆதிக்கம் செலுத்த முடியாது.

ஆனால் சேலத்து நண்பரின் 'தமிழ்'க் கடிதத்திலிருந்து சில வரிகள் :

''குற்றாலம் மகளிர் கல்லூரிப் பேராசிரியர் திருமதி. இந்திர பவானி- சில ஆண்டுகளுக்கு முன் வெளியான அவரது 'நித்தம் எரியும் துர்க்கைகள்' நூலில் ஒரு கவிதை—

மேட்ரி மோனியல்

வாழ்க்கைப் பள்ளியில்
மேtஐப் பகர (Mat)
மேte ஐத் தேடி (Mate)
மேd ஆகிப் போனோர்க்கு (Mad)
வைத்தியம் செய்ய முயலும்
கீழ்ப் பாக்க முகாம்கள்,

இந்த அம்மையார் உங்கள் இனம்தான்— தீவிர பெண்ணுரிமை எழுத்தாளர்— ஆங்கிலோ இந்திய--இல்லையில்லை—ஆங்கிலத் தமிழச்சி...

இந்தக் கவிதை பற்றி நான் அவருக்கு எழுதினேன்— 'தங்களுக்கு ஆங்கிலத்தைப் பிடித்திருந்தால் இந்த வெறி தங்களோடு போகட்டும்—என் தாய்த்தமிழை ஆங்கிலேயனுடன் படுக்க வைக்கிற பணியில் ஈடுபடவேண்டாம்! ...இவரை விட்டு விடாதீர்கள்—

தங்கள் ''இலட்சியப் பெண்ணுக்கு மெருகூட்ட (அதாவது 'பாலீஷ்' போட) இவரைப் போன்றவர்களின் ஆங்கில அறிவு (அதாவது Knowledge) தங்களுக்கு அவசரத் தேவை,''

ஒரு மொழியின் உன்னதம் அதன் வரிவடிவங்களைக் காட்டிலும், அதைக் கையாளும் பண்புகளில்தான் கொடியேறுகிறது.

ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோ' நாடகத்தில் கடைசிப்பகுதி. உறங்கிக் கொண்டிருக்கும் டெஸ்டிமோனாவைப் பார்த்து ஒத்தெல்லோ கூறுகிறான். ''இவ்வளவு அழகான காகிதம் இத்துணை இழிவான விஷயத்தை எழுதுவதற்காகவா பயன்பட வேண்டும்...''

அதிருக்கட்டும். அடுத்த மாதம் தனக்கு நடைபெறவிருக்கும் திருமணத்திற்கான அழைப்பை இத்துடன் அனுப்பியுள்ளார்.

அதன் முகப்பில் காந்தியாரின் பொன்மொழி (ஆங்கிலத்தில்) உள்ளே அழைப்பிற் பங்கு கொள்ளுவோரின் பெயர்களின் இனிஷியல்களும் பட்டங்களும் (ஆங்கிலத்தில்)

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல மணமக்களே அனுப்புவதாக வடிவமைக்கப்பட்ட அழைப்பின்கீழே:

'தங்கள் அன்பார்ந்த'விற்கு அடியில் மணமக்களின் கையொப்பங்கள்

(ஆங்கிலத்தில்......!)

குறிப்பு : அடுத்த திங்களிலிருந்து ஒன்றாக வாழப்போகும் இவர்களுக்கு நமது 'இலட்சியப் பெண்ணின்' இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

— புலிக்கோ

## இப்படியும் ஒரு ஆராய்ச்சி!

பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்று அறிய வைத்திய பரிசோதனைகள் நடத்துவதையும். இது சம்பந்தமான 'குறுக்கு வழி' ஆராய்ச்சிகளையும் உடனடியாக தடை செய்ய வேண்டு மென்று டாக்டர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது போன்ற பரிசோதனைகளை மகப்பேறுத் துறை, சேய் நலத்துறை டாக்டர்களின் அனுமதியின் பேரில், அரசு ஆஸ்பத்திரிகளில் தான் நடத்த வேண்டு மென்றும் கூறியுள்ளனர்.

மேலும் என்ன குழந்தை பிறக்கப் போகிறது என்று பெற்றோர்களுக்கு சோதனை முடிவுகளை தெரிவிக்ககூடாது என்றும், இத்தகைய நடவடிக்கைகளினால் அதிக அளவில் பெண் சிசுக்களின் கருக்கள் அழிக்கப் படுவதை தவிர்க்கலாம் என்றும் இந்த டாக்டர்கள் வலியுறுத்தி கூறியுள்ளார்கள்.

லலிதா



# பிரச்னை தீரும் வரை அவள் நிற்க நிழல் வேண்டும்

கற்பழிப்பு குற்றங்களுக்கு அதிகபட்சதண்டனையாக மரண தண்டனையைக்கூடத் தரலாம் என்று கூறும் திருமதி. திலகவதி குமரன் தமிழ்நாட்டின் முதல் பெண் ஐ.பி.எஸ். அதிகாரி, கமிஷனருக்கு அடுத்தபடியான ரேங்கில் இருக்கும் இவர் 'பெண் விடுதலை' பற்றியும், பெண்களின் உரிமைகள் பற்றியும் அதிகமாக சிந்திப்பவர். வெளிப்படையாக தன் கருத்துக்களையும் தயங்காமல் கூறுபவர். பெண்களின் Stero-typed role ஐ பார்த்து ஏனிந்த நிலைமை, இதில் இருந்து எல்லாம் பெண்களுக்கு எப்பொழுதுதான் விடிவு என ஓயாமல் சிந்திப்பவர். பாரதியார், பெரியார் போன்றவர்களின் பெண் விடுதலை பற்றின கருத்துக்களைப் பற்றி சுயமாக விவாதிக்கக் கூடியவர்.

*உங்களுடைய இளமைக் காலந் தொட்டு நீங்கள் ஒரு பெண்ணாக வளர்க்கப்பட்டீர்களா; இல்லை ஒரு மனிதப் பிறவியாக வளர்க்கப்பட்டீர்களா?*

என்னுடைய Native Place தர்மபுரி மாவட்டம்தான். நான் பிறக்கும் போது. அங்கு ஹோசூரில் அன்னா ஜார்ஜ் என்ற பெண் I.A.S. அதிகாரி இருந்தார். அவர்தான் தமிழ்நாட்டின் முதல் I.A.S. அதிகாரி. ரொம்ப வீரமான பெண்மணி. நிறைய ஜனங்களுக்கு நல்லது செய்துள்ளார். என்னுடைய பாதருக்கு என்னையும் அவர்களைப் போல வளர்க்க வேண்டும் என்ற ஆசை. அதுவும் தவிர, நான் என் அப்பா. அம்மாவிற்கு ஒரே குழந்தை. அதனாலே என்னை ஆண், பெண் என்ற பேதமில்லாமல் வளர்த்தார்கள்.

*பெண்ணாக பிறந்ததால் இதைச் செய்ய முடியாமல் போயிற்றே என்று எதற்காகவாவது வருந்தி இருக்கிறீர்களா?*

இந்த வேலைக்கு வந்த பிறகு இந்த அளவு மனமுதிர்ச்சி வந்த பிறகு எனக்கு அந்த வருத்தம் இல்லை. ஆனால் IPS Exam-ற்காக டிரெயினிங் கிளாஸில் படித்தபோது, (ஈவ் டீஸிங் என்ற விஷயம் என்னை பாதித்தது, அதிகமான பெண்கள் பள்ளியை பாதியில் விடுவதற்கு காரணம் ஈவ் டீஸிங் தான், பெரிய்ய, பெரிய்ய சண்டைகள், ஜாதிக் கலவரங்கள் போன்றவற்றில் அதனுடைய வேர் எங்கே என்று பார்த்தால் ஈவ் டீஸிங்காகத் தான் இருக்கும்.

'ஈவ்-டீஸிங்' என்பது மிகச் சுலபமாக ஒதுக்கி விடக்கூடிய விஷயமல்ல. கற்பழிப்பைப் போல அதுவும் ஒரு சமூகக் கேடு.

கிராமப்புறங்களில் பார்த்தால் கற்பழித்தவனையே அந்தப் பெண்ணிக்கு கல்யாணம் செய்து வைத்து விடுவார்கள். இது எந்த வகையில் நியாயம். பெண் எனப்படுபவள் எந்தக் காலத்திலும், சமூகத்தில் யாரையேனும் சார்ந்து இருக்க வேண்டியவளாகவே கருதப்படுகிறாள். அதனால் கற்பழிக்கப்பட்டவளை என்ன செய்வது எனத் தெரியாமல் கற்பழித்தவனுக்கு கல்யாணம் செய்துவைத்து விடுகிறார்கள்."

கற்பழிப்பு குற்றங்களில் பெண்களின் பங்கும் உள்ளது உன்பது முற்றிலும் சரியான கருத்தல்ல. சில சமயங்களில் ஒரு பெண் அவள் விருப்பத்துக்கு மாறாக கற்பழிக்கப்படுவது உண்டு. சில இடங்களில் ஏற்கனவே தொடர்புடைய ஆணோடு ஒரு பெண் இருக்கும்போது யாராவது அதைப் பார்க்க நேரிட்டால், அவள், அவன் தன்னை கற்பழித்ததாகச் சொல்வதும் உண்டு.

*நகரத்தில் ஒட்டப்பட்டு உள்ள "ஆபாச சுவரொட்டிகள்" பற்றி போலீஸ் அதிகாரி என்ற முறையில் எப்படி பதிலளிப்பீர்கள்?*

சுவரொட்டிகள் ஆபாசமாக இருக்கின்றன என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் போலீஸாருக்கு இருக்கக்கூடிய வேலைப் பளுவால், (அதாவது இங்கே தமிழ் நாட்டில்உள்ள போலீஸார்3 ஆள் செய்யக்கூடிய வேலையை ஒரு ஆளாகவே செய்கிறார்கள்) இந்த ஆபாசச் சுவரொட்டிகள் பக்கம் அவர்களால் கவனத்தை திருப்ப முடிவதில்லை, இதைவிட முக்கியமாக அவர்கள் செய்யக்கூடிய வேலைகள் எத்தனையோ உள்ளன.

பெண் விடுதலை இயக்கம் போன்றவர்கள் இது தொடர்பாக ஏதாவது செய்ய முன் வந்து எங்களை அணுகினால், போலீஸ் தரப்பில் இருந்து ஆதரவும், பாதுகாப்பும் தர நாங்கள் தயாராக உள்ளோம். வேறு மொழிப் படங்களுக்கு தமிழில் கவர்ச்சியாக தலைப்பு கொடுப்பதும் தவறான விஷயமாகும். ஆபாச புத்தகங்கள் விற்பனையும் தடை செய்யப்பட வேண்டிய விஷயம். ஆனால் ஏற்கனவே நான் சொல்லியது போல் இதைவிட முக்கியத்துவம் வாய்ந்த அலுவல்களில் போலீஸார் ஈடுபட்டு இருப்பதால், இந்தப்பக்கம் கவனம் செலுத்த முடியவில்லையே தவிர, எங்களுக்கும் இதையெல்லாம் ஊக்குவிக்க வேண்டும். உற்சாகமூட்ட வேண்டும் என்ற எண்ணம் துளியும் கிடையாது.

*தமிழ்நாட்டில் பெண் போலீஸின் நிலைமை எப்படி உள்ளது? அதாவது அவர்களின் பணி என்ன? எந்த அளவில் பெண்கள் இந்த துறைக்கு வருவதில் ஆர்வம் காட்டுகிறார்கள்?*

தமிழ்நாட்டில் எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 50,000 ஆண் போலீஸார் உள்ளனர். பெண் போலீஸார் 1000 பேர்தான் உள்ளனர். இந்தியாவிலேயே பெண் போலீஸை அறிமுகப்படுத்தியதில் தமிழகம்தான் கடைசி இடத்தை வகிக்கிறது. ஆனால் எண்ணிக்கை அளவில் தமிழகத்தில் தான் பெண் போலீஸார் அதிகமாக உள்ளனர், ஆனால் இவர்கள் சேவை சரியாக பயன்படுத்தப்படவில்லை, இங்கு இருக்கக்கூடிய பெண் போலீஸார் ஆண் போலீஸின் வேலையில் 4ல் 1 பங்கு வேலைதான் செய்கின்றனர். இதற்கு இரண்டுகாரணங்கள் உள்ளன, ஒன்று ஆண் மேல் அதிகாரிகள் அவர்களுக்கு சரியாக வேலைஒதுக்குவதில்லை. இரண்டு, பெண் போலீஸார் தாங்கள் 'பெண்' என்ற உணர்வில் இருந்து இன்னும் மீளவில்லை. இங்கு இருக்கக்கூடிய பெண் போலீஸார் அநேகர் விரும்பி இத்தொழிலை மேற்கொண்டதைவிட, வேலை வாய்ப்பு என்ற அளவிலே இத்தொழிலை பார்க்கிறார்கள். இந்த வேலைக்கு வந்துவிட்டு, சமத்துவம் எல்லாம் பேசிவிட்டு, பெண் என்ற முறையில் சலுகைகள் எதிர்பார்ப்பது தவறு. 'delicate days' எனப்படும் மூன்று நாட்களை காரணம்



பேட்டி
— பத்மா —

# பெண்ணாகப் பிறந்தால்...

சில நாட்களுக்கு முன்பு நாட்டின் முன்னணிப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் தமிழ்நாடு மதுரை மாவட்டத்திலுள்ள உசிலம்பட்டியில் வாழும் கள்ளர் குடியில் பெண் குழந்தை பிறந்ததுமே அரளி விதையையோ அல்லது நெல் மணியை நெஞ்சடைக்குமாறு விழுங்கச் செய்து கொலை செய்து விடும் கொடூரத்தைப் பற்றி பரபரப்பாகப் பேசப்பட்டது. இந்தியா மூடப்பழக்க வழக்கங்களால் மூடங்கிக் கிடக்கும் பின்தங்கிய பூமி, அதனாலே இந்நிலை என்றவிதமாய் காரணங்கள் அலசப்பட்டன.

பின். இந்தியன் எக்ஸ்பிரஸின் ஒரு செய்தி, 'திரு. RONALD REGAN. WHITE HOUSE CHIEF OF STAFF தென்னாப்பிரிக்காவின் நிறவெறியைக் கண்டிக்குமுகமாய் 'Economic Sanctions aganist South-Africa வை அமுல் படுத்தினால். அமெரிக்கப் பெண்கள் அணிகலன்களின்றி இருக்க நேரும் நிலையை அங்கீகரிப்பார்களா?' என்ற விதமாய் இடக்காய் பேசியதாகவும், அதற்கு பெண்கள் கண்டனம் தெரிவித்திருப்பதாகவும் வெளியாகியிருந்தது.

அதற்கப்பால் ஒரு செய்தி. ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த சைனாவில் ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை என்ற சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதாகவும், எனில் முதற் குழந்தை ஊனமாக அல்லது பெண்ணாகவோ பிறந்தால் இரண்டாம் குழந்தை பெற்றுக் கொள்ளலாமென்ற சலுகை தரப்பட்டிருப்பதாகவும் இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் படிக்க நேர்ந்தது. பெண் = ஊனம்? (சைனாவில் ஒரே குழந்தை பெற்றுக்கொள்ளும் சட்டம் இறுக்கமாக இருந்த காலை, முதற் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் ரகசியமாகக் கொன்று விடும் கொடூரம் வழக்கமாகியிருந்ததால் இந்தசட்டத் தளர்ச்சி என்று கூறப்படுகிறது.)

ஆக, the circle is complete. பெண் என்று வந்தால், முற்போக்கு, பிற்போக்கு எல்லாம் ஒரே போக்கு தான் போலும்.

லதா ராமகிருஷ்ணன்

காட்டி அநேகர் லீவு கேட்பதுண்டு. ஆண் அதிகாரிகள் அவர்களைச் சுற்றி உள்ள பெண்களின். (அவர் மனைவி. தாய், சகோதரி) போதனையால் இந்த '3 நாள்' விஷயம் பற்றி ஏதோ பெரிதாக கற்பனையில் உள்ளார்கள். என்னிடம் வந்து இதைக் காரணமாக காட்டி லீவு கேட்பவர்களுக்கு நான் மறுத்து விடுகிறேன். பெரிதாக பிராப்ளம் இருந்தால் ஒழிய லீவு தருவதில்லை, எனவே ஒரு பெண் போலீஸ் இதுபோன்றசலுகைகளை பெண் என்ற முறையில் எதிர்பார்ப்பது தவறு.

> நடைபாதையில் வியாபாரம் செய்யும் பெண்கள், தியேட்டரில் பிளாக்கில் டிக்கெட் விற்கும் பெண் போன்றவர்களை போலீஸார் விரட்டும்போது. பெண்களைவிரட்டும்போது Sex-oriented ஆகவிரட்டுவது ஏன்? like, அதையே செய்யும் ஆண்களை விரட்டும் முறைக்கும் பெண்களை விரட்டும் முறைக்கும் ஏன் வித்யாசம் உள்ளது?

அதற்கு இந்த சமுதாய நோக்கு காரணம். போலீஸ் ஒன்றும் வேறு கிரகத்திலிருந்து வந்தவர்கள் இல்லை. ஆண் ஆதிக்க உணர்வு மேலோங்கி உள்ள இந்த சமுதாயத்தின் ஓர் அங்கம் அவன். அவனும் பெண்ணை இந்த சமுதாயம் எப்படி அடிமைப்பட்டவர்களாக பார்க்கிறதோ அப்படித்தான் பார்க்கிறான்.

இந்திராகாந்தி அம்மையாரைப் பற்றி யாரோ ஒரு முறை குறிப்பிடுகையில் அந்த அம்மா எப்படி ஆம்பளையாட்டம் இருக்காங்க பார் என்கிறார்கள். அதுவே கோழையாக உள்ள ஒரு ஆணைப் பார்த்து, இந்த சமூகம் அட! அவன் பொம்பளையா! என்கிறது. இங்கு ஆண் என்பது புகழுக்குரிய சொல்லாகவும், பெண் என்பது வசை சொல்லாகவுமே பயன்படுத்தப்படுகிறது. இது வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

> பெண்கள் விடுதலைக்கு பெண்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறீர்கள், எதிர்பார்க்கிறீர்கள?

ஒவ்வொரு பெண்ணும் தன்னை ஒரு தனி மனுஷியாக நினைக்க வேண்டும், உணர வேண்டும். கல்யாணம் என்பதற்கு பொருளாதார நிர்ப்பந்தம் கருதியோ, அந்தஸ்து கருதியோ உடன்படக் கூடாது. கல்யாணம் என்பது பூரண அன்பின் வெளிப்பாடாகவே நினைக்க வேண்டும். ஒத்த கருத்துடைய பெண்கள் ஒன்று கூடி அடிக்கடி விவாதிக்க வேண்டும்.

மனுஷி, இலட்சியப் பெண் போன்ற பத்திரிகைகள் பெண்களை இன்னும் அதிகமாக சென்றடைய முயல வேண்டும்.

ஏற்கனவே உள்ள நச்சு வட்டத்தினுள் போய் திரும்ப உழலுவதில் என்னபயன். பெண் என்பவள் அடிமை என்னும் நச்சு வட்டத்தை உடைக்க எல்லோரும் முயல வேண்டும்,

வேலை பார்க்கும் பெண்களின் நிலைமை இன்னும் மோசம், கணவனோடு சண்டை வந்தால் கூட போடுவதற்கு அவர்கள் உடலில் தெம்பில்லை, மனதிலும் தெம்பில்லை. மறுநாள் ஆபீஸ் போயாக வேண்டும். இன்று எதற்கு தகராறு என்று எல்லாவற்றையும் சகித்துக் கொள்கிறார்கள். இரண்டு பேருமே வெளியேபோய் வேலைசெய்து விட்டு வீட்டிற்கு வருவார்கள். ஆண் ஈசிசேரில் சாய்ந்துகொண்டு விடுவான் பெண்தான் சமைத்து. பிள்ளைகளுக்கு சாதம் ஊட்டி, துணி துவைத்து எல்லாம் செய்யவேண்டும். உலக வழக்கு என்னவோ, ஆண்தான் வலிமையானவன் என்கிறது. வலிமை ஆனவன் ஆபீசில் வேலை செய்ததிலேயேகளைத்து விடுவான், பெண்ணோ எல்லா வேலையும் செய்ய வேண்டும். உண்மையில் யார்தான் வலிமையானவர்கள்? தெரியவில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது நம் படிப்பு, வேலை இவையெல்லாம் நம்மை எங்கே இட்டுச் செல்கின்றன என்று புரியவில்லை. கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போனாலும் அவரவர் வேலையை அவரவர் பார்த்துக் கொள்வதே கிடையாது.

"

பெண் என்பது
வசை சொல்லாகவே
பயன்படுத்தப்படுகிறது

"

கடைசியாக நான் சொல்ல விரும்புவது எல்லாம் இவைதான்.

குழந்தைகள் என்பது பெண்களுடைய வாழ்க்கையில் ஒரு தடையாக அமையக் கூடாது. அதாவது வேலை பார்க்கும் மகளிருக்கு குழந்தைகளை பார்த்துக்கொள்ள போதுமான அளவில் காப்பகங்கள் இல்லை. வீட்டில் உள்ள பெரியவர்களை சார்ந்து இருக்க வேண்டியதாகிறது. இது அவளை, அவள் வேலையில் கவனம் செலுத்த முடியாமல் செய்து விடுகிறது. பெண்கள் வேலைக்குப் போயிருக்கும் நேரத்தில், பாதுகாப்பாக முழு மனதோடு குழந்தைகளை விட்டுச் செல்ல சரியான காப்பகங்களை எல்லாவிடங்களிலும் அமைக்க வேண்டும்.

கணவன், மனைவி இருவருக்குள்ளும் சண்டை வருகிறது. மனைவி பாதி இரவில் வீட்டை விட்டுப் போகிறாள். இல்லை வெளியேற்றப்படுகிறாள். இந்த மாதிரி சமயங்களில் அவள் எங்குசெல்வாள்? ஊரார் ஏசிப் பேசாதவாறு அவர்களுக்கு தகுந்த பதில் அளிக்கும்வகையில் அவள் குறிப்பிட்ட ஓரிடத்தைச் சொல்லி நான் அங்கு தான் போயிருந்தேன் என்று சொல்லக்கூடிய அளவில் எந்த இடம் உள்ளது. நாங்களே போலீஸார் விசாரணைக்கு கூட்டிவரும் பெண்களை லாக்கப்பில் வைக்காமல் வேறிடத்தில் வைக்க நினைத்தாலும் இடம் ஏதுமில்லை. அபலை நிலையங்கள் போன்ற இடங்களில் கொண்டு வைத்தால் அவள் இன்ன இடத்தில் இருந்தாம் என்று ஊர் பேசும். அவள் மனதினுள் அங்கு சந்திக்கக்கூடிய சில குற்றவாளிகளால் நஞ்சு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

எனவே பெண்கள் பாதுகாப்பாகத் தங்கக்கூடிய SAFETY JOINTS FOR WOMEN. (பெண்கள் பாதுகாப்பு மையங்கள்) போன்றஇடங்களை நிறுவ முயல வேண்டும்.

நம்முடைய உணவு முறைகளை மாற்றி அமைக்க வேண்டும். பெண் அதிக நேரம் சமையலறையிலேயே ஒடுங்கிக் கிடப்பதற்குக் காரணம் இதுவே. சமையலறையில் உபயோகப்படுத்தப்படும் நவீன சாதனங்கள் குறைந்த விலையில் கிடைத்தால்தான் எல்லோரும் உபயோகப்படுத்த முடியும். விரைவில் சமைக்க பலவித திடீர் பாக்கெட்டுகள் கிடைக்கின்றன. ஆனால் இவை அதிக விலை இவையும் குறைந்த விலையில் கிடைத்தால், அலுத்து, சலித்து ஆபீசில் இருந்து வரும் பெண்களுக்கு உபயோகமாக இருக்கும்.

தமிழ்நாட்டின் முதல் பெண் I.P.S. அதிகாரியை, ஒருஅதிகாரியாக மட்டுமல்லாது ஒரு ''சாதாரண பெண்ணாக மட்டுமல்லாது சமூக பிரச்னையும், பெண் விடுதலை பற்றின அக்கறையும் கொண்ட ஒரு மனித உருவாக சந்தித்தது பற்றி மகிழ்ச்சி ஏற்பட்டது


இனிய பெண்



சிறப்பாசிரியர்
டாக்டர் ஜகதீசன்

ஆசிரியர்,
கண்மணி

யாழ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக தென்றல் பிரிண்டர்ஸில் அச்சிட்டவர்: பாரி, வெளியிட்டவர்: ஜகதீசன், முகவரி: 28, மாணிக்கம் தெரு, [illegible], சென்னை-600 112, தமிழ்நாடு.

ஆண்டு : 1
மலர் : 9


அன்புடையீர்,
ஆயிரக்கணக்கான கட்டுப்பாடுகள் – மதத்தின் பெயரால்;
சமுதாய, பொருளாதார அடிப்படைகளால் ...

பெண்ணடிமையையே, பெண்ணுக்குரிய பண்பாடாக பல கோணங்களிலும் வலிந்து, இழைந்து வலியுறுத்திக் காட்டும் காவியங்கள், கதைகள், பழமொழிகள் இன்றும் அதற்கெனவே சில இயக்கங்கள் ...

பிறப்பில், வளர்ப்பில், அளிக்கும் உணவில், கல்வியில் அத்தனையிலும் இரண்டாந்தரம்.
– இத்தனை சிறைகளோடும் இருந்துதான் தங்கங்களை
வென்றிருக்கிறார்கள் நமது பெண்கள்

ஸோலில் ஆசிய விளையாட்டுத் திடலில் திரண்டிருந்த பார்வையாளர் மனதில் முதல் நாள் அணிவகுப்போடு மறந்து போயிருக்க வேண்டிய இந்தியாவின் பெயரை, நிறைவு விழா வரை நினைவு கொள்ள வைத்த நமது வீராங்கனைகளை நாம் எல்லோரும் வாழ்த்துவோம்

ஆசிரியர்

தமிழில்: மாலன்

# க ரு ம் பு

''ஏய்! பொண்ணு!''

கோழிகளுக்குத் தீனி இறைத்துக் கொண்டிருந்த மேட்டிக்கு வேலியோரத்துக் குரல் தெளிவாகவே கேட்டது. காதில் விழாத மாதிரி கோழிச் சோற்றைக் குழப்பியபடி மூச்சுக் கொட்டி குஞ்சுகளை அழைத்துக் கொண்டிருந்தாள்.

''ஏய் பொண்ணு, உன்னைத்தான்''

மேட்டி திரும்பவில்லை, ஆனால் அம்பு மாதிரி பதில் புறப்பட்டது,

''ஏன் கத்ற, எனக்குனு ஒரு பேர் இருக்குல? புன்னகைக்கு எப்போதும் தயாராக இருக்கும் அவன் முகத்தில் ஒருசிரிப்பு நெளிந்தது, தடதடவென்று வேலியின் எதிர்புரத்திற்கு ஓடினான். அவள் முன்னால் மிகையாய் பணிந்து வணங்கினான்.

''இந்த முட்டாப் பயலை மன்னிக்க வேண்டும் மிஸ் மேட்டி, இல்லை இல்லை மிஸ் மிஷல், ம் ஹ்ரீம், மிஸ் மேட்டி மிஷல், தப்பு தப்பு தாய்க்குலம்! மன்னிக்க வேண்டும் தாய்க்குலமே!

மேட்டி கடைக் கண்ணால் பார்த்தாள். கிண்டல் தொனிக்கும் வணக்கம், கூனல் குழைவு கும்பிடு எல்லாவற்றிலும் ஒரு கிண்டல். ஒரு போலிப்பணிவு; எகத்தாளம். வெள்ளைக்காரர்களை நையாண்டி செய்வதற்காக அவர்கள் அறியாமல் போடும் பொய்சலாம். மேட்டிக்கு அடக்க முடியவில்லை, சிரிப்பு பீறிட்டது ''புச், நீ முட்டாளாய் பிறந்தாய், முட்டாளாகவே சாவாய்!

'அப்பாடா! நான் செத்தபின் என்னைபற்றி நல்லவிதமாய் பேச ஒரு விஷயம் அகப்பட்டது.''

''என்ன?'

''புச் ரொம்ப ஸ்திரமானவன் கடைசிவரைக்கும் மாறவே இல்லை'

''புச் விழுந்து, விழுந்து சிரித்தான். மேட்டி தயங்கி புன்னகித்தாள். மெல்ல மெல்ல அரட்டைக்கு இழுக்கிறான். அப்பா சொல்லியிருக்கிறார். அவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று.

''எனக்கு வேணும்கிறது இனிமேலாவது கிடைக்குமா? சாதுவான கேள்விக்குள் இன்னொரு அர்த்தம் விஷமமாய் எட்டி பார்த்தது, பார்வை நேரே அவள் கண்களுக்குள் துழாவியது. அவள் முகத்தில் ஜிவ்வென்று ரத்தம் பாய்ந்தது. நறுக்கென்று திட்டி விடலாமா என்று நாக்கு பரபரத்தது.

''நான் கேட்டது தண்ணீர். ஜில்லென்று ஒரு கப் தண்ணீர். ஸ்ஸ்...ப்பா என்ன வெய்யில்!

தண்ணீர் பீப்பாயை நோக்கி நடந்த அவள் பின் புறத்தை, நீர் மொள்ள குனிந்த போது அவள் முன் பக்கத்தை மேய்ந்த அவன் கண்கள் அவள் திரும்பியதும் அவன் கோட்டில் எப்போதோ பிய்ந்திருந்த பித்தானை ஆராய்ந்து கொண்டிருந்தது.

''இந்த வெய்யில்ல ஒரு நாய்க்கு கூட தண்ணீர் மறுக்க மாட்டோம். நாங்க முகத்தில் வீசி எறியாத குறையாக குவளையை நீட்டினாள் மேட்டி.

''மிஷல் வீட்டுப் பெண்களுக்கே கத்தி மாதிரி நாக்கு, அழகான வாயால குத்தப்பட்டு சாகறதுக்கும் ஓர்த்தன் குடுத்து வைச்சிருக்கணும். அண்ணாந்து தண்ணி குடிக்கும் அவன் தொண்டையில் ஏறி ஏறி இறங்கும் கோலிக் குண்டை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் மேட்டி, ஆழ்ந்த மாநிறம், கல்லுக் கல்லாய் காலும் கையும், கனலை ஒளித்து வைத்த மாதிரி தோலில் அங்கங்கே சிவப்புத்திட்டு,

'நன்றி தாய்க்குலமே! நன்றி'' குவளையைத் திருப்பிக் கொடுத்துப் புன்னகைத்தான் முன்னால் அடித்த ஜோக்கை நினைவூட்டும் ஸ்பெஷல் புன்னகை.

''எங்க போறேன்னு கேட்டீங்களே...

''நான் அப்படி ஒண்ணும் கேட்கலியே...'

நான் பச்சிலை பறிக்க காட்டுப் பக்கம் போறேன். வழியில் மோர்கன் தோட்டத்தில் கரும்பு கிடந்தா வெட்டலாம் உங்களுக்கு வேணுமுனாக் கூட வந்து வெட்டிகங்க சுமக்கணுமேன்னு யோசிக்க வேண்டாம் தூக்கிட்டு வந்து போடறது என் பொறுப்பு.

கரும்புப் பாகை நினைத்தபோது மனத்தில் ஆசை சுரந்தது எத்தனை நாளாச்சு! ஆனால் அப்பாவிற்குத் தெரிஞ்சா கொலை விழும்!

அப்பா என்ன சொல்வாரோன்னு பயமா? மேட்டி திடுகிட்டாள் எத்தனை துல்லியமாய் மனத்தைப் படிக்கிறான்.

''எனக்கென்ன பயம்! இரு அரிவாளைஎடுத்துக்கிட்டு வர்றேன் வேண்டுமென்றே ஒரு சின்ன இடைவெளி கொடுத்து நிறுத்தினாள். கரும்பு வெட்டத்தான்!

தோட்டத்தை நெருங்கினதும் அரிவாளை அவன் வாங்கிக் கொண்டான், தடித்த முற்றிய கருப்புகளைத் தேடித் தேடி வெட்டினான். கல்லில் செய்த அந்த உடம்பு குனிந்து அரிவாளை வீசுகிற வீச்சைப் பார்க்கையில் வயிற்றை கலக்கியது விரல்கள் பின்னிக்கொண்டு நெரிந்தன, ப்பா என்ன மாதிரி உடம்பு!

''கடவுளே இந்த சின்னப் பொம்பிளை எவ்வளவு வேலை வாங்கறா!''

செல்லமாப் அலுத்துக் கொண்டே கரும்புகளை இழுத்து வந்தான். வேர்வை ஊற்றில் காலும் கையும் பளபளவென்று மின்னின. கரும்புகளை அமுக்கி இரண்டு கட்டாய் கட்டினான் கைக்கு ஒன்றாய் தூக்கிக் கொண்டு நின்றான்.

',மேட்டி! ஒரு ஹெல்ப் பண்ணேன் சட்டைப் பையில கர்சீப் இருக்கு எடுத்துக் கொடேன். நெற்றி வேர்வை கண்ணை மறைக்குது.

மேட்டி கோட்டுப் பைக்குள் துழாவினாள். பாறை மாதிரியான மார்பு தட்டுப்பட்டது. வேர்வையும்; கரும்புமாய்க் கலந்து அவன் உடம்பிலிருந்து பாகு வாசனை வீசியது. அவன் உயரத்திற்குச் சரியாக நுனிக்காலில் உன்னி சட்டைப் பையைத் தொட்ட போது, அவளறியாமல் மார்பு லேசாய் அவனைத் தொட்டது. மேட்டிக்கு உணர்வுகள் குழம்பின. திக்குத்தெரியாத காட்டிற்குள் வெகுதூரம் வந்து விட்ட மாதிரி ஒரே சமயத்தில் பயமாகவும், பரவசமாகவும் இருந்தது.

''போலாம் புச், கரும்புதான் வெட்டியாச்சே!'

''பொம்மனாட்டிங்குறது சரியாய் இருக்கு பார். தன் வேலையாச்சா' அது போதும் எனக்குபச்சிலை யார்பறிப்பா?''

''சரி எங்கேயிருக்கு தோட்டம்?''

''பத்தடி நடந்தா போதும்.''

அந்த இடம் நிழலாய்இருந்தது. குளிர்ச்சியாய் இருந்தது. மெல்லிய காற்று வீசியது. பார்த்த இடமெல்லாம் பச்சை. ''பா: எத்தனை அழகு: புச் கரும்புக் கட்டைக் கீழே போட்டான். பொத்தென்று சரிந்து உட்கார்ந்தான். சித்த நேரம்தான் உட்காரேன்: உனக்கு கால் வலிக்கலையா?,,

மேட்டி வெகு கவனமாய் உட்கார்ந்தாள். பக்கத்தில் அரிவாள்.

கரும்பு சாப்பிடுவது எப்படின்னு உனக்குத் தெரியுமா? கை கோட்டுப் பையில் கத்தி இருக்கிறதா என்று தடவிப் பார்த்திருக்க, கண்கள் குளிர்ந்திருந்தது. கண்களை அவள் பார்த்தால் மனதைப் படித்து விடக் கூடும்.

''கிண்டலா? பொறந்ததிலிருந்து கரும்பு தின்னுகிட்டு இருக்கேன்!.

''சாகிறவரைக்கும் கூட சில பேருக்குத் தெரியாது.!'

குத்திட்டு உட்கார்ந்து ஒரு கரும்பை எடுத்து முழங்காலில் வைத்து முறித்தான். அரிவாளை எடுத்து தோலைச் சீவிக்கொண்டே சொன்னான்.

''கரும்பு சாப்பிடுவது என்பது

> "குளோரியா நெலர் பற்றி ஒரு வார்த்தை. புகழ் பெற்று வரும் எழுத்தாளர். கறுப்பர். பெண்!
>
> கறுப்பர்களுடைய வாழ்க்கை குறிப்பாக பெண்களுடையவை தமிழர்களுடையதைப் போன்று இருப்பது இந்தக் கதையை நான் தேர்ந்ததற்கான காரணங்களில் ஒன்று."



வாழ்க்கை வாழ்வது போல.மெல்வதை எப்போது நிறுத்த வேண்டும் என்று தெரியனும்.விடாம மென்றுகொண்டே இருந்தால், சக்கைதான் மிஞ்சும்.,,

அரிவாள் முனையில் சாறு கொப்பளித்து விளிம்பில் முத்துக் கட்டியது.

பல்லில் சக்கை மாட்டிக்காம இருக்கனும் வாயில் தித்திப்பு இருக்கும் போதே மெல்ற துண்டை துப்பிடனும் மேட்டி புரியுதா? அவள் அவன் கண்களைப் பார்த்தாள். கண்ணுக்குள் ஒரு கடல். வார்த்தைகள் அற்ற அந்த கடலுக்குள் அவள் மிதப்பது போல் ஒரு சலனம்.

* * *

அப்பா பேசவில்லை. இரண்டு நாட்களாக வாயைத் திறக்கவில்லை: தன்னிடம் மட்டுமல்ல அம்மாவிடம் கூட இந்த மயான அமைதிக்குப் பதிலாகப் புயல் அடித்து இருக்கலாம்;

சாமுவேல் மிஷல் அரட்டைக்கார மனுஷன் அல்ல, ஆனல் அந்த அமைதியும் நிதானமும் பயம் காட்டாது, அம்மாவாவது கோபம் வந்தால் குரலை உயர்த்துவாள், அடுக்களையில் பாத்திரம் 'ணங்' என்று உட்காரும், தட்டுக்கள் தட தட வென்று சரியும், ஆனல் அப்பாவிற்கு கோபம் வந்தால் வாயைத் திறக்காது வாசல் சேரில் பைபிளோடு உட்கார்ந்து விடுவார்,

நகரப் பெண்கள் அணிந்து கொள்வது போன்ற நாகரீகமானஷூவாங்கிக் கொள்ள மேட்டிக்கு ஆசை. அதெல்லாம் காஸ்ட்லி. ஆறு உழைக்காது. 'வேஸ்ட்' என்பது அம்மாவின் கட்சி. அப்பா ஒன்றும் பேசவில்லை. சனிக்கிழமைகள் கூட வேலைக்குப் போனர். ஒரு மாதம் கழித்து அவர் கையில் புதுச் செருப்பு பொட்டலத்தை கொடுத்து ''ஞாயிற்றுக் கிழமை சர்ச்சுக்குபோகிற போது மட்டும் போட்டுக்கோ' என்று சொல்லி விட்டு உள்ளே போனர். மகளும் தாயும் மாதக் கணக்கில் கட்சி கொண்டு சர்ச்சித்த விஷயத்தில் அவர் பேசியது இவ்வளவுதான்.

ஒருவாரம் உடலைப் பொசுக்குகிற காய்ச்சலுக்கு அப்புறம் கண்ணைத் திறந்த போது பார்த்த முதல் முகம் அப்பாவினுடையதுதான். கண்ணைத் திறந்ததும் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். அம்மாவைக் கூப்பிட்டு வேர்த்து நனைந்திருந்த பாவாடையை மாற்றச் சொன்னர். அப்போதும் அம்மாதான் சொன்னள். அவர் ஒரு வாரமாக வயற்காட்டுப் பக்கம் போகவே இல்லையாம். கட்டிலுக்குப் பக்கத்திலேயே நாள் முழுக்க அவளைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாராம். எங்கிருந்து கூட்டி வந்தாரோ, எப்படித் தான் அழைத்து வந்தாரோ, ஒரு வெள்ளைக்கார டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டு வந்து காண்பித்தாரம். இன்றுவரையில் அப்பா இது குறித்து வாய் திறந்ததில்லை.

ஆனல் இந்த மௌனம் அந்த மாதிரியான அமைதி இல்லை.

'அம்மா, என்னல தாளமுடியலே, வேணும்னு அவர் என்னை அடிச்சு கொன்னுடட்டும்.''நீ சும்மா இரு எல்லாம் சரியாய் போயிடும்!''

''எனக்கு அவமானமா இருக்கும்மா.''

''குழந்தை பெற்றுக் கொள்வதில் என்ன அவமானம்?''

''பெண் கருத்தரிப்பது இயற்கை. குழந்தைகள் பாவம் என்று பைபிள் சொல்லவில்லை.''

புச்தான் காரணம்னு அப்பாகிட்டே சொல்லிட்டியாம்மா?

''அடுத்த நிமிஷம் புச்சை கொன்னுட்டு ஜெயிலுக்குப் போயிடுவார். அது உனக்கு ஆசையா?''

கதவு அறைந்து சாத்தப்பட்டது.

''மேட்டி, இங்கே வா!''

கடைசியாக அப்பா பேசிவிட்டார். குரலைக்கேட்ட உடல் நடுங்கிற்று. பயந்து கொண்டே முகத்தைப் பார்த்தாள். அது கல் போன்று உணர்ச்சியற்று உறைந்து போயிருந்தது. 'என்ன அப்பா' ஏனென்று தெரியாமல் குரல் நடுங்கிற்று.

அரை நிமிடம். அப்பா பேசாமல் நின்ருர். அசையாமல் முகத்தைப் பார்த்தார். பின்யாரிடமோ பேசுவது போல் ஆரம்பித்தார்.

''என்னல எவ்வளவு முடியுமோ அதை நான் உனக்கு செய்திருக்கிறேன். உன்னை ஒரு நாள் கூடப் பட்டினிபோட்டதில்லை. யாரிடமும் எதற்காகவும் போய்நிற்கிற நிலையில் வைத்ததில்லை!

''.......''

''வெளியில், வாசலில் அதிகம் அனுப்பாமல் வளர்த்திருக்கலாம். ஆனல் பெண் குழந்தையான உனக்கு அது தான் நல்லது என்று நான் நம்பினேன்.''

'அப்பா நீங்கள் என்னை வளர்த்த விதத்தில் ஒரு தப்பும்......''

'குறுக்கே பேசாதே. உன்னை சுற்றிக்கொண்டிருந்த அந்த ஹாரிசை உனக்கு கட்டிவைத்திருக்கலாம். ஆனல் அவனை விட நல்ல இடமாக கிடைக்கும் என்றுநம்பிக் காத்திருந்தேன், ஆனல் அவன் இப்படி...!''...'

அப்பாவின் பேச்சு திரும்புகிற திசையைக் கண்டு திடுக்கிட்டாள் மேட்டி, கடவுளே! ஹாரிஸ்தான் இந்தக் குழந்தைக்குக் காரணம் என்று அப்பா நம்புகிருர்!

''நல்ல பையன் தான், ஆனல் வயதின் அவசரம். அதுதான் அவனை இப்படிச் செய்யத் தூண்டியிருக்க வேண்டும். என்னுல் புரிந்து கொள்ள முடியறது. அவன் வயதில் நானும் இருந்திருக்றேன். நாளைக் காலை அவன் வீட்டிற்குப் போகிறேன். அவன் காதைத் திருகி......''

ஐயோ பாவம் ஹாரிஸ். இது என்ன புதுத்திருப்பம், மேட்டி பேச விரும்பினுள். உலகம் ஒரு பந்தாய் திரண்டு தொண்டையை அடைத்தது.

''அப்பா! அது ஹாரிசின் குழந்தை இல்லை!''

அப்பா! ஒரு கணம் ஸ்தம்பித்தார், அவர் இதயம் சுக்கல் சுக்கலாய் உடைந்து சிதறியது முகத்தில் தெரிந்தது.

''பின் யார் அது? குரல் உறுமியது, அமைதி உடைந்ததா? இனிப் புயல் தானு?''

உன்னைத்தான் கேட்கிறேன். யார் அது?''

'புச்'-வார்த்தை வாய்வரை வந்து விட்டது. ஆனல் வெளியில் வரவில்லை. அவனுடையதுதானு இது? வெயில் பட்டை உரிக்கிற அந்த ஆகஸ்ட் தினம் மனத்தை நிறைத்த கரும்பு வாசனை நிழல் பரவிய பசுந்திடல், சில்லென்று காற்று இதுஎல்லாம் சேர்ந்து உருவாக்கியது அல்லவா இந்தக் குழந்தை! அவன்மட்டும் தானு இதற்கு காரணம். அவள்?

நான் சொல்லமாட்டேன் அப்பா! அப்பா பாய்ந்து கூந்தலைப் பற்றினுர். இரும்பு போல் கை பிடரியில் இறங்கிற்று.

'சொல்லு யார் அவன்?'

சமையலறையிலிருந்து அம்மா ஓடி வந்தாள்.

'அவளை விட்டுங்க பொய் அடிக்கிற வயசுக் குழந்தையா அவ''

''நீ தள்ளிப் போ!''

அப்பா மூலையில் இருந்த ஓட்டடைக் குச்சியைப் பாய்ந்து எடுத்தார்

''யார் அவன் ?''

கேள்வியும் குச்சியும் மாறி மாறி விழுந்தன. அடி விழும் போதெல்லாம் மேட்டி சுழன்று அது அடிவயிற்றில் விழாமல் குழந்தை மீது படாமல் பார்த்துக் கொண்டாள்.

அம்மா,''கடவுளே! கடவுளே''என்று அழுதாள். விடுவிடுவென்று ஓடி சுவற்றில் தூங்கிய துப்பாக்கியை எடுத்தாள் மேகனை கஷ்டப்பட்டு இழுத்துப் பூட்டினுள். கை நடுங்க குதிரையில் விரலை வைத்தாள்.

குண்டு கோணலாய் பறந்து கணப்பின் மூலையைப் பெயர்த்தது.

சத்தம் கேட்டு அப்பா திரும்பிப் பார்த்தார்.

''இனிமே அவமேல ஒரு அடி விழுந்தா நான் உங்களை நரகத்தில் வந்து பார்பேன்!''

அம்மாவின் குரல் அப்பாவை உலுக்கிற்று. திடுக்கிட்டு விழித்து எழுந்தவராக சுற்றும் முற்றும் பார்த்தார்.

தன்கையில் முறிந்த கழி. துப்பாக்கியோடு எதிரே மனைவி. ரத்தவிளாறுய் காலடியில் முனகிக் கொண்டு பெண். திகைத்துப் போய் நின்ருர்.

குச்சி கை நழுவி விழுந்தது. சாம் விசும்பி விசும்பி அழுதார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்.)


பிரதிகளை உறுதி செய்து கொள்ளுங்கள்

ஆறு மாத சந்தா ரூ.12/-
ஒரு வருட சந்தா ரூ.24/-
ஆயுள் சந்தா ரூ.250/-


# அங்கேயும் இதேப் பிரச்சனைதான் ஆனால்!

கட்டிடத் தொழில், தினக்கூலி வேலை போன்ற உத்தரவாதமில்லாத துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்கள் மட்டுமல்ல, நாகரீக, உயர் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களிலும் 42% உயர் அதிகாரிகளினால் பெண் என்ற காரணத்தினால் பல வகையிலும் சில்லறைப் படுத்தப்படுகின்றார்கள் என்று எடுத்துரைக்கிறது, இரண்டு வருட ஆராய்ச்சியின் பலனாய் ஆன Official Merits System protection Board என்ற அமைப்பின் கண்டுபிடிப்பு. மேலும் பலப்பலப் பெண்கள் பெண் என்பவளை அலுவலகத்தினர் எத்தனை சின்னத்தனமாய் எண்ணுகின்றனர் என்பதற்குக் கட்டியங் கூறினர். எனினும் வேலையைத் தக்க வைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தமும், அதிகாரிகள் சில்லறைத்தனமாக நடந்து கொள்வதை வெளியே கூறினால் வேலைப்பளு அதிகமாகி தனக்கெதிரான விரோத மனோபாவம் வளர்ந்து, வேண்டாததற்கெல்லாம் தன்னைக் குற்றஞ்சாட்டித் துன்புறுத்தும் சூழல் வளருமே என்ற பயமும் பல, பணிபுரியும் பெண்களை மௌனமாக அதிகாரிகளின் விஷமங்களைக் கண்டுங் காணாமலும் இருக்கச் செய்து விடுகின்றன. சிலர் அத்தகைய அதிகாரிகளின் நிபந்தனைகளுக்கு உடன்பட வேண்டிய கட்டாயமும் உண்டு. இந்நிலை இங்கு மட்டுமில்லை. அமெரிக்கா போன்ற பல மேலை நாடுகளிலும் சகஜமான, வளர்ந்து வரும் சீர்கேடு.

மைக்கேல் வின்சன் என்ற பெண் வங்கித் தொழிலாளி நான்கு வருடங்களாக வங்கி உயர் அதிகாரியினால் நேரிடையாகவும், மறைமுகமாகவும் கேவலமாக நடத்தப்பட்டு வந்து, இறுதியில், இனியும் மௌனம் சாதிக்கக் கூடாது என்ற முடிவோடு பெண்ணியக்கங்களின் துணையோடு யு. எஸ். சுப்ரீம் கோர்ட்டு வரை போய் வெற்றி பெற்றிருக்கிருர். 3-8-'86 இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியான இந்தச் செய்தியில் முக்கியமாகச் சொல்லப்படுவன:—

யு. எஸ். சுப்ரீம் கோர்ட் தனது தீர்ப்பில் இத்தகைய பாலுணர்வு சம்பந்தமான மறைமுகத் தாக்குதல்கள் பெண்களின் வேலைத்திறனைக் குறைத்து, பெரும்பாலோரை வேலையை விட்டு நீங்கச் செய்கிறது. இவ்வகையில், இத்தகைய நடவடிக்கைகள் பெண்களின் சமவேலை வாய்ப்பு உரிமையைப் பறிப்பதால் செயல்படுகின்றன. இது சட்டப்படி குற்றம். எதிர்த்தால் வேலை நீக்கம் செய்யப்படுவாய் என்ற சொல்லித் தெரிய வேண்டியதல்லாத பயமுறுத்தலில் பெண் ஊழியர்கள் பதிலான ஆண் அதிகாரிகளின் பாலுணர்வு நடவடிக்கைகள், பணியிடங்களில் பால்பேதம் பார்க்கக் கூடாது, என்ற யு.எஸ். சிவில் சட்டத்திற்கு எதிரான நடவடிக்கை. சட்டப்படி குற்றம், என்று திட்டவட்டமாக தீர்ப்பு வழங்கியிருக்கிறது!

இதுவரை, கற்பழிப்பு, பலாத்காரம் போன்ற பெரிய அளவிலான கேவலப்படுத்தலே கோர்ட்டிற்குப் போக முடியும் நிலை. இந்தக் கேஸின் மூலம் பெண்ணிற்கெதிரான எவ்வித வேண்டாத பாலுணர்வு செயல்களையும் கோர்ட்டிற்குக் கொண்டு போக முடியும்! யு. எஸ். சுப்ரீம் கோர்ட், 'பெண் ஊழியர் விரும்பாமல் அவர்பால் சொல்லப்படும் பாலுணர்வு சம்பந்தமான சொற்கள், செயல்கள், வேலை தருவதற்கு பிரதியாக பெண்ணை தனக்கு இணங்கச் சொல்வது முதலியன சட்டப்படி குற்றம் என்று வரையறுத்திருக்கிறது.

1964 ஆம் ஆண்டின் U. S. Civil Rights Act ன் ஒரு பகுதி ஆணுக்கும், பெண்ணுக்கும் எவ்வித பேதமுமின்றி சமவேலை வாய்ப்புரிமையை உறுதிப் படுத்துகிறது. இந்த உரிமையைப் பெண்கள் சரிவரப் பெற ஏதுவாக EEOC—The Equal Employment Oppurtonities Commission என்ற அமைப்பு உருவாகியது. அதுவும் ஏறக்குறைய சுப்ரீம் கோர்ட் வரையறுத்துள்ளபடியே பெண்களுக்கெதிரான பாலுணர்வு நடவடிக்கைகளை வரிசைப்படுத்தியுள்ளது.

தீர்ப்பு வழங்கியுள்ள தலைமை நீதிமன்றம், சிறுபான்மையினருக்கெதிரான பேதங்கள் எப்படி அவர்களை ஒடுக்கி விடுமோ அதேபோல் தான் பெண்களுக்கெதிரான இத்தகைய தகாத நடவடிக்கைகளும், என்று தெளிவாகக் கூறுகிறது.

# ஒரு கணித ஞானி

## ராணி சிரோமணி

வேளச்சேரி ரோடும், அகரம் ரோடும் சந்திக்கும் இடத்தில் அமைந்திருக்கும் "Siromoneys" என்ற இல்லத்தை நான் அடைந்த பொழுது மாலை 5 மணி. இல்லத்தரசி திருமதி. ராணி சிரோமணியை சிந்தித்த பொழுது எனது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக முற்றிலும் எளிமையாக யாரையும் கவர்ந்திழுக்கும் ஒரு மேதா விலாசம் என்னையும் கவர்ந்தது.

Federation of Indian chamber of commerce and Industries Ladies Orgenisation வழங்கும், "Cout standing woman Proffessional"! 1985க்கான awardஐ தட்டிச் சென்றவர் இவர் என்று அறிந்து அவரிடம் பேசும் பொழுது மாதர் குல மேன்மையை உணர்த்தும், ஒரு பெண் மணியிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பே மிகவும் பெருமிதமாக இருந்தது. அவரிடமிருந்து கேட்டறிந்த செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

திருநெல்வேலி ஜில்லாவில் வாழையடி என்ற ஊரில் பிறந்த இவர் தனது பள்ளி வாழ்க்கையை மதுரை O. C. P. M High school-லிலும், Intermediateஐ Madras Christion college-லும் முடித்து B. A (Hons)ஐ Madras American college-லும் பூர்த்தி செய்த இவர் அதே கல்லூரியில் கடந்த 35 வருட காலமாக கணித பேராசிரியையாக இருந்து வருகிறார். இதற்கிடையில் 1959-ல் அமெரிக்க அரசின் Full Bright-Smith ஸ்காலர்ஷிப் பெற்று அமெரிக்காவில் Masters Degreeஐ Colombia University-ல் செய்திருக்கிறார். Ph-Dஐ Madras University-யில் செய்யும் நாட்களில் இவர் ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுத்த தலைப்பு, "Studies in the Mathematical Theoryof Grammer" என்பதுதான்.

இவரது வாழ்க்கையில் மட்டுமல்லாது, ஆராய்ச்சிகளிலும் உறுதுணையாக நிற்பவர் இவரது கணவர் திரு கிஃப்ட்சிரோமணி. இவரும் அதே கல்லூரியில் புள்ளியியல் பேராசிரியராக இருக்கிறார்.

அமெரிக்காவில் இருந்த காலத்தில் திருமதி. ராணி சிரோமணி Computer Science வெகுவாக முன்னேறியிருப்பதை உணர்ந்தார். இவருக்கு இயற்யாக கணிதத்தின் மேலிருந்த ஆர்வமானது Mathamatical theory-பற்றி ஆராய்ச்சி செய்ய தூண்டுகோலாக அமைந்தது. ஆனால், அமெரிக்காவில் Mathematical theory ஆங்கிலத்தில் மட்டுமே இருப்பதைக் கண்டு இதை ஏன் தமிழுக்கு மாற்றக்கூடாது என்ற எண்ணம் மேலோங்கியது. முதல் கட்டமாக linear என்று சொல்லப்படுகின்ற வரி வரியாக மாற்றம் செய்யும் முறையைக் கையாண்டார். பிறகு அடுத்தக் கட்டமாக அதை வித்தியாசமான பாணியில் எல்லோரும் புரிந்து கொள்ளும் படியும் அமைக்க வேண்டும் என்ற ஆர்வத்திலும் படங்கள் மூலம் விளக்கச் செய்வதற்கு அவர் தேர்ந்தெடுத்தப்படங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்தும். சாதாரணமாக வீட்டிற்கு வீடு பெண்களால் போடப்படும் கோலங்களையே அவர் தேர்ந்தெடுத்தார்.

கோலங்கள் அனைத்தும் கணித அடிப்படையைக் கொண்டவை என்று கூறும் இவர், தான் கிறிஸ்துவர் என்ற காரணத்தினால் கோலம் போடும் வாய்ப்போ, வழக்கமோ தனக்கில்லை என்றுக் கூறி மேலும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்.

Mathematical theoryஐக் கொண்டு கோலங்களை வரைந்து பிறகு இந்த கோலங்களை பொது கணிதத்தில் (General Mathematies) உபயோகபடுத்துவது என்ற இவரதுக் கோட்பாட்டை, தனது 10 வருட அரிய முயற்சியினால் அகில உலக பத்திரிகைகளும் பாராட்டும்படி செய்திருக்கிறார். அதையே "ரொபாடிக்ஸ்" என்ற முறையில் அமெரிக்காவில் தருகிறார்கள் என்கிறச் செய்தி இவரது இமாலயசாதனைக்கு ஓர் எடுத்துக்காட்டு. மேலும் இது-பற்றி விளக்க உரை கொடுக்க இவரை மீண்டும் இந்த வருடம் டிசம்பர் மாதம் அமெரிக்க அரசாங்கம் அழைத்திருப்பது இவரத சாதனைகளில் பதித்த வைரம் என்றே சொல்லலாம்.

இவரிடம் உரையாடி விட்டு திரும்பிய போது சிறந்த பேராசிரியை, குறிப்பாக நாட்டிற்கு பெருமை சேர்க்கும் ஒரு பெண்மணியிடம் அளவளாவி விட்டு திரும்பிய பூரிப்பான அனுபவ

– மாலதி சந்திரசேகர்

# சுத்த மனிதன்

**ப்ரஸன்ன ராமஸ்வாமி**

இன்று மின் வண்டியிலிருந்து இறங்கி வீடு திரும்பும் போது நினைவாக ஒரு கிலோ வெங்காயம் வாங்கிப்போக வேண்டும். நாளை சரவணன் வேலைக்குப் போய்விடுவான். பயமில்லாமல் நிறைய பருப்புக்குழம்பு வைத்து அவர்களுக்குக் கொடுக்கவாம் என்று எண்ணும்போதே ஒரு வாரமாய்த் தான் படும் வேதனை நினைவுக்கு வர

,ம்' என்று முவங்கிக் கொண்டாள்.

"என்ன சுகந்தி பெருமூச்சு பலமாயிருக்கு. புருஷன் நெனப்பா?" என்று கண்சிமிட்டி சிரித்த படியே திலகா சுகந்தியின்டப்பாவிலிருந்துஒருஉருளக் கிழங்குத்துண்டை எடுத்து வாயிலிட்டுக் கொண்டாள்.

" நீங்க ஒரு பக்கம்! நா எதையோ நெனைச்சிட்டிருக்கேன்!" என்று அலுத்து கொண்டவளை, "என்னுதான் விசியம்?" என்று எஸ்தர் நிமிண்டினுள்.

"ஏங்கவீட்ல ஒரு வாரமா கட்டடவேலை நடக்குதுன்னு சொன்னேனில்லே. "ஆமா அதுக்கென்ன இப்போ? போன வாரம் மேல்பார்வை பார்க்கணும்னு ரண்டுநாளைக்கு லீவு போட்டாயே! திரியும் போடணுமாக்கம்?" என்றபடி எழுந்து போய்க் கை கழுவி வந்தாள் எஸ்தர்.

"அந்த ஆட்களை என் ஹஸ்பன்ட் ட்ரீட் பண்றவிதம் எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு! மனுஷத்தன்மையே இல்லாமே சதா அவங்களை வெரட்டிக்கிட்டும் திட்டிக்கிட்டு திரியறது ஏதோ மெஷின் மாதிரி அவங்க வேலை செய்யணுமனு...

.நினைக்கிறதும் சகிக்கலே," என்று அடங்கி குரலில் பதிலிறுத்தாள் சுகந்தி.

ஏதோ பெரிய ஹாஸ்யத்தை கேட்டு விட்டது போல விழுந்துவிழுந்துசிரித்த தோழிகளை வியப்புடன் பார்த்தாள் சுகந்தி.

"பின்ன? கூலி கொடுத்து அமர்த்தின ஆட்களை உக்காத்தி வச்சு உபசாரமா பண்ணுவாங்க?" என்ற திலகாவைத் தொடர்ந்து, "ஊர்ல ஒவ்வொருத்தி புருஷன் குடிக்கும், ரேஸுக்கும் செலவ ளிச்சுகிட்டு காசழிக்கிறுன். எதுனு கேட்டா அடிச்சு நிமித்துறுன்! நீ என்னவோ இதப்போய் ஒருகுறையா சொல்றயே,, என்று முகவாயில் கை வைத்து அதிசயித்தாள் எஸ்தர்.

* * *

மறுநாள் மத்தியானம் ராணி, முனுசாமி, மோகன், பாலம்மா நால்வரும் சுகந்தியின்வெங்காயசாம்பாரை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்த போது அசம்பவிதமாக திடுதிடுவென்ற ஒலியுடன் சரவணனின் மோட்டார்பைக் கேட்டைத் தாண்டி உள்ளே வருவதை ஒருவித கிலியுடன் பார்த்துக்கொண்டு நின்றுள் சுகந்தி." மத்தியான வேலைய கொஞ்சம் செஞ்சுட்டு பர்மிஷன்னு பேர் வச்சு வந்திட்டேன். ,, என்று சொல்லியபடியே உள்ளே நுழைந்தவன் பின்புற மரத்தடியில் அவர்கள் சாப்டுவதை அப்பொழுதுதான் கவனித்தான்.

"என்னு? சாப்பாட்டுக்குன்னு உட்கார்ந்தா எந்திரிக்கவே மாட்டீங்களே! காலைவராதே பத்து மணிக்கு பின்னே டீ, வெத்தலை, பீடி சாப்பாடுன்னு நாள் முழுக்க உட்கார்ந்தே கழிச்சிடுவீங்களே!"

பெருங்குரலெடுத்து சத்தமிட்டவன் முகத்தின் கடுகடுப்பு மாறுமல் சுகந்தியின் பக்கம் திரும்பி "உனக்கு சாமர்த்தியமே பத்தாது. உன்னை லீவு போட்டு வீட்ல இருக்கச் சென்னதுலே லீவும் வேஸ்ட், வேலையும் ஒழுங்கா நடக்கலே," என்றபடியே பாத்ருமுக்குள் நுழையவும், பாலம்மா இவள் சாம்பார் கொடுத்த பாத்திரத்தை கழுவி எடுத்துக் கொண்டு உள்ளே வரவும் சுகந்தியின் உயிர் அவளை விட்டு மெல்ல மெல்ல பிரியும் குறி காட்டியது.

"என்னு? பாத்ரத்துலே என்ன கொடுத்தே?" என்று பாய்ந்தவனிடம் "ஒண்ணுமில்லை. தண்ணி" என்று மழுப்ப முயன்றவளை மலர்ந்த சிரிப்புடன் இடைவெட்டினுள் பாலம்மா,

"ஒரு நாளைக்கி நல்லா சாப்பிடட்டுமேன்னு கொளம்பு வெச்சுக் கொடுத்தது மகராசி. ஐயா புண்ணியத்தலே. அவளை முடிக்கக் கூட விடவில்லே, சரவணன் பாய்ந்தான் "அழகாயிருக்கு நீ குடித்தனம் செய்யற லட்சணம் ம்...ம் ...ம்" தொடர்ந்து ஏச வார்த்தைப் பஞ்சம் வந்து கோபத்தில் தடுமாறினான்.



''உனக்கு என்ன தராதரமே இல்லாமப் போச்சு! அன்னிக்கானு பொட வயக்குடுத்தே! இன்னிக்கு சாப்பாடு போட்டிருக்க! கண்ண மூடிக்கிட்டு செலவு பண்ணுவ போல் இருக்கே. ஒரு தராதரமே புரியலேயே! கூலிக்காரங்கள வேலே வாங்கவும் தெரியலே, வீட்டு ஜாமானேயும் ஒழிச்சுடுவே போல இருக்கே! ஏதேது" என்று உறுமியபடியே வேலே நட்ந்து கொண்டிருந்த பின்னறைக்கு விரைந்து சென்று நின்றான்.

சுகந்திக்கு பொங்கிப் பொங்கி வந்தது. இந்த மூகத்தையா மோகித்து அப்படி மயங்கினேம். சீ! என்று வந்தது. தன் உடம்பிலேயே பூச்சி ஊர்வது போல் உணர்ந்தாள்.

இப்படித்தான் நாலு நாளேக்கு முன்பு தண்ணீர்க் குடத்தோடு படியேறி வந்த ராணி கால் சறுக்கிக்குடத்தோடு விழுந்தாள். அவர்கள் வேலே செய்கிற அறையை ஒட்டியே தண்ணீர் குழாய் இருக்கிறது. அது கார்ப்பரேஷன் தண்ணி. கரண்டில் மோட்டார் ஓடி டாங்கியில் ரொம்பினது. அதை எடுத்து செலவு பண்ணக் கூடாது. அப்புறம் புழக்கத்துக்கு காணுது. கிணத்தில் இறைச்சுத்தான் வேலேக்கு எடுக்கணும் என்று அவன் உத்தர விட்டிருந்தான். "இருக்கிறது நாம ரெண்டுபேர். தண்ணி எப்படீங்க காணுமப்போகும்? உங்க கணக்குப் படியே பார்த்தாலும் இங்கயே தண்ணி எடுத்துகிட்டா அந்த நேரம் வேலே நடக்குமே" என்று சுகந்தி எவ்வளவோ மன்றாடியும் அவனே இணங்க வைக்க முடியவில்லே.

நல்ல வேளேயாக பலத்த காயம் படாமல் தப்பித்து விட்டாலும் சொட்டச் சொட்ட நனேந்து விட்டாள் ராணி. உள்ளேயிருந்து தன்னுடைய பழைய சேலே ஒன்றைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்து உடுத்தச் செய்தாள் சுகந்தி.

அன்று மாலே தேய்த்த பாத்திரங்களே அவள் துடைத்து அடுக்கிக் கொண்டிருந்த போது சரவணன் தூங்கி எழுந்து காப்பிக்காக வந்தவன், "கண்ணம்மா வரலேயா என்ன? நீ தேய்க்கறயே!" என்றுன்.

'ம்' என்றபடியே மௌனமாகப் பாலே வைத்து அடுப்பை மூட்டினுள்.

''கழுதைக! எப்ப லீவு போடலாம், எதச் சொல்லி அட்வான்ஸ் வாங்கலாம்னு காத்திட்டிருக்குமே" என்றவனே உஷ்ணம் தெறிக்கப் பார்த்தபடி "அவ பொண்ணு பிரசவிச்சிருக்கா, நேத்து மத்யானம் கொழந்தைபெத்தா! நாளக்கி வேலேக்கு வருவா" என்று உரத்த குரலில் பதில் சொல்லிய படி "வேலேக்கு வரவங்களுக்கும் சுக துக்கம், வலி, நோக்காடுன்னு உண்டுன்னு இந்த மனுஷனுக்குப் புரியவே புரியாது போல இருக்கு" என்று அடங்கிய குரலில் முணுமுணுத்தாள். என்னதான் தாழ்ந்த குரலாலுைம் அந்தச் சின்ன சமையலறையிலேயே நின்றவனுக்கு அது நன்றுகவேகேட்டது. சடாரென்று திரும்பியவன் வலிக்கும்படியாக அவள் தோளேத் திருப்பி "என்ன, வர வர ஒரு கம்யூனிஸ்டாட்டம் பேசற நீ? என்றுன் கடுமையாக. அந்த வார்த்தையை அவன் ஏதோ ஒரு வசவு போல உபயோகித்தான். ஒன்றும் பதில் சொல்லாமல் பாலே இறக்கி காபி கலந்தாள்.

இரவுச் சாப்பாடு மௌனமாகவே நடந்தேறியது. தடதடவென்று கேட்டின் தாழ்ப்பாளே உலுக்கும் சப்தம் கேட்டு முதலில் விழித்துக் கொண்டவள் சுகந்திதான். கேட்டருகில் நான்கைந்து பேராக நிற்பதைப் பார்த்தவள் சரவணனே உலுக்கி எழுப்பிவிட்டு தூக்கக் கலக்கம் முற்றிலும் விலகாமலே கதவைத்திறந்து வெளியே வந்தாள். கூச்சலும், குழப்படியான இரச்சலும்செவிப்பறையைத் தாக்க கூர்ந்து கவனித்தவள் வெளிச்சம் குடிசைப்பகுதியிலிருந்து வருகிறது என்று புரிந்து கொண்டாள். இதற்குள் இவள் பின்னுலேயே வந்த சரவணன் "அடடா நெருப்புபுடிச்சு கிச்சு!" என்றபடியே கேட்டின் பூட்டைத் திறக்கவும் கண்ணம்மாவும், அவள் மகளும் கையில் துணிச்சுருளாய் ஏந்திய சிசுவுடன் உள்ளே வந்தனர்.

அழுகையும், புலம்பலுமாய் மூட்டை முடிச்சுகளுடன் ஜனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

கண்ணம்மா அழுகை வெடிக்கும் பயக்குரலில் "யம்மா எல்லோரையும் இஸ்கோலுக்கு இட்டுகினு போருங்க, நேத்து குளிகுளிச்ச பெண்ணே அம்மாந் தொலவு எப்படிம்மா இட்டுகினு போவேன்? இந்த நடுராவுல ரிக்ஷாக்கு ஏங்க போவேன்? எனக் கொண்ணும் புரியலேயே" என்று குமுறினுள். சுகந்தி வாய் திறக்குமுன் சரவணன் முந்திக் கொண்டான்.

"அடஉள்ள வாம்மா. உம்பொண்ணு குழந்தய வச்சிகிட்டு இங்க இப்படி வராண்டால இருங்க இல்ல" என்று கூறி சுகந்தியின் பக்கம் திரும்பி "சுகந்தி அந்த பின்னுடி புது ரூமைத் தொறந்து விடு அங்கயானும் இருக்கட்டும்" என்றபடி கேட்டை பூட்டினுன்.

உள்ளே போய் கால் கை கழுவிவிட்டுப் படுக்கை க்குப்போனுன். பேரக்குழந்தைக்கும் பெண்ணுக்கும படுக்கைவிரிப்பதில் ஈடுபட்டிருநத கண்ணம்மா சுகந்தியின் முகமாறு தலே கவனிக்கவில்லே. நீயும் போய்ப்படும்மா என்று அவள் நிமிர்ந்து பார்த்துச் சொன்னதும் திடிரென்று விழிப்பு வந்தவள் போல் முனகிச் சிரித்தபடி சுகந்தி உள்ளே போனுள்.

# சுமைதாங்கி

என் நெருங்கிய சிநேகிதி ராணி. நன்றாக படித்து வேலேக்குப் போக மிகவும் ஆசைப் பட்டாள். அவள் பெற்றேர் அவளேப் புரிந்து கொள்ளவில்லே. கிராமத்து பெண்ணென அவள் வீட்டிலும் வயலிலும் கடுமையாக வேலே செய்ய வேண்டியிருந்தது. தேர்வு நாட்களிலும் கூட அந்த வேலேகளே அவளே செய்ய வேண்டுமென்று அவள் அம்மா கண்டிப்பு காட்டினுள். இத்தனே கஷ்டங்களுக்கு நடுவில் படித்து தன் முயற்சியில் கல்லூரியிலும் சேர்ந்தாள் ராணி. அவள் பெற்றேர் விடுதியில் தங்கிப்படிக்க அனுமதிக்காமல் உறவினர் வீட்டில் விட்டு வைத்தார்கள். அங்கே மின்சார வசதி கிடையாது. மண்ணெண்ணே விளக்கில் படிப்பை தொடர்ந்தாள். ஆனுல் அந்த வீட்டுச் சொந்தக் காரரின் குடிப்பழக்கம் அவளுக்கு பெரிய சோதனேயாக இருந்தது. தொல்லே தாங்க முடியாமல் படிப்பை நிறுத்தி விட்டு வீட்டுக்கே வந்து சேர்ந்தாள். வசதியான அவள் பெற்றேர் அவளே சும்மா வீட்டிலிருக்க விடாமல் வயலில் வேலே செய்ய வற்புறுத்தினுர்கள். தங்கள் வயலில் மட்டுமில்லாமல் பிறர் வயல்களிலும் வேலே செய்து சம்பாதிக்க கட்டாயப் படுத்தினுர்கள். தன் படிப்பார்வம் பகற்கனவாகிப் போனதாலும் பெற்றோரின் மனப் போக்காலும் வெறுப்புற்ற ராணி மனம் நொந்து தற்கொலே செய்து கொண்டாள். ஆனுல் ஊரார் அவள் இறப்புக்கு பல கற்பனே கதைகளே கட்டிவிட்டு வம்பளந்தார்கள், ராணியின் படிப்பார்வம், அதற்கு அவள் பட்ட கஷ்டங்கள், அதனுல் ஏற்பட்ட விரக்தி இவையெல்லாம் நன்றாக தெரிந்த எனக்கு இந்த சமுதாயத்தை நினேத்தால் மனம் ரணமாக வலிக்கிறது. ஒரு இளைஞன் தற்கொலே செய்து கொண்டால் வேலே கிடைக்கவில்லே, வறுமை என்று தான் காரணம் கற்பிக்கிறுர்கள். ஆனுல் ஓர் இளம் பெண் தற்கொலே செய்து கொண்டால் என்னென்ன பழி சுமத்துகிறுர்கள்.

சாவு கூட இவர்கள் மனதை நெகிழ்த்த முடியாத போது வேறு எதற்குதான் இந்த கல் நெஞ்சங்கள் கசியுமோ.

-சுதா.

எங்கள் வீட்டில் அம்மா, அக்கா நான் மூவர் தான். ஆண்கள் யாரும் இல்லாததால் எங்களின் சொந்த முயற்சியினுலேயே படித்து வருகிறேம். எனது அக்காவிற்கு நர்ஸ் பயிற்சிக்காக இருப்பிட சான்றிதழ் தேவையாக இருந்தது. எனவே நான் தான் அதை வாங்க வேண்டிய சூழ்நிலே. ஈ வட்டாட்சி அலுவலகத்திற்கு சென்று ஒரே நாளில் வாங்கி விடலாம் என்று எண்ணினேன். ஆனுல் அங்கு சென்ற பிறகுதான் சர்டிபிகேட் வாங்குவதில் இருக்கும் பிரச்சனேகள் தெரிய வந்தது. ஒரு நாள் ஒருவாரம் ஒரு மாதம் என்று நாட்கள் கடந்தன. சர்டிபிகேட் சென்று சேர்வதற்கு கடைசி நாளும் நெருங்கியது. எனவே காத்திருந்தது போதும் என்று நினேத்து அலுவலக பணியாளரிடம் சென்று விசாரித்தேன், அந்த பணியாளர் கூறியது என் மனதில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. "நல்லா டிரஸ் பண்ணிக் கொண்டு அழகான ஒரு பெண் வந்தால் சீக்கிரமாக சர்டிபிகேட் கொடுத்து அனுப்ப மனசு வராது" என்று அந்த பணியாளர் கூறியது என்னே மிகவும் பாதித்தது. பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்றும், எல்லா காரியங்களேயும் அவர்களே செய்ய வேண்டும் என்றும் ஒரு பக்கம் கூறும்போது அதனே செயலாக்க எடுக்கப்படும் முயற்சிகளில் இப்படிப் பட்ட பேச்சுகள் கேட்க வேண்டியதாக இருக்கிறது. மன சுமைகள் நடையை தளரவைத்தாலும், ...முன்னேற இப்படிபட்ட எண்ணங்கள் தோன்ற காரணமாய் அமைந்த அந்த நிகழ்ச்சியை தங்கத்தின் மீது விழும் அடியாகவே எண்ணுகிறேன்.

-வனரேகா.

# பூ வா?



"நகரில் ஒரு வித்தியாசமான படம் வந்திருக்கே... இன்னும் பார்க்கலையா? சீக்கிரமா பார்த்துருங்க, இந்த மாதிரி படங்கள் ரொம்ப நாள் ஓடறதில்லே," என்று பலரும் சொன்னார்கள்! அவர்கள் குறிப்பிட்ட படம், "பூ ஒன்று புயலானது!"

நமது சமுதாய சீர்கேடுகளை, அதிகார துஷ்பிரயோகங்களை அப்பட்டமாகக் காட்டும் சில படங்கள் அவ்வப்போது வரும்! இது அந்தவகையில் இன்னும் ஓர் சாட்டையடி!

ஊரையே வளைத்துப் போட்டுதான் எண்ணியதை செய்து முடிக்கும் சர்வ வல்லமை படைத்த ஒரு ரௌடி. அவனுக்குப் பலம் அரசியல் பின்னணி! இந்த கதாநாயக வில்லன் காளியை எந்த விதத்திலும் காட்டிக் கொடுக்க அஞ்சும் பயமுறுத்தப்பட்ட (terrorised) ஊர் மக்கள்! அந்த ஊரைச் சேர்ந்த வக்கீலை மணந்து புதிதாக குடிவரும் கதாநாயகி ஜான்ஸி, கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றுகிறாள்.

பெண்கள் என்றால், சக மாணவியானாலும் சரி, பாடம் சொல்லித்தரும் ஆசிரியரே ஆனாலும் சரி, அவர்களை கேலி செய்வதையே லட்சியமாகக் கொண்ட ஒரு சில மாணவர்கள்! காளிக்கு மிகவும் வேண்டியவர்களான இவர்களிடம் கல்லூரி முதல்வரே பயப்படுகிறார்.

"இத்தனை பிரச்சனைகளுக்கும் காரணமான அந்த ரௌடியை உங்க இலாகாவிலே இன்னும் விட்டு வெச்சிருக்கிங்களே?" என்ற ஜான்ஸியின் கேள்விக்கு விடையாகி, தானே அவனைக் கைது செய்து, அதனால் பட்டப் பகலில் நடுரோட்டில் அவனால் குத்தி கொலை செய்யப்படுகிறான் இளம் போலீஸ் அதிகாரி பிரகாஷ்.

அந்தக் கொலையைப் பார்த்த அத்தனை பேரும் சும்மாயிருக்கும்போது ஜான்சி மட்டும் துணிந்து போலீஸில் புகார் தருகிறாள். அந்தப் புகாரை ஏற்கத் தயங்கும் போலீஸ் அதிகாரி! "புகாரை வாபஸ் வாங்கினால்தான் நீ என் மனைவியாக இருக்கமுடியும்" என்று கட்டாயப்படுத்தும் கணவன். கண்ணீர் வடிக்கும் மாமனார்; மாமியார்! ஆனால் புகாரைத் தன் செல்வாக்கால் திரும்பப் பெற்ற காளி ஜான்ஸியை பழி வாங்க வருகிறான். விளைவு? பலபேர் முன்னிலையில் அவளை தலைமுடியைப் பிடித்து இழுத்து துகிலுரிகிறான். இந்த நவீன பாஞ்சாலியைக் காப்பாற்ற எந்த கிருஷ்ண பரமாத்மாவும் வரவில்லை. கணவன் கையாலாகாத்தனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறானே தவிர தடுக்க ஒரு சின்ன முயற்சியும் செய்யவில்லை.

ஏற்கனவே காளியால் பாதிக்கப்பட்டு, கணவனை இழந்த நாகம்மா ஜான்ஸிக்கு தன் வீட்டில் இடம் தருகிறாள். காளி கைலியிலிருந்து கதருக்கு மாறி தேர்தலில் போட்டியிடுகிறான்; யாருமே எதிர்பார்க்காத வகையில், தானே வலியச் சென்று அவனுக்காக தேர்தல் பிரசாரம் செய்கிறாள் ஜான்ஸி! முறையற்ற தேர்தலில் வெற்றி பெற்று, விழாக் கோலாகலத்தில் இருக்கும் காளியை அவனது கட்சி சின்னமான கோடாலியைப் பரிசு தருவதாகக் கூறி திடீரென்று அதனால் அவன் மண்டையைப் பிளந்து பழி தீர்த்துக் கொள்கிறாள் ஜான்ஸி.

தெலுங்கு மக்களுக்கு எப்போதுமே பக்தி உணர்வு அதிகம்! இந்தப் படத்தில் திரௌபதியையும், மகிஷாசுரமர்த்தினியையும் நவீனப்படுத்திக் காட்டியிருப்பது புரிகிறது!

கல்லூரி மாணவர்களின் கலாட்டாவும் மிகையாகத் தெரியவில்லை, அவர்களுக்கு ஜான்ஸி தரும் பதில்களில் நல்ல ஆழம்!

பெண்களில் தன் தாய், சகோதரி, மகள் ஆகியோரைத் தவிர மற்ற பெண்களை வெறும் "செக்ஸ் ஸிம்பலாகப்" பார்ப்பது ஆண்களிடம் ஊறிவிட்ட ஒரு குணம்! "நிர்வாணமா இருந்தா நான் மட்டுமில்லே; உங்க தாய், சகோதரி எல்லோருமே இப்படித்தான் இருப்பாங்க" என்ற ஜான்ஸியின் வாதம் ஒரு புதிய கோணம்!

காளியின் கதாபாத்திரம் ஏதோ பெண் இனத்துக்கே எதிரானவன் என்பதுபோல் இல்லை. பொதுவான ஒரு சமுதாய எதிரியாகக் காட்டுகிறார்கள். அரை குறையாய் உடுத்தியிருக்கும் பெண் ஒருத்தி குலைந்துகொண்டு கோப்பையில் மது ஊற்றிக் கொடுக்கும் வழக்கமான வில்லன் அம்சம் இல்லாதது வித்யாசம்தான் என்றாலும், ஒரு ஆணைப் பழிவாங்க வேண்டுமானால் அடித்து வதைத்து கொன்று போடுவது சித்ரவதையின் உச்சகட்டம் என்றும், பெண்ணைப் பழிவாங்க வேண்டுமென்றால் மானபங்கப்படுத்தி சமுதாயத்தின் கேலிக்கும், கண்டனத்துக்கும் ஆளாக்குவதே பெரிய தண்டனை என்றும், காலம் காலமாக நிலவி வரும் சமுதாய நோக்கை பிரதிபலிப்பவனாகத்தான் இருக்கிறான். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை.

"நான் செத்தாலும் நீ பொட்டு வைத்துக் கொள்! காளியைப் பழி வாங்கு" என்று மனைவியிடம் சொல்லி விட்டுச்சாகும் நாகம்மாவின் கணவன் பாத்திரமும் வித்தியாசமானது!

"இத்தனை அராஜகம் நடக்கும் அந்த ஊரில் ஒரு எதிர் கட்சி அமைப்பு கூடவா இல்லை" என்ற நமது கேள்விக்குப் படத்தில் விடை இல்லை.

இது போன்ற படங்களை எடுப்பவர்கள் சரியான முடிவைத் தருவதில் தடுமாறிப் போகிறார்கள். இந்தப் படமும் இதற்கு விதிவிலக்கு அல்ல, ஒரு தனி நபரின் மரணம் எந்தப் பிரச்சனைக்கும் தீர்வாக முடியாது. இந்த காளி போனால் நாளை மீண்டும் ஒரு காளி தோன்ற வாய்ப்புகள் உண்டு. அந்த ஊரார் எல்லோரும் விழிப்புணர்ச்சி பெற்று அவனைத் தண்டிப்பதாகக் காட்டியிருந்தால் அது சமுதாய மாற்றத்தை உணர்த்தியதாக இருந்திருக்கும்.

இத்தனை பெரிய விஷயத்தைச் சொன்னவர்கள் தலைப்பில் தடுமாறியிருக்கிறார்கள். பெண்ணை 'பூ'வாக உருவகப்படுத்தி மென்மைத் தன்மையை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜான்ஸியின் சிறுமை கண்டு பொங்கும் இயல்பு பல கட்டங்களில் அவள் கணவனால் மெச்சப்படுகிறது. பிறகு ஏன் அவளை 'பூ' என்று வர்ணித்து நம் காதில் பூ சுற்றவேண்டும்?

சமுதாய கண்ணோட்டத்துடன் எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்திற்கு கிடைத்திருக்கும் வரவேற்பையும் சொல்லியாக வேண்டும். ஆரூர்தாஸின் வசனங்களுக்கு கிடைக்கும் கைதட்டல்கள், மக்களின் ரசனை கொஞ்சம் உயர்ந்திருப்பதைக் காட்டுவதாயிருந்தால் நமக்கும் பெருமைதான்!



திருமதி கௌரி: பஸ்ஸில் யாராவது ஆண்கள் வேண்டுமென்றே இடித்துவிட்டால், "நீ அக்கா, தங்கச்சியோட பிறக்கலியா" என்று சில பெண்கள் கேட்பதைப் பார்த்திருக்கிறேன், இந்தப் படத்தில் அதே கருத்தை விளக்கமாக சொல்லியிருப்பது எனக்கு மிகவும் பிடித்தது. இதற்கு முன் எந்தப் படத்திலும் இந்தப் பிரச்சனையை இம்மாதிரி அணுகியதாகத் தெரியவில்லை.



திரு. ஏ. எஸ். கண்ணன்: சமுதாயத்தில் சமூக விரோத சக்திகளின் பலத்தையும், இளைஞர்களில் ஒரு பகுதியினரின் தவறான போக்கையும் நன்றாகவே படமாக்கியிருக்கிறார்கள். துணிச்சலான இந்த முயற்சியை பாராட்டத்தான் வேண்டும். நறுக்கான வசனங்களை ஜனங்கள் ரசித்துப் பார்க்கிறார்கள் என்பது அவர்களின் ரசனை உயர்வையும் சமூக பிரக்ஞையையும் காட்டுவதாக ஆகாது. ஏனென்றால் நம்ம ஜனங்கள் சினிமாவை வெறும் சுவாரஸ்யமான கதையம்சமாகப் பார்த்து ரசிப்பதுடன் சரி. தங்களின் அன்றாடப் பிரச்சனையைத்தான் இந்த படத்தில் பிரதிபலிக்கிறார்கள் என்பதெல்லாம் பெரும்பாலானவர்களுக்கு தெரிவதில்லை.

## இவர்கள்



திருமதி அன்னபூரணி: எந்த ஒரு கொடுமைக்காரனுக்கும் ஒரு முடிவு உண்டு, தவறு செய்பவன் அதற்கான தண்டனையை அடைந்தே தீர வேண்டும் என்றுதான் இந்தப் படமும் சொல்கிறது. அதிலும் ஒரு பெண் தான் பாதிக்கப்படும்போது, கலங்காமல் துணிந்து நின்று யாரையும் சாராமல் தானே அவனைத் தண்டிப்பது படத்தின் சிறப்பான அம்சம்! பல பெண்களுக்கு தன்னம்பிக்கையைத் தரும் விஷயம் இது. கதாநாயகி காளிக்காக பிரச்சாரம் செய்யப் புறப்படும் போது. ஏதோ ஒரு பெரிய முயற்சிக்காக. தந்திரமாகச் செயல்படுகிறாள் என்பது முன்கூட்டி நமக்கே புரியும்போது, காளிக்கு புரியாமல் இருப்பது நம்பும்படியாக இல்லை.

## விமர்சிக்கிறார்கள்



நாதமுனி: மானபங்கப்படுத்துவது என்பது ஒரு பெண்ணுக்கு மரணத்தை விடப் பெரிய தண்டனை. நமது சமுதாய அமைப்பு அப்படி. பொறுப்பில்லாத அச்செயல் தன்னை மீறி நிகழும்போது அதனால் ஏற்படும் அவமானத்தை அலட்சியமாக்கி, கலங்காமல் தீவிரமாக கதாநாயகி முடிவெடுப்பதைப் பாராட்ட வேண்டும்.

— பாரதி

# புயலா?

அங்கயற் கண்ணி

"ராஜ் நீ அந்த ரகுநாதன் கிட்ட பழகுவது கொஞ்சம் கூட நல்லா இல்லே. ஊருலவுள்ளவங்க என்ன நினைப்பாங்கன்னு கொஞ்சமாவது யோசனை பண்ணியா? இனிமேல் அவனோடு பழகுவதை நிறுத்திடு." அப்பா சொல்லிவிட்டு விடுவிடுவென்று வெளியே போய் விட்டார்.

'ஏன் அப்பாவிற்கு ரகுவோட பழகறது பிடிக்கலே! அம்மா ஏதாவது சொல்லியிருப்பாளோ?'

ஓ! ரகு எத்தனை நல்ல சிநேகிதன்!

ஆறு மாதத்திற்கு முன்பு வரை இவன் எதிர் வீட்டில் இருப்பது கூட எனக்குத் தெரியாது.

ஒருமுறை எங்கள் கல்லூரியில் கவிதைப் போட்டியில் நான் முதன் முதலாக கலந்து கொண்ட போது தான் ரகுவை சந்தித்தேன்.

அன்று 'அறியாமையின் அவலங்கள்' என்ற தலைப்பு கொடுத்திருந்தார்கள். பல கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். ஆனால் காலேஜ் ஆடிடோரியம் காலியாக இருந்தது. 'இந்த காலேஜ் பெண்கள் தமிழில் ஆர்வம் இருக்கிறது என்றாலே அவமானம் என்பது போல் நடந்து கொள்கிறார்கள்!' தமிழ் நிகழ்ச்சிகள் கல்லூரியில் நடந்தால் அன்று ஆடிட்டோரியம் காலியாகத்தான் இருக்கும். அதிலும் 'கவிதைப்போட்டி' என்றால் கேட்கவே வேண்டாம் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஐம்பது பேர் கூட இருக்க மாட்டார்கள்.

கவிதை வாசித்தவர்கள் காலேஜ் ஆடிட்டோரியக் காலியை கவிதைகளால் கமெண்ட் அடித்தபோது ரொம்ப வெட்கமாய் இருந்தது.

"ஆர். ராஜேஷ்வரி"

என் பெயர் அழைக்கப்பட்டவுடன் எழுந்தேன். புடவையை சரி செய்துக் கொண்டேன். மெள்ள மேடையேறி மைக்கை என் வாய்க்கு நேரே சாய்த்துக் கொண்டேன். தொண்டையை கனைத்துக் கொண்டு மெள்ள கவிதையை வாசிக்கத் தொடங்கினேன். குரலை கவிதைக்குத் தகுந்தபடி ஏற்றி, இறக்கி வாசித்தேன். ஆங்காங்கே யாரோ கைத்தட்டினார்கள். உற்சாகமாக இருந்தது.

ஓ காட்! எனக்கு இரண்டாவது பரிசு!

நான் இதை எதிர் பார்க்கவில்லை. நான் இதுவரை மேடையேறி கவிதை வாசித்ததில்லை. ஏதோ டைரியில் எனக்குத் தோணியதை எழுதி வைப்பேன். அவ்வளவுதான். அதை என் ப்ரெண்ட் சுகந்தி பார்த்து விட்டு, என் பெயரைக் கொடுக்க, ஏதோ ஒரு தைரியத்தில் நான் வாசிக்க, எனக்கு ப்ரைஸ் கொடுத்தார்கள். எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருந்தது. என் க்ளாஸ் மேட்ஸ் 'கங்கிராட்ஸ் யா!' என்றார்கள்.

மனது முழுவதும் மகிழ்ச்சி நிறைந்திருக்க வெளியே வந்தேன். 'விஸில்' அடிக்க வேண்டும் போல் இருந்த ஆசையை அடக்கிவிட்டு வாசலில் உள்ள பஸ் ஸ்டாப்பில் நின்றுக் கொண்டேன்.

"மிஸ் ராஜேஷ்வரி நீங்கள் ஞாபகம் வைத்திருக்கிறீர்களா"? என்றபடி ஒருவன் அருகில் வந்தான்.

"பைதி பை என் பெயர் ரகுநாதன். எம். காம் செகன்ட் இயர் ஃபர்ஸ்ட் பிரைஸ் வாங்கின பாலகிருஷ்ணன் என் ப்ரெண்ட், அவனோடு வந்திருந்தேன்"

அன்றுதான் இந்த ரகுநாதனுடைய அறிமுகம் எனக்கு கிடைத்தது. அன்றுதான் இவன் எதிர் வீட்டில் இருப்பதும் எனக்குத் தெரிய வந்தது.

அதற்குப் பிறகு என் காலேஜ் விட்டபிறகு நானும் அவனும் சேர்ந்து லைப்ரரிக்குப் போனோம் தேடித் தேடி நிறைய பேசினோம். என் பாடங்களில் உள்ள சந்தேகங்களைத் தீர்த்து வைத்தான். எனக்கு நிறைய கற்று கொடுத்தான். நான் நிறைய கவிதைகள் எழுத காரணமானான். எனக்கு நெருங்கிய சிநேகிதமானான்.

"ரகு, என் ப்ரெண்ட்ஸ் என்ன கேட்கிறாங்க தெரியுமா?"

"என்ன கேட்கிறாங்க ராஜி?"

"நீ ரகுநாதனை லவ் பண்ணறியான்னு"

"ம்"

"அதுக்கு நான் என்ன சொன்னேன் தெரியுமா?"

"என்ன சொன்னே?"

"ஆமாம் அவனை லவ் பண்ணறேன் தான்னு" சட்டென்று நிமிர்ந்து என் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

"ஏன் அப்படி பார்க்கிறே ரகு?"

"ஒண்ணுமில்லை. அதுக்கு உன் ப்ரெண்டஸ் என்ன சொன்னாங்க ராஜி?"

"அப்ப நீ ரகுநாதனைத்தான் மேரேஜ் பண்ணிப்பியான்னு கேட்டாங்க"

"அதுக்கு நீ என்ன சொன்னே ராஜீ?" என்றான் அவசரமாய், என்னால் அவன் முகத்தின் உணர்ச்சிகளைப் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

"மாட்டேன்"

"ஏன் சொல்ல மாட்டாய்?"




"இல்லை ரகு, நான் அவங்களுக்கு சொன்ன பதிலை சொன்னேன்."

நிமிர்ந்து என் கண்களை ஆழமாக பார்த்தவாறு மெல்லிய குரலில் பேச தொடங்கினான்.

"ராஜி, நான் உன்கிட்ட தப்பான முறையில் பழகறதா நினைச்சுகிட்டு என்னை ஆழம் பார்க்கிறியா? நாளைக்கு இவன் நம்மகிட்ட வந்து லவ் லெட்டர் கொடுத்தா என்ன பண்றதுன்னு பயமா? அதனால்தான் யாரோ ப்ரெண்ட்ஸ் கேட்பதாக சொல்லி என்னை டெஸ்ட் பண்ணறியா?"

'ஓ! இவன் நான் சொன்னதை தவறாகப் புரிந்து கொண்டான். நான் உண்மையைப் பேசினால் ஆழம் பார்ப்பதாக நினைக்கிறான். 'ஐயோ! மடையா! இவ்வளவு நாள் பழகி இதுதான் நீ என்னை புரிந்துகொண்ட லட்சணமா? நீ லவ் லெட்டர் கொடுப்பாயா மாட்டாயா. என்பது கூட தெரியாமலா உன்னோடு பழகுகிறேன். அப்படியே நீ லவ் லெட்டர் கொடுத்தாலும் நான் பயபடுவேன்னு நினைக்கிறே?' இவன் கிட்டே எப்படி சொல்வது.

"உம்முன்னு இருந்தா என்ன அர்த்தம் ராஜி?"

"ஐ லவ் யூ ரகு. என்ன அப்படி பார்கிறாய்? உன்னை விரும்பாமல்... உன் மேல் அன்பில்லாமல் உன்னுடன் எப்படி இவ்வளவு நாள் பழக முடியும்? தினமும் உன்னோடு லைப்ரரி வர முடியும்? மணிக்கணக்கா உட்கார்ந்து பேச முடியும் சொல்லு. இதையேதான் என் ப்ரெண்ட்ஸ் கிட்டேயும் சொன்னேன். என்னை நம்பாம பார்க்கிறார்கள் ரகு! ஒரு ஆணை விரும்பினா, அவனை பிடித்திருப்பதாக சொன்னால் ஏன், அவனைத் தான் கல்யாணம் பண்ணிப்பியான்னு உடனே கேட்கிறார்கள்? அம்மாவை, அப்பாவை, அண்ணனை, தங்கையை, சிநேகிதியை விரும்பறதை தவறாக நினைக்க முடியுமா? அதுபோலத்தான் ஒரு பெண், ஒரு ஆணை வெறும் சிநேகிதனாகத்தான் நேசிக்கிறேன்னு சொன்னா அதை ஏன் நம்ப மறுக்கணும். ஒரு பெண்ணுக்கு கணவனைத் தவிர வேறு சிநேகிதனே இருக்கக் கூடாதா?...

.. ஏன் ரகு சித்த முன்ன நான் தப்பா பழகறதா நெனைச்சு ஆழம் பார்க்கிறியான்னு கேட்டியே? தப்பா பழகறதுன்னா என்ன ரகு? காதலிச்சு கல்யாணம் பண்ணிப்பது தப்பா! சரி அதைப் பற்றி பிறகு பேசுவோம். நம்ம விஷயத்துக்கு வருவோம். நம்ம ரெண்டு பேருக்குள்ள 'லவ்'... மேரேஜ் எல்லாம் நடக்கக்கூடிய காரியமா? உன்னை மேரேஜ் பண்ணிக்கிறது பற்றியெல்லாம் நான் நினைச்சு கூட பார்த்ததில்லை. நாம ரெண்டு பேரும் ஜஸ்ட் ப்ரெண்ட்ஸ். காதலை விட நட்புன்றது ரொம்ப சௌகரியம் ரகு. இதுல தோல்வி, பிரிவு, கவலை இது போன்ற விஷயங்களுக்கு வேலையே இல்லாம போயிடுது. நாமா ஏன் கஷ்டத்தை ஏற்படுத்திக்கணும் சொல்லு? ரகு, நான் பேசுவதை கேட்க கஷ்டமாக இருக்கா

25- பக்கம் பார்க்க

# அன்று/ அடிமைக் கல்வி

இருவரும் உடன் பிறந்த சகோதரிகள். ஒருத்தி குடும்பத் தலைவி பற்ருக்குறை வருவாய்; ஒட்டுக்குடித்தனம்; தண்ணீர் முதல் சுவாசிக்கும் காற்று வரை தட்டுப்பாடு; மூன்று குழந்தைகள்; பொருளீட்டி வரும் மமதையுடன் அதிகாரம் செலுத்தும் நாயகனான கணவன். இவனை வறுத்தெடுக்கும் அவன் பக்கத்து உறவினங்கள்; என்றும் செக்குமாடாக உழைத்து எஞ்சியதைச் சாப்பிடுவதே இல்லத் தலைவியின் இலட்சணம் என்று ஊறிப் போயிருக்கிறாள். மஞ்சள், குங்குமம், மங்கல சௌபாக்கியம் என்ற ஒரே அம்சம்தான் இவளுடைய மேன்மைக்குரிய கொடி.

மற்றவளோ, அந்தப் பேற்றை இழந்து விட்டாள். அதனால் அவளுக்குச் சராசரிக்கு மேற்பட்ட கல்வி கிடைத்தன, தொழில் புரியவும் பொருளீட்டவும் வாய்ப்புக் கிடைத்தது. இவளைப் போல் பிக்குப் பிடுங்கல் இல்லை, பொருளாதாரம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும் தொழில் மதிப்பைப் பெறுவதால், மங்களமில்லாக் குறையும் மங்கிப் போகிறது.

குழந்தைகளும் கூட, பெரியம்மா வந்தால் சாக்லேட் வாங்கித் தருவாள் என்று அவளை அண்டுகிறார்கள். கணவன், மனைவிக்குக் கொடுக்காத மரியாதையை அந்த மைத்துனிக்கு வழங்குகிறான்.

“நானும் படிக்க வைத்திருந்தால் படித்து இப்படி வேலை செய்து சம்பாதிப்பேன். இந்தக் கல்யாணம் பண்ணி என்ன சுகம்?” என்று ஒவ்வொரு சமயங்களில் தோன்றாமல் இல்லை.

ஆம், பெண்ணுக்குக் கல்வி, இயல்பாகவே அநுமதிக்கக் கூடியதாக இல்லை. அவள் வாழ்க்கையில் விபத்து நேர்ந்தாலே, அது அநுமதிக்கக் கூடியதாக இருந்தது. ஓர் ஆணைச் சார்ந்து பெண் வாழ்வதே அவளுக்கு இயல்பாக விதிக்கப்பட்ட நெறியாக இருந்தது. அந்த அண்டும் வாழ்க்கைக்கு ஊறு நேர்ந்து விட்டால், இவள் உண்டு பிழைக்க ஊதியம் தரக்கூடிய சாதனமாகவே கல்வி அளிக்கப்பட்டது. கல்வி, அறிவு மலர்ச்சிக்கு வாய்ப்பளித்து, வாய்ப்பளித்து, வாழ்க்கையின் பயனான முழுமையை இரு பாலரும் எய்துவதற்கான சாதனம் என்ற கருத்துக்கு இடமேயில்லை.

பொதுவாகவே கல்வியின் குறிக்கோள் பொருளியல் சார்ந்து விட்டதென்றாலும், பெண்ணுக்குக் கல்வி கற்பிப்பதன் நோக்கம் வேறு எதற்குமில்லை என்று தீர்ந்திருக்கிறது. பெண்ணின் கல்வித்தகுதி, மற்றும் பொருளீட்டும் திறன் எல்லாம், அவள் தன்னை அடைக்கலமாகக் கொடுக்க ஓர் ஆணைத் தேடுவதற்கும் இன்றியமையாத சாதனங்களாகி விட்டன!

பண்டு பண்டு, உலகெங்கிலும் நிலவிய அடிமைச்சந்தை வாணிபம், தமிழ் நாட்டிலும் இருந்ததாம். சான்றாகப் பல கல்வெட்டுக்களும் ஓலைகளும் கிடைத்துள்ளன.

‘கொள்வாருளரோ! கொள்வாருளரோ!’ என்று பொது இடத்தில் அடிமையின் பெயரையும் தகுதிகளையும் உரத்துக் கூவுவார்களாம். இத்தகைய அடிமைச் சந்தையில், அதிகமாக விற்பனைக்கு உரியவர்களாகப் பெண் அடிமைகள் தாம் கூவப்படுவார்களாம். ஏனெனில், வேற்று நாடுகளில் இருந்தாற் போன்று தொழிற்களங்களில் அடிமைகளைக் கொள்ள இங்கு ஏற்பட்டிருக்கவில்லை. பெண் அடிமைகள், செல்வர் வீடுகளில், உடலுழைக்கவும், போகப் பொருளாக அநுபவிக்கப்படவும் பயன்பட்டனர் என்று அறிகிறோம். ‘கொள்வோம், கொள்வோம்’ என்று வாங்குபவர் முன் செல்ல, விலை நிர்ணயம் செய்யும் நடுவர் குறுக்கிட, வாணிபம் நடந்ததாம்.

ஆனால்' இந்நாளையக் கல்யாணச் சந்தையில், இந்த அடிமை முறையை விஞ்சும் வகையில், கொள்வோருக்கு மேலும் பொருள் கொடுக்கும் முறையே உயர்ந்து போயிருக்கிறது. பெண்ணின் கல்வித் தகுதியும் வீட்டுக்கு வெளியே சென்று அவள் பொருளீட்டி வரும் சிறப்பும் கூடத் தனித்த மதிப்புப் பெறாமல், சாயத்தில் குழம்பிய பூக்களாகப் போகின்றன.

கல்விக்குரிய தேவதையே பெண் வடிவினள் என்று இன்றும் பெண் மக்களுக்கு உச்சி குளிரப் பூச்சூட்டப் படுவதில் குறைவொன்றும் இல்லை. ஆனால் ருக்வேத காலத்தில் பெண்ணுக்கு எத்தகைய கல்வி எப்படிப் பயிற்றப்பட்டது!

நால் வருணம் தோன்றியிராத காலம் அது' ஒவ்வொரு குடும்பமுமே மக்களுக்குக் கல்வியை அளிக்கும் நிறுவனமாக இயங்கியது என்றால் தவறில்லை. ஆண் குழந்தைகளைப் போன்று, பெண் குழந்தைகளும் ‘உபநயனம்’ செய்விக்கப் பெற்று, பிரும்மசாரியம் காக்கும் கல்விப் பயிற்சி காலத்தை நிறைவேற்றினர். ‘உபநயனம்’ என்ற சொல்லுக்கே, இன்னொரு கண்ணை அளித்தல் என்ற பொருள் இசைகிறது. இந்தச் சடங்கில், மாணவர், குருவை நாடித் தனக்கு மேலான கல்வியை அளித்துச் சீடராக ஏற்றுக் கொள்ள வேண்டுவதும், அவர் இதயத்தோடு ஏற்று, உள்ளொளியைத் தூண்டும் காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கச் செய்து, குருகுலவாச விதிகளைக் கடைபிடிக்கச் செய்வதுமே முதன்மை பெற்றிருந்தன.

அந்தப் புராதனச் சடங்கு முறையில் முப்புரி நூலைப் பற்றிய குறிப்பே இல்லை. அத்துடன், மாணவரின் தந்தை வழிப் பாரம்பரியம் சொல்லும் குலமுறை ஓதலும் இல்லை.

ருக்வேதத் தொகுப்பின் பாடற் கவிஞர் வரிசையில் பல பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

கோசா, லோபமுத்ரா (அகத்தியரின் மனைவி), அபலா, ஸூர்யா, இந்திராணி, யமி என்று நீண்டு செல்லும் பெயர்பட்டியலில் முன்பே குறிப்பிடப்பட்ட ‘வாக்’ முதலிய தேவதைகளின் பெயர்களும் அடங்குகின்றன.

தேவதைகளே தங்களைப் பற்றிய பாடல்களை யாத்தனர் என்றால் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகப் படவில்லை. எனவே பெண் ருஷிகளே யாத்த பாடல்கள், கணவராகிய ருஷிகளுடன் கூட்டாக யாத்த பாடல்கள், பெண்களின் பெயரில் தெய்வங்களே யாத்ததாகக் கற்பித்துப் பாடப் பெற்றவை என்று பிரிக்கிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும், பெண்கள் மிக உயர்ந்த நிலையில் கல்வி பெற்றுத் திகழ்ந்தனர் என்பதை மறுக்க முடியாது. வேதகால ஆரியர் இந்தியாவில் வந்து குடியேறிய காலத்தில் கானக விலங்குகளுடன் மட்டுமின்றி, பல்வேறு இனத்தாருடனும் தங்களுக்குள்ளேயே குழுக்களுடனும் போராட வேண்டியிருந்தது. இதன் காரணமாகப் பெண்கள் மொழியும், இலக்கியமும் மட்டுமின்றி தற்காப்புக் கலையும் பயின்றார்கள் என்பதற்குரிய சான்றுகள் உள.

போர்க்கலையில் சிறந்து விளங்கிய பெண்கள் சிலரைப் பற்றி ருக்வேதப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

இராமாயணத்துக் கைகேயியை, பொறாமைக்காரியாகவும், கணவனையே கொல்லுதற்குரிய கொடுமை வாய்ந்த சொற்களைக் கூசாமல் உரைத்தவளாகவும் மட்டுமே அறிந்திருக்கிறோம். அவள் போர்க்கலையை நன்கு பயின்றவள். கணவன் தசரதன் சம்பராசுரனுடன் போரிடுகையில் வெகு இலாகவமாகத் தேரோட்டி, வெற்றியைத் தேடித் தந்தவள். அதற்குப் பரிசாகக் கணவன் அளித்த மகிழ்ச்சி வாக்குறுதிகளைத்தான் அவள் பின்னர் அவன் உயிருக்கு உலைவைக்கக் கூடிய வரங்களாகப் பெறுகிறாள் என்பது கதை.

இராமாயண இதிகாயத்துக்கு முற்பட்ட ருக்வேதத்தில் வரும் கேல அரசனின் மனைவி விஸ்பலா கணவனுக்கு உதவியாக எதிரிகளைத் தாக்கக் கடும்போர் புரிந்தாள். அப்போது அவள் தன் கால் ஒன்றை இழக்க வேண்டியதாயிற்று. அசுவினி தேவர்களின் அருளால் இரும்புக் காலைப் பொருத்திக் கொண்டு, மீண்டும் போர்களத்தில் பகைவருக்கு யமனாகச்சமர் புரிந்ததாக விவரிக்கப் படுகிறது.

முத்கலரின் மனைவி முத்கலானி. இவள் போர்க்களத்தில் எதிரிகளைக் கதிகலங்கச் செய்பவளாக, தீரப் போர் புரிந்த கோலம் வருணிக்கப் படுகிறது, காற்றில் மேலாடை விசிப் பறக்க, அம்புகளைச் சரமாரியாகப் பொழிந்து கொண்டு, தோற்றோடும் பகைவரை மேலும் மேலும் துரத்தித்



சென்று கொன்று குவித்த முத்கலானி ருக்வேதம் காட்டும் பெண்மணி.

இதே ருக்வேதப் பாடல்களில், ஆரியர் போர் புரிய நேரிட்ட விவரங்களும், அசுர இனத்தாரைப் பற்றிய விவரங்களும் காணப்படுகின்றன. அவர்களிடையே அடிமைகள் இருந்தார்கள். ஆண்-பெண் என்ற வேறுபாடின்றி, போர் புரியப் பெண் படையினரும், அவர்களிடையே நிறைந்திருந்தனர் என்று தெரிய வருகிறது. எண்ணிக்கையில் மிக அதிகமாக இருந்த இப்போராளிகளுடன் ஆரியர் போர் புரிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே உலகியற் கல்வி, ஆன்மீக அழிவுக்கான உள்ளார்ந்த இலட்சியம், போர்க்கலை ஆகிய எல்லாப் பிரிவுகளிலும் ஆணுக்குச் சமமாகப் பெண்ணுக்கு உரிமையும் பங்கேற்பும் இருந்தன.

'மதுரத்தே மொழி மங்கைய
ருண்மை தேர்
மாதவப் பெரியோருட னொப்
புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள்
பேசிய முறைமை'

என்று பாரதி குறிப்பிட்டிருக்கும் வழக்கு நிலவியது.

ஆடற்கலையும், பாடற்கலையும் ஒரு பெண்ணின் இயல்பான குடும்ப வாழ்க்கைக்கு இசையாதது என்று தனித்து ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

மாலை நேரங்களில் ஆடவரும், பெண்டிரும், இளைஞரும் அழகிய ஆடைகளணிந்து, ஆடிப்பாடிக்களிக்கவும், அறிவின் செம்மை துலங்க விநோத விளையாட்டுக்களில் ஈடுபடவும் வாய்ப்பளிக்கும் அமைப்புக்கள், 'சமானம்' என்ற பெயரில் இயங்கி வந்தன. இந்நாளைய மன மகிழ் மன்றங்களாக அவற்றைக் கொள்ளலாம்.

வயதொத்த ஆடவரும் பெண்டிரும் பழக வாய்ப்புக்களும் காதல் வயப்படும் சந்தர்ப்பங்களும், இயல்பாக இருந்தன. காதலர்கள் தனியிடத்தில் சந்திப்பதும், மகிழ்வதும் விரோதமான செயல்களல்ல.

இப்படி இருந்த சமுதாய அமைப்பு, எவ்வாறு மாற்றம் பெற்றது?

ஏழு வயதிலும்; ஒன்பது வயதிலும் உபநயனம் செய்விக்கப் பெற்று, எல்லா உரிமைகளையும் பெற்றுப் பூரண வளர்ச்சியுடைய பெண்ணே திருமணத்துக்குத் தகுதியாகக் கருதப்பட்ட நிலை எவ்வாறு இழிந்தது?

பெண்ணுக்கு உபநயனம் தேவையில்லை; அவளுக்கு அந்த வயதில் திருமணம் செய்விப்பதுதான் முறை, என்று ஏனோ நெறிப்படுத்தினார்கள்? இன்றும் இராஜஸ்தான், பீஹார் முதலிய வட மாநிலங்களில் பிரும்ம விவாகமே சிறந்தது என்று பெண் குழந்தைகளை, ஆறு வயதிலும், ஏழு வயதிலும் திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள்.

வால்மீகியின் இராமாயணச் சீதைக்குத் திருமணத்தின் போது என்ன வயது தெரியுமா? ஆறு வயது தான். முழு வளர்ச்சியடைந்த மங்கையே திருமணப் பருவத்துக்குகந்தவள் என்ற நியதி, இவ்வாறு ஆறு வயதுச் சிறுமியை மணமகள்களாக்கும் அவசியத்தைக் கொண்டு வரக் காரணம் என்ன?.........

அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே, ஒருவனுடன் இணைத்து அவள் தனித்த மன-அறிவு வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கா? வயதுவந்து, தானாக எந்த ஒரு இளைஞரையும் அவள் காதலித்துக் கடிமணம் செய்து கொள்ளலாகாது என்று தடுப்பதற்காகவா? குடும்ப உற்பத்திக்கும், சமுதாய 'உற்பத்திக்கும் இன்றியமையாதவளாகத் திகழும் அவள் முதன்மை பெறும்போது ஆண்வழிச் சமுதாய பதில்களில் தகர்வுகள் தவிர்க்கப்பட இயலாததாகிவிடும் என்ற அச்சம் காரணமாகவா?

...இத்தனை வினாக்களுக்கும் ஒரே பதில் தான்— "...ஆம்.."

— தொடரும்

# தடுமாறுகிறார் தாயுமானவன்



"......... நானும் வேலைக்குப் போனே ன்னு பால்பவுடர் செலவுக்குன்னுச்சும் ஆவும்.. பொன்னு வேற பெத்திருக்கோம்."

"பசங்க.. —"

"உங்கம்மாவை வரச்சொல்லுங்க..."

"வயசான காலத்துல அவங்களைக் கஷ்டப்படுத்த வேணும்,"

"ஆயா போட்டுரலாமா?"

"அப்புறம் அவன் இனிஷியல் போட்டுக்க மட்டும் நீயும் நானுமா...? பேசாதகிட...பால்பவுடர் வேணும்னு என்னைக் கேள். பட்டுப்புடவைக்கு அலையாம இருந்தேன்னு போதும்."

தாயுமானவன் தொடரில் (விகடன் [27—7—86] ) எழுத்தாளர் பாலகுமாரன்

(எத்தனை பேர் இனிஷியலில் தாய்ப் பெயர் இருக்கிறது? தாயுமானவனுக்கே வெளிச்சம்)

உண்மைக் கதை

# உயிர்த்தெழும் உணர்வுகள்



அந்தப் பெரிய ஹாலில் சுவர் ஓரமாக சரிந்து உட்கார்ந்திருந்தாள் சாந்தா. சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். ஆங்காங்கே வெள்ளையோடியகேசம் கலைந்து கிடந்தது. இருண்டு கிடந்த முகத்தில் கண்கள் நிலை கொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தது. ஆனாலும் இந்த கோலம் அவளின் கம்பீரத்தை குலைக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தது.

சாந்தாவுக்கு என்ன நேர்ந்தது? யாருக்கும் புரியவில்லை. புரியாதது மட்டுமில்லை, அதிர்ச்சியாகவும் இருந்தது. இருக்காதாபின்னே? சாந்தாவுக்கு என்ன குறைச்சல்? பம்பாயில் ஒரு பிரபல தொழிற்சாலையில் மிகப் பெரிய பதவியில் இருக்கும் கணவர்! டாக்டருக்கு படித்துவிட்டு பிராக்டிஸ் செய்யும் மூத்தமகன் எம். பி. ஏ. படிக்கும் இரண்டாவது மகன்! அளவான வளமான குடும்பம்! ஆரோக்கியமான நகர சூழ்நிலை! இத்தனை இருந்தும். அவளுக்கு ஏன் இந்த தடுமாற்றம்?

படிப்பில் கெட்டிக்காரியான சாந்தாவை, கல்லூரிப் படிப்பு முடித்ததுமே கல்யாண மேடையில் ஏற்றி விட்டார்கள்.

ஆனால் அவளின் அறிவு தாகத்திற்கு தடை ஏது? தனக்கு மிகவும் பிடித்த விஞ்ஞானத் துறையில் பல நூல்களையும் பத்திரிகைச் செய்திகளையும் தேடித் தேடி படித்தாள். "இனிமேலும் நீ படித்து, இதெல்லாம் தெரிஞ்சுகிட்டு என்ன செய்யப் போறே" என்று கணவன் கிண்டல் செய்யும் போதெல்லாம் மனசின் துடிப்பை ஒரு சிரிப்பில் மறைத்துக் கொண்டாள்.

குழந்தைகள் பிறந்து அவர்களை வளர்ப்பதில் கொஞ்சம் கவனம் திரும்பியது. அவர்களுக்குப் பாடம் சொல்லித்தரும் கட்டத்தில் சாந்தாவுக்கு தன் படிப்பறிவை பறிமாறிக் கொள்வதற்கு ஒரு வடிகால் கிடைத்தது. இது என்றைக்கும் நீடிக்குமா என்ன? அவரவர்களுக்கு ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து செட்டில் ஆனதும் சாந்தா ஒருவித வெறுமையை உணர்ந்தாள். அவளை சுற்றி ஒரு சூனிய உணர்வு மெல்ல படரத் தொடங்கியது.

காலையில் எழுந்து வேலைக்காரர்களுக்கு கட்டளை போட்டுக்கொண்டு மெனு தயாரித்து கணவனும் பிள்ளைகளும் சாப்பிடக் காத்திருந்து; பறிமாறி...என்று அந்தச் சின்ன வட்டத்தில் தான் கைதியாக பிணைக்கப்பட்டிருந்ததாக சாந்தா உணர்ந்தாள். புத்திசாலித்தனமாக அதற்கு ஒரு வழி காணவும் முயன்றாள்.

கணவனிடம் தன் நிலைமையை எடுத்து சொல்லி அவரது தொழிற்சாலை நிர்வாகித்து வரும் பள்ளிக்கூடத்தில் தனக்கு டீச்சர் வேலை வாங்கித் தரும்படி கேட்டாள். அலட்சியமான சிரிப்புடன் மறுத்து விட்டார்! சாந்தாவும் விடாப் பிடியாக வற்புறுத்தினாள். "என் அந்தஸ்த்து என்ன; கௌரவம் என்ன? அந்தப் பள்ளியில் நீ போயும் போயும் டீச்சர் வேலை பார்ப்பதாவது? உனக்குப் பொழுது போகவில்லை என்றால் ஏதாவது சமூகசேவை செய். கௌரவமாக இருக்கும்!" என்று தீர்மானமாக சொல்லிவிட்டார்.

துக்கம் பீரிட்டது சாந்தாவுக்கு 'சமூக சேவையாம் சமூகசேவை. ஏழைகளுக்கு இதைச் செய்தேன். அதைச் செய்தேன் என்று போட்டிக்காக செய்து சுயதம்பட்டம் அடித்து கொள்ளும் எத்தனை பணக்காரிகளை அவள் பார்த்திருக்கிறாள். இதெல்லாம் அந்தஸ்துக்கு செய்வதே தவிர ஆத்ம திருப்தியை தருமா என்ன? அவள் பொழுது போகவில்லை என்றா வேலைக்குப் போக ஆசைப்படுகிறாள்? சிறுகச்சிறுக எத்தனை விஷயங்களை படித்து மனசில் தேக்கி வைத்திருக்கிறாள். அதெல்லாம். வீணாக்கலாமா? பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லி தருவது தானே அறிவுப் பறிமாற்றத்துக்கு ஒரு வாய்ப்பாக அமையும்? அவளுக்குள் எப்போதும் இருக்கும் அந்த மெல்லிய மன உணர்வு தானே இப்போதுவிஸ்வரூபம்எடுத்து அவளை அலைகழிக்கிறது, அதை இந்த வீட்டில் ஒருவரும் புரிந்து கொள்ளவில்லையே என்றெல்லாம் தனக்குள் புலம்பிக் கொண்டிருந்தாள். அதையெல்லாம் கவனிக்க அவர்கள் ஒருவருக்கும் நேரம் இருக்கவில்லை.

நிலைமை மோசமாகியது! திடீரென்று ஒரு நாள் வீட்டில் ஒருவரிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறினாள் சாந்தா! தஞ்சையிலிருக்கும் தன் தங்கை உமாவின் வீட்டிற்கு போனாள் மனம் குழம்பிய நிலையில் இருக்கும் அவளை தான் சமாதானப் படுத்தி பம்பாய்க்கு அனுப்பி வைப்பதாக சாந்தாவின் கணவருக்கு தகவல் அனுப்பினாள் உமா. அது வரை அவளைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த குடும்பத்தார் நிம்மதியுடன் அவரவர் வேலையை பார்க்கப் போனார்கள்.

சாந்தாவின் உறவினர்கள் ஒரு பட்டாளமே சாந்தாவை சூழ்ந்து கொண்டு கேள்விமேல் கேள்வி கேட்டார்கள். விவரத்தைக் கேட்டவுடன் "ப்பூ! இவ்வளவு தானா விஷயம்? நாங்கள் என்னவோ ஏதோ என்று பயந்தே போனோம்!..

..இதெல்லாம் ஒரு பிரச்னையா? இந்த வயதில் உனக்கு புத்தி ஏன் இப்படியெல்லாம் போகிறது? நீ வேலைக்கு போக வேண்டிய அவசியம் என்ன வந்தது? உன் கணவர் சொல்வது நியாயம்தானே? அவர் கௌரவத்தை நீ காப்பாற்ற வேண்டாமா?" என்று ஆளாளுக்கு அட்வைஸ் பண்ண ஆரம்பித்தார்கள்.

தலையைப் பிடித்துக் கொண்டு 'ஹோ'வென்று கதற வேண்டும் போலிருந்தது சாந்தாவுக்கு! யாருமே அவளை; அவளது மெல்லிய உணர்வை; ஆரோக்கியமான சிந்தனையை; ஆக்கபூர்வமான துடிப்பை புரிந்துகொள்ளமாட்டார்களா? அவளுக்குள் மௌனமாக ஏதோ ஒன்று உடைந்து நொருங்கிக் கொண்டிருந்தது. நெற்றி விண்ணென்று தெறித்தது. கண்கள் நெருப்பாய் எரிந்தது. பரபரப்புடன் அலைந்து கொண்டிருந்த அந்த விழிகளின் பளபளப்பில் ஒரு மருட்சி! "நான் இனி அந்த வீட்டுக்குப் போக மாட்டேன்!" என்ற உதடுகளின் முணுமுணுப்பான உச்சரிப்பில் பிடிவாதம் இருந்தது........

இந்த சமூகமைப்பில் எத்தனையோ பெண்களிடம் இது போன்ற மெல்லிய உணர்வுகள் அரும்புகின்றன. ஆனால் அவை அடையாளம் காண முடியாமல் அழிக்கப்படுகின்றன.

— பிஷ்மி

# தேவதத்தாவின் கிருஷ்ண சஞ்சீவி சொற்பொழிவு



சென்னைப் பல்கலைக் கழக மெரினா வளாகத்திலுள்ள தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் டாக்டர் கிருஷ்ண சஞ்சீவி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு கடந்த ஜூலை மாதம் 28, 29,30 ஆம் தேதிகளில் நடந்தது அன்னை தெரசா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியை டாக்டர் தேவதத்தா அறக்கட்டளையின் முதல் சொற்பொழிவை 'தமிழ் நாவல்களில் பெண்கள் பிரச்சனைகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் நிகழ்த்தினர்.

முதல் நாள் சொற்பொழிவில் நூற்றாண்டுகள்தோறும் பெண்களின் நிலை, அவர்களது சமூக பாதிப்பு இவற்றை வரலாற்றுப் பார்வையுடன் விளக்கினார். சமுதாய மாற்றங்களும் அதற்கேற்ப பெண்ணின் பிரச்சனைகள் காலந்தோறும் எப்படியிருந்தன, எப்படி அவை மாறி வந்தன என்பதனைச் சுட்டுவதே நோக்கமாகக் கொள்ளப் பட்டது.

வேதகாலம், மனு காலம் இவற்றைக் குறிப்பிட்டு பெண்கள் உரிமையற்றவர்களாக, ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்களாக இருந்ததை மிக உணர்ச்சிபூர்வமாக விளக்கினர்.

சங்க காலம் தொடங்கி இன்றைய காலகட்டம் வரையில் பெண் எதிர் நோக்கிய, எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளை முறையாக சொன்னர்.

பிறக்கையிலே முகம் சுளித்தல், வளர்ப்பிலே ஏற்றத் தாழ்வு, கல்வி மறுப்பு, வீடு சிறையிடுதல், வரதட்சணைக் கொடுமைகள், பால்ய கால விவாகம், விதவை விவாக மறுப்பு, விதவையாக வாழ்ந்தால் சமூக இருட்டடிப்பு, உடன்கட்டை ஏற்றல், கற்பழிப்பு, விபச்சாரக் கொடுமைகள், வயதானல் புறக்கணிப்புபோன்ற பல் வேறுபிரச்சனைகளை பெண்கள் சந்திக்க வேண்டியதைக் குறிப்பிட்டார்.

நாவல் எழுதத் துவங்கிய சூழலையும் மேனாட்டில் தோன்றிய புனைகதையைப் பின்பற்றி நாவல்கள் எழுதப் பட்டன என்று கூறியபின்னர், ஆரம்ப கால கட்ட நாவலாசிரியர்களின் நாவல்களை எடுத்துச் சொன்னர்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, இராஜம் ஐயர் பெண் கல்வியை தங்கள் நாடகங்களில் வலியுறுத்தினர். குழந்தை மணமும், உடன்கட்டை ஏறும் பழக்கமும் கண்டனத்துக்கு ஆளாக்கப்பட்டது.

குழந்தை மணத்தின் தீமை, உடன் கட்டை ஏறுதலின் கொடுமை, விதவைத் துயரம் இவற்றை மாதவையாவும், வ ராவும், பாரதியும் கூட்டுக் குடும்ப சமூக அமைப்பில் பெண் படும் இன்னல்களை சத்தியநாதனும், தேவதாசி முறையைப் பற்றி இராமாமிர்தத்தம்மாளும் தங்கள் நாடகங்களில் பேசி உள்ளதை சான்றுகளோடு டாக்டர் தேவதத்தா குறிப்பிட்டார.

ஆரம்ப நாவல்களில் பெண்களின் பிரச்சனைகளாக அமைந்தவை கல்வியறிவின்மை, குழந்தை மணம், பல தார மணம், உடன்கட்டை ஏறுதல், தேவதாசி முறை என்பனவாகும்.

ஆரம்ப கால நாவலாசிரியர்கள் பெண்களின் பிரச்சனைகளைச் சித்தரிப்பதில் காட்டிய நேர்மையைப் பாராட்டினர் டாக்டர் தேவதத்தா. உண்மையிலேயே பெண் விடுதலையில் அவர்களுக்கிருந்த உண்மையான நாட்டத்தையே அவர்களின் நாவல்களில் காண முடிகின்றது என்பதையும் தெரிவித்தார்.

இரண்டாம் நாள் சொற்பொழிவில் சுதந்திர போராட்ட காலத்திலிருந்து இன்று வரை நாவல்களை எழுதும் நாவலாசிரியர்கள் பற்றி விமர்சித்தார்.

கல்கி, அகிலன், மு. வ., ஆர். சண்முகசுந்தரம், தி. ஜானகிராமன், ஆர்.வி., ஈ.எஸ். ராமையா, எம். வி. வெங்கட்ராமன, நா பா., ஜெயகாந்தன், பாலகுமாரன் என சில நாவலாசிரியர்களின் நாவல்களில் பெண்கள் பிரச்சனைகள் காணப்படும் விதத்தினை விவரித்து அவரது எண்ணங்களை முன் வைத்தார்.

பெண்களின் பிரச்சனைகளை அனுதாப கண்ணோட்டத்தில் ஆர்.வி. பி.எஸ். ராமையா, எம். வி. வெங்கட்ராமன், கல்கி, தி. ஜா., ஜெயகாந்தன் இவர்கள் நோக்கி உள்ளனர் என்று குறிப்பிட்டார்.

எங்கே போகிறோம் என்ற நாவலில் அகிலன் படைத்த நாயகியைக் குறிப்பிட்டுப் பெண்ணை விலைமாதாகச் சித்தரித்து இருப்பதைக் கூறி பெண்ணை இப்படித்தான் காட்ட வேண்டுமா என்ற வினவை எழுப்பினர்.

தி.ஜா. வழியிலே எழுதுகிறோம் என்று சொல்லிக்கொண்டு தற்போது பல நாவலாசிரியர்கள் பெண்களை ஆபாசப் பொருளாக்கி வருகின்றனர்.

இவர்கள் ஆண், பெண் உறவு, குடும்பம் என்ற கூட்டமைப்பு இவற்றில் காலம் காலமாக நமது மூதாதைகள் சேர்த்து வைத்திருக்கும் சாரத்தையே மறுக்கும் போக்கு தென்படுகிறது.

அதிலும் பாலகுமாரன் போன்ற நவீன தலைமுறையைச் சார்ந்த இளம் நாவலாசிரியர்களின் படைப்புகளில் சித்தரிக்கப்படும் ஆண்களும் பெண்களும் மேற்கத்திய 'விடுதலைக் கருத்துக்களின் உருவங்களாக வார்க்கப் படுகிறார்கள். இவர்களின் படைப்புகளில் காணப்படும் பெண்களின் பிரச்சனைகள் மொத்த சமூகத்தின் பிரச்சனைகளை உட்படுத்திக் கொள்ள இயலாமல் மேல், மத்தியதர வர்க்க வாசகர்களின் வாரா வார தீனிக்கு ஏற்றப்படி எழுதும் போக்கே காணப்படுகிறது. மேல் நாட்டுப் பெண் விடுதலை என்ற வழியில் நம் நாட்டுப் பெண் விடுதலை பயணம் மேற்கொள்ள முடியாது என்று கூறினர்.

மூன்ருவது நாள் சொற்பொழிவில் பெண் எழுத்தாளர்களின் நாவல்களில் பெண்கள் சித்தரிக்கப்படுவதைப் பற்றி விவரித்தார். பெண் நாவலாசிரியர்களில் ராஜம் கிருஷ்ணன், அம்பை, ஜோதிர்லதா கிரிஜா போன்றோர் இன்றைய பெண்ணின் பிரச்சனைகளை எதிர்கொள்வதிலும் அவர்களின் வாழ்வின் போக்கை அலைக்கழிக்கும் பிரச்சனைகளின் சமூகப் பின்புலத்தைக் கோடிட்டு காட்டுவதிலும் முன் நிற்கின்றனர். அனுராதா ரமணன், லட்சுமி போன்றோர் இன்று பலராலும் விரும்பிப் படிக்கப்பட்டாலும் தொலைநோக்குப் பார்வையில் இவர்களது அணுகுமுறைகளும் வெளிப்பாடுகளும் பலமிழந்து போகும் என்று கூறினர், சிவசங்கரி, இந்துமதி போன்ற எழுத்தாளர்கள் பெண்கள் பிரச்சனையை சரியான நோக்கில் அணுகவில்லை என்று கூறினர்.

முதல்நாள் எழுத்தாளர் அகிலனும் இரண்டாம் நாள் இராஜம் கிருஷ்ணனும் மூன்ருவது நாள் தீபம் பார்த்தசாரதியும் டாக்டர் தேவதத்தா சொற்பொழிவினை பாராட்டிப் பேசினர்கள்.

சிறப்பாக குறிப்பிட வேண்டியது என்னவென்ருல் பெண்களின் மனவேதனையை உணர்வுபூர்வமாக. ஆழமாக விமர்சன நோக்கில் டாக்டர். தேவதத்தா பேசியதாகும். பேசும்போது பல இடங்களில் உணர்வின் இழையில் இவர் சிக்கியதற்கு காரணம் பெண் பிரச்சனையை வலியை உணர்ந்ததே எனலாம். பெண்களே பெண்ணின் பிரச்சனையை உணராத இந்த நாளில் இவர் துணிச்சலாக சில கருத்துக்களை முன்வைத்தது பாராட்டுதற்குரியதே. ஆனல் முதல் நாளில் இவரது பேச்சில் இருந்த சூடு பின் நாளில் குறைந்து தென்பட்டது. பெண்கள் குற்றம் சாட்டுவது ஆணை அல்ல. ஆணின் ஆதிக்க வெறியை என்றும், ஒழுக்கம் என்பது கற்பு என்ற சமாசாரத்துடன் நின்று விடாமல் அன்பு. மனித நேயம் மற்ற உயர் பண்புகளில் உள்ளடங்கி இருப்பதும் என்ற இவர்கருத்து சிறப்பாக சொல்ல வேண்டியவையாம்.

பெண் விடுதலை என்பது சுயசிந்தனை சார்பின்மையே என்றும், மனித அவசியங்கள் பற்றிய செயலுணர்வே அதன் அடிப்படை என்றும் கூறினர்.

எழுத்தாளர் அகிலன். பாலகுமாரன் இவர்களைப் பற்றிய இவர் கருத்துக்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியவை. ஒரு 'இரும்புக் குதிரை' நாவலை வைத்து பாலகுமாரனையோ, 'எங்கே போகிறோம்' என்ற நாவலை வைத்து அகிலனையோ சரி எடை போட முடியாது. படைப்பாளர்களை எந்த வட்டத்திலும் தள்ளுவதற்கு என்றும் யாருக்குமே உரிமையில்லை.

மேலும் சொற்பொழிவின் முடிவில் பெண் பிரச்சனைகளையும் தீர்வினையும் தொகுத்து தராததால் கேட்ட முழுமை வந்தடையவில்லை. இருப்பினும் விரிந்த பொருள் பற்றி, அதன் ஆழத்தை புரிந்து கொண்டு, உணர்ச்சியுடன், யாரையும் புண்படுத்தாமல் தன் கருத்திலிருந்தும் நழுவி விடாமல் டாக்டர் தேவதத்தா பேசியவிதம் உற்சாகத்தை அளித்ததோடு, மட்டுமின்றி, செயல்படும் உணர்வை தூண்டியதால் பாராட்டுக்குரியவராகிருர்,

– அக்னிபுத்திரன்

---

19-ம் பக்க தொடர்ச்சி

ரகு. நான் ஏதாவது தப்பா பேசுகிறேனு ரகு?''

''இல்லை ராஜி நீ சொன்னதை நானும் ஒத்துக் கொள்கிறேன். நீ சொல்வதற்கு முன்பே இந்த எண்ணம் தான் இருந்தது. இருக்கிறது.''

''ரொம்ப சந்தோஷம் ரகு. நான் உன்னை நேசிக்கிறேன் அதில் ஒரு பொய்யுமில்லை ரகு. ஆனு உன்னை ப்ரதரா நினைக்கிறேன் அப்படியெல்லாம் சொல்ல முடியாது. நான் உன்னை அந்த கோணத்தில் நினைத்து பார்த்ததில்லை. நீ எனக்கு ஒரு சிநேகிதன், நல்ல சிநேகிதன். நீ என்னிக்கும் எனக்கு ப்ரெண்டாய் இருப்பியா ரகு?''

''நிச்சயமா ராஜி. உன்னை எனக்கு புரியுது. நீ நினைப்பதை உன் கோணத்திலேயே புரிஞ்சுக்க ட்ரை பண்ணுகிறேன். மேலும் நான் கல்யாணத்தைப் பற்றி நினைச்சுப் பார்க்கிற நிலைமையில் இல்லை. நானே இப்போது ஒரு ஸ்திரமான நிலையில் இல்லாத போது காதல், கல்யாணம் இதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. நீ சொன்னது போல், எதற்கு வீணை கவலைகளை விலை கொடுத்து வாங்க வேண்டும்? நீயும் நானும் என்றைக்கும் நல்ல சிநேகிதர்களாகவே இருப்போம்.''

அன்றே பேசித் தீர்த்து விட்டோம். எங்கள் உறவு முறைகளைப் பற்றி. இன்னமும் அதே ப்ரெண்ட்ஷிப் போடுதான் பழகுகிருேம். எங்கள் மனத்திற்குள் இல்லாத குழப்பம் ஏன் அப்பாவிற்கு ஏற்பட வேண்டும்?

அப்பா என்னை தவருக நினைக்கிருரோ? ரகுவும் நானும் சினிமாவில் வருவதைப் போல 'ரிஜிஸ்டர் மேரேஜ்' பண்ணிக் கொண்டு வந்து நின்ருல் என்ன செய்வது என்ற பயமா?

'அப்பா! நீங்கள் அப்படியொன்றும் என்னை கட்டுப்பெட்டித்தனமாய் வளர்க்க வில்லையே! எனக்கு சுதந்திரம் கொடுத்து வளர்த்தவரே நீங்கள் தானே. நான் விஸில் அடித்தால் 'ஆம்பிள்ளையாட்டம் எதுக்குடி விஸில் அடிக்கிறே' என்று அம்மா கேட்டால் கூட 'ஆம்பிள்ளைதான் விஸில் அடிக்கனும்னு என்ன சட்டமா? அவளுக்கு அடிக்க வர்றது அடிக்கரு. விஸில் அடிக்கக்கூட ஆம்பிள்ளை பொம்பள்ளை என்று உண்டா என்ன? என்று சொன்ன அப்பாவா இன்று அத்தனை கடுமையாகப் பேசவிட்டுப் போனது.

ஒரு வழியாக யோசித்து ஒரு முடிவிற்கு வந்தேன். ஒரு பேப்பர் பேனவை எடுத்துக் கொண்டு எழுத உட்கார்ந்தேன்.

அன்புள்ள அப்பாவிற்கு,

காலையில் நானும் ரகுவும் பழகுவதைப் பற்றி என்னவோ சொல்லி விட்டு போய் விட்டீர்கள். உங்கள் கோபத்தை பார்த்து, நானும் ரகுவும் பழகுவதை தவருக நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். எனக்குத் தெரிந்து இதுவரை எந்த விஷயங்களையும் நான் உங்களிடம் மறைத்ததில்லை. இனியும் மறைக்க மாட்டேன்.

நானும் சுகந்தியும் பழகுவதைப் பற்றி நீங்கள் எதுவும் கேட்கவில்லையே ஏன்? சுகந்தி ஒரு பெண் அதனால்தான். ஆனல் நான் சுகந்தியுடன் எந்த உறவு முறையில் பழகுகிறேனு அதே போல் தபன் ரகுவுடன பழகுகிறேன் என்ருல் புரிந்து கொள்வீர்களா அப்பா?

நாங்கள் எங்கள் நிலையை நன்ருக உணர்ந்திருக்கிருேம். ரகு படித்து, முடித்து, நல்ல ஒரு வேலைக்குப் போகும் வரை தன் கல்யாணத்தைப் பற்றி நினைக்கக்கூட முடியாத நிலையில் இருக்கிறேன். நானும் நன்ருகப் படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற எய்மோடுதான் இருக்கிறேன். இதற்கிடையில் காதல் அது இது என்று நேரத்தை வீணுக்க மாட்டோம். நாங்கள் தெளிவாகத்தான் இருக்கிருேம் அப்பா. நீங்களாய் எதையாவது நினைத்துக் கொண்டு குழப்பிக் கொள்ளாதீர்கள். என்னை புரிந்து கொள்ளுங்கள் அப்பா.

இப்படிக்கு,
ராஜி

இரண்டு முறை படித்துப் பார்த்துக் கொண்டேன். இரவு அப்பா வந்த பின் மௌனமாக கடிதத்தை நீட்டினேன்.

வாங்கி மௌனமாகப் படிக்கத் தொடங்கினர் அப்பா முகத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை எத்தகையது என்பதை இனம் காண முடியாமல் தவித்தேன். படித்து முடித்து விட்டு நிமிர்ந்தார்.

''ஸாரிடா ராஜி! உன்னை ரொம்பவும் கஷ்டப் படுத்திட்டேனுடா? காலையில் ஆபிஸ்ஸில் ஏதோ பிராப்ளம் அதோட அம்மா வேற ஏதேதோ சொன்னுளா? அதுதான் உன்னை கொஞ்சம் கடுமையா பேசிட்டேன். நீ கவலை படாதேடா ராஜி. நான் உன்னை புரிஞ்சுகிட்டேன்''

''தேங்ஸ்ப்பா'' என்றேன் கண் கலங்க

128584

# சிறைகள்

அநுமிகா

பிற நிறுத்தங்களிலெல்லாம் இடம் தாண்டி முன்னுடி பேருந்து நிற்பதற்காய் பொருமும் மனது இந்த நிறுத்தத்தில் மட்டும் இன்னும் சற்றுத் தள்ளி முன் நகர்ந்து நிற்கக் கூடாதா என்று பரிதவிக்கும். வாரா வாரம் புதிது புதிதாயிருந்தாலும் ஒட்டப்படும் சுவரொட்டிகளில் அலங்கோலமாய் பெண் அல்லது ஆணும் பெண்ணுமாய் அரைகுறை ஆடையுடன், ஆலிங்கனத்தில் சாய்ந்து கிடப்பது மட்டும் மாருது. இந்த நிறுத்தத்தில் வண்டி நிற்கும் வரை கழுத்து விறைக்க நேர்ப்பார்வையாய் பார்க்க வேண்டும். சற்றே தளர ஜன்னல் வழியே பார்த்தால் பார்வை படுமிடமெங்கும் படச்சுவரொட்டிகள் கோபமும் இயலாமையுமாய் அவமானம் படரும்.

அவள் போகும் நேரத்தில் பள்ளிச் சிறுவர்களும், சிறுமியருமே பெருவாரியாக, வண்டியில் பரவியிருப்பர். சுவரொட்டிகளைப் பார்க்கும் சின்னச்சின்ன விழிகளில் கள்ளச்சிரிப்பும், சங்கடமும் மருட்சியும், குறுகுறுப்பாக...... ஒரு கணம் அந்த உள்ளங்களுக்குள்ளெல்லாம் புகுந்து பார்த்ததன் பாதிப்பாய் அங்கே என்ன 'சூழல்' ஏற்பட்டுள்ளது. என்று அறிய பரபரத்துப் போகும். பத்துப் பன்னிரெண்டு வயதுப் பெண்கள் தங்களுக்குள் கிசுகிசுவென்று காதருகாய் எதோ கூறி சிரித்துக் கொள்வார்கள் சற்றே வளர்ந்த விடலைப் பையன்கள் ஸ்டைலாகத் தலையை நீவி விட்டுக் கொண்டு, நிற்கும், உட்கார்ந்திருக்கும் பள்ளிச் சிறுமிகளைப் பார்ப்பார்கள். இவள் அவர்களையும் இவர்களையுமாகபார்ப்பாள். வெள்ளிக்கிழமை வந்தால் நிறுத்தம் நெருங்க நெருங்க பேருந்து உள்ளே ஒளிபரப்பு உருவாவது புரியும். எக்கி தலையை ஜன்னலுள்ளாக வெளியே நீட்டி 'புதுசுடா பாரு!' என்று போஸ்டர்கள் மாறியிருப்பதை! பரஸ்பரம் தெரியப்படுத்திக் கொள்வார்கள்.

இந்தப் பிள்ளைகள் பாடங்களிலேயும், விளையாட்டுப் பரபரப்பிலேயும் இங்கு பார்த்ததையெல்லாம் மறந்து போய்விடுவார்கள். இதை இவர்கள் அப்படியே மனதில் நிறுத்தி சிறிதுசிறிதாக சிதைவுறுவார்களோ என்பதாய் நான்தான் சஞ்சலப் பட்டபடியே இருக்கிறேன் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றாலும் பார்த்தது நெருடியபடியே இருக்கும். 'பெண்' இவ்வளவு தான் என்பதாய் இந்தசுவரொட்டிகளைப் பார்த்துப் பார்த்து இந்த மனங்களில் பதிந்து போய் விடுமோ என்று பயமாக இருக்கும். இதைகுறித்தெல்லாம் இவர்கள் பள்ளிகளில் ஏதேனும் சொல்லிதருவார்களோ... ஆனால் அன்று படித்த கட்டுரையின்படி இன்றைய நமது பாடப் புத்தகங்களிலெல்லாம் பெண்ணைக் குறித்து செக்கு மாட்டுத் தனமான விஷயங்களே சொல்லப்பட்டிருக்கின்றன, என்றுதானே ஆகிறது. அதையும் மீறிப் பார்த்தால் ஜான்சிராணி, கஸ்தூரிபா காந்தி, சீதை, நளாயினி என்ற பெண்களைப் பற்றிய கதைகளும் கட்டுரைகளுமாய் மட்டுமே... பொதுவாக பெண்மை என்பது பற்றி பெண்ணையும் பெண்ணின் மனத்தை மதிக்க வேண்டுவது பற்றி, அப்படிப்பட்ட மதிப்பை, கண்ணோட்டத்தை தமக்குத் தாமே பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியெல்லாம் பேசப் படுகிறதோ...? தெரியவில்லை. பெண்குறித்த பட்டி மன்றங்களும் கண்ணகியோ மாதவியோ யார் கற்புக்கரசி என்பதோடு நின்றுவிடுகின்றன.

இவளோடு பயணம் செய்யும் பிற ஆண்களும் பெண்களும் இப்படியெல்லாம் எண்ணுவார்களா? என்று அறிய ஆசையாக இருக்கும். நிச்சயம் அப்படி எண்ணுபவர்களும் இருப்பார்கள்... இல்லையென்று நினைப்பது தன்னைத் தானே பெரிதாகக் காட்டிக் கொள்ளும் முனைப்பாகி விடும். வாழ்வின் பரபரப்பில் சரியாக வழி யில்லை என்ற விரக்தியில்... அல்லது 'இப்படித்தான் இருக்கும் என்ற எண்ணத்தில் வாளாவிருந்து விடுகிறார்களோ, இவளைப் போலவே உள்ளுக்குள் பொருமிக் கொண்டுமிருக்கலாம்.... இதோ பக்கத்தில் அமர்ந்து கவர்ச்சிராணி கதையைபடித்தபடியே அடிக்கொருதரம் முகத்தின் அரிதாரத்தை கைக்குட்டையில் நாசுக்காக ஒற்றி எதிர் வரிசையில் நிற்பவன் தன்னைப் பார்க்கிறானு என்று அடிக்கண்ணால் நோட்டமிட்டபடி. இப்படி நடந்து கொள்வதுதான் இயல்பென்பதாய் இதுநாள்வரை இவளுக்கு புறச்சூழல்கள் புரிய வைத்திருக்கலாம். இனக்கவர்ச்சி என்பது தவிர்க்க இயலாதது எனில் அதில் இசகுபிசகாகத் தடுக்கி விழாமல் இனங்கண்டு பார்த்து நடப்பது என்பதுவும் இன்றியமையாததாக விடுகிறது. இதற்கான 'பாடங்கள் இவர்களுக்கு யாராலும் புகட்டப்படுவதில்லை... புதிது புதிதாக உடைதரிப்பதும் தலையை அடிக்கொரு தரம் படிய வைத்துக் கொள்வதும், ஓடும் வண்டியில் தேவையில்லாமல் தொங்கியபடியே வருவதும், உதட்டோரம் பாதி சிகரெட் புகைந்தபடியே இருப்பதுவும்தான் வளர்ச்சியின் அடையாளம்என்பதாய் இங்கே படங்களிலும் கதைகளிலுமாய் புரிய வைக்கப் பட்டிருக்கின்றன, வைக்கப்படுகின்றன. இந்த அலங்கார புறத்தோற்றங்களை அங்கீகரிப்பதும். அவற்றிற்கு ஆட்படுவதும் தாமும் அம்மாதிரியே நடையுடை பாவனைகளில் நுழைந்து கொள்வதும் தான் பெண்ணெனப்படுவதன் தாத்பர்யம் என்பதாயும் புரிய வைக்கப்படுகின்றன. இந்தப் பெண்மணியை எதிரே காணும் சுவரொட்டி அலைக்கழிக்குமோ?

-டேய்' அன்னைக்குப் படத்துக்குப் போனேனு... பர்த் சர்டிஃபிகேட் காட்டு இல்லேனு விடமாட்டேன்னுன், இரண்டு பேருமா தகருரு பண்ணி விட வச்சோம் ''பெருமையாக நெஞ்சுயர்த்திப் பேசிக் கொண்டிருந்த பையனுக்கு பதினைந்து வயதிருக்கலாம். ''அம்சமா' என்று சிநேகிதன் கேட்க, அரைக்கண் மூடி 'ஆம்' என்பதாய் தலையாட்டினுன் ''ஆனு இந்த சீன் கிடையாதுடா? ஏமாத்திட்டான்!

இந்தப்பேச்சோடு இந்த சீன் குறித்த பிரக்ஞை சிலரை விட்டு நீங்கி விடாமல்... சிலரிடம் ரீங்கரித்து சில்மிஷங்கள் செய்து மறையலாம்...சிலரிடம் நிரந்தரமாய் தங்கி நாசமாக்கலாம்...எப்படியிருந்தாலும் இந்த விடலைமனங்களின் ஊசலாட்டத்தில் தான் படங்கள் எடுக்கப்படுகின்றன, போஸ்டர்கள் ஒட்டப்படுகின்றன......

இவளுக்குத் தான்தான் எல்லாவற்றையும் பூதாகாரமாக்கிப் பார்க்கிறோமோ என்ற கவலையும் அலுப்பும் ஏற்பட்டது, ஆனால் அபிப்பிராயங்கள் கேட்ட பெண்கள், பெற்றோர்கள் எல்லாருமே ஏக மனதாக சகட்டுமேனிக்கு சுவரொட்டிகள் ஒட்டப்படுவது இளம் மனங்களை வெகுவாக சீரழிக்கிறது என்று திட்டவட்டமாகக் கூறினர். கல்லூரி மாணவர்களை கேட்டதற்கு ஓரிருவர் பொம்பளைங்க தானே நடிக்கிறாங்க என்று இவளை சிறுத்துப்போக வைப்பதாய் அலட்சியமாகக் கூறினர். பெண் என்றால் உடம்பு என்பதாய்



தானும் புரிந்து கொண்டு, பெண்களுக்கும் புரிய வைத்து பொருள் பிரதான வாழ்க்கையிலே பொருளாலும் தான் பொருளுண்டாக்கலாம்என்பதாய்நிர்ப் பந்தத்தையுருவாக்கி...இல்லை இன்னு மின்னுமாய் பணம் பண்ணுவதே வாழ்வுமரியாதைக்கு வழிவகுக்கும் என்பதான தவறான தெரிவில், திமிரில் மேல் மட்டத்துப் பெண்களும் இப்படி கூச்சநாச்சமில்லாமல் நடித்து நடித்து... இதன் தீயவிளைவு சாதாப்பெண்களை வெகுவாகப் பதம் பார்த்தபடி...

இப்படித்தான் ராஜீக்குட்டி அங்கேயிங்கே என்று பராக்கு பார்த்தபடி வந்தது. அந்தப் போஸ்டரைப்பார்த்து விட, ஆணும் பெண்ணும் ஆடையில்லா முதுகுகளைப் பாதசாரிகளுக்குக் காட்டியபடி மூச்சுத்திணறுமொரு ஆலிங்கனத்தில் மூழ்கியிருக்கும் நிலையிலிருந்த அந்தப் படத்தைப் பார்த்து சட்டென்று திரும்பி தன்னையும், கணவனையும் பார்க்க, உடம்பெல்லாம் ஷணத்தில் சில்லிட்டு கூசிக் குறுகிப் போனது. கண்கலங்கிப் போனது. உலகத்தை நடத்திச் செல்லும் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயான இனக்கவர்ச்சி, அன்பு எத்தனை இனிமையானது? ஆதாரமானது! இதை ஏன் இத்தனை கொச்சைப் படுத்துகிறார்கள்! அறை குறை அறிதல் இந்த இளம் மனங்களுக்கு அபாயத்தை விளைவிக்க வல்லதல்லவா. இப்போதைய திரைப்படங்களில் வேறு கல்லூரி மாணவர்களென்றால் 'பாவா டை போடா த சின்னக்குட்டி' என்ப தாய் சகமாணவி, காணும் பெண்களைக் கிண்டல்செய்தால் தான் இளமைக்கு இயல்பு காட்சிக்குக் காட்சி காட்டுகிறார்கள். வன்முறை பெருக்கமும் ஆபாசப்பிரவாகமுமாய் - இவையிரண்டாம் way of life என்பது வாய் இன்றைய மனிதர்களுக்கு குறிப்பாக வளரும் நிலையிலிருப்பவர்களுக்கு புரியட வைத்து வெறுமே போகும் நாயைக் கல்லால் அடிக்க வைத்து, மாட்டின் வாலை முறுக்க வைத்து, கல்யாணமானவள் கிழவி என்ற நிலை பேதமேதுமின்றி பெண்களைப் பரிகசிக்க வைத்து, போதைப் பொருளாகப் பார்க்கச் செய்து...இனிவரும் நாளில் தாயை, சகோதரியைப் பெண்டாளும் செய்தி கூட சர்வ சாதாரணமாகி விடுமோ...இவளுக்கு மூச்சுத்திணறியது. எதற்கு இப்படியெல்லாம்நினைத்து ஒடுங்கிப் போகிறேன் நான்? சே!

தலையை உலுக்கிக் கொண்டும் கலையவில்லை சங்கிலித்தொடரின் அடுத்த வளையமாய் லூதியானா பொறியியற் கல்லூரியில் புது மாணவனைப் பழைய மாணவர்கள் வயிற்றில் அடித்தும், மண்டையில் அடித்தும், ஆபாசமாக செய்கைகள் செய்யச் சொல்லி வற்புறுத்தியும், மனதாலும் உடலாலும் சிதைந்து போகச் செய்த செய்தி நினைவில் வந்தது. இந்த சீரழிவின் பெருமளவு பொறுப்பை இந்த மீடியாக்கள் ஏற்கத்தான் வேண்டும். அன்று பார்த்தோமே ஊர்த்திருவிழாவிற்கான மெல்லிசை நிகழ்ச்சி. கருமாயி மகமாயி என்று கதறி மூன்று நான்கு பாடல்கள், பின் வந்த பாடல்களெல்லாம் தொட்டுக்கவா கட்டிக்கவா, ராக்கால வேளையிலே ரக முக்கலும்முனகலுமான தரங்கெட்ட பாடல்கள்...ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும் என்பதான நிசப்தத்தில் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்க்கையில் இந்த நிசப்தத்தின் 'கர்த்தா' வேறாக இருந்தால், செம்மையானதாக இருந்தால், எத்தனை நன்றாக இருக்கும் என்று ஏங்கியது மனது.

-ரைட்- என்ற நடத்துனர் பிளிறல் சங்கிலியறுத்தது 'ஹப்பா, வண்டி நகர்கிறது! தன்னோடு ஒட்டி இடுக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கும்சிறுவனைப் பார்த்தாள். நின்று கொண்டிருக்கும் தோழனோடு 'போத்தும்' 'சாப்பல்' என்று அளந்து கொண்டிருந்தது. ஆறேழு வயதிருக்கும். வண்டி நின்ற அத்தனை நேரமும் அந்த இரண்டும் வெளியே பார்க்க வேயில்லை என்ற நினைப்பு ஒருகணம் அவைகளை ஆதர்ஷ புருஷர்களாகப் பார்க்கச் செய்தது.



நான் ஷரியத் சட்டத்தால்
பாதிக்கப் பட்டவள்.
ஒன்பது வருட மண
வாழ்க்கைக்குப்பிறகு என்
கணவர் என்னை விவாகரத்து
செய்து விட்டார். என்னிடம்
பணம் இல்லை..!
இந்தியாவில் முஸ்லீம் கணவர்கள்
தங்கள் மனைவிகளை நினைத்த
மாத்திரத்தில் விவாகரத்து
செய்ய முடியாத நிலை என்று
வருமோ....!
— ஸயிரா

## இலட்சியப் பெண் பதில்கள்

**திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ணயிக்கபடுகிறது என்பது உண்மையா...... ?**

-ராதா. திருச்சி-18

''எனக்கு சொர்க்கத்தைப் பற்றித் தெரியாது..'' எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அத்தனையிலும் நீங்களே என்........" என்று சொல்லாத மனைவியோ கணவனோ இங்கு மிகக்குறைவு.

திருமணத்திற்கு முன்னதாக நடத்திய பேரத்தில்ஆயிரம் ரூபாயோ அரைபவுன் தங்கமோகுறைந்திருந்தால் இதே பெண்ணோ அல்லது ஆணோ இதே 'டயலாக்கை' வேறு யாரிடமோ இதே அளவுக்கு நெஞ்சுருக ஆத்மார்த்தமாக பேசிக்கொண்டிருந்திருப்பார்கள்...

ஒரு வேளை சொர்க்கம் என்பது நமது பர்மா பஜார் மாதிரி இருக்கும் என்று நினைக்கிறேன்.........

**பெண்களை, ''தாய்க்குலம்'' என்று அழைக்கிறார்களே. அது என்ன ஒரு மரியாதைச் சொல்லா அல்லது கிண்டலா...... ?**

-இரஞ்சித், இராமநாதபுரம்

இந்திய சமுதாயத்தில் மனைவியாகப் போகும் ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டியவை என்று கருதப்படும் மரபு அடிப்படையிலான தகுதிகள் மூன்று:

1. குடும்பப் பணிகளை நன்கு கவனிப்பவளாக இருக்க வேண்டும்.

2. நல்ல சமையல்காரியாக இருக்க வேண்டும்.

3. குழந்தைகளைப் பெற்றுத் தருபவளாக இருக்க வேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளில் முதல் இரண்டில் ஒருத்தி எப்படியிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் மூன்றவது தகுதியில்லை என்றால் அவளே இந்த சமுதாயத்தில் மிகவும் கொடுமையாக சபிக்கப்பட்டவளாகிறாள்.

இங்கே 'தாய்க்குலமே' என்று சொல்லும்போது சிலருக்கு 'இந்த' அடிப்படை, வேறு சிலருக்கு, 'போகம்' அடிப்படை.

**பெண்கள் பங்கு கொள்ளாத தொழில் ஏதேனும் உண்டா...... ?**

ப. கண்ணன்-மன்னார்பேட்டை

'கடைகளுக்குக் கூட தங்கள் வீட்டுப் பெண்கள் தனியாகச் சென்றதில்லை' என்று பெருமைப் பட்டுக் கொள்ளும் ஆண்களும்,

''அவரில்லாமல் இதுவரை நான் அம்மா வீட்டிற்குக் கூடச் சென்றதில்லை'' என்பதில்தான் தங்கள் பதிவிரதாத் தன்மை ஜீவிப்பதாகக் கருதும் பெண்களும் இருக்கும் நமது சமுதாயத்தில் அவர்கள் பங்கு கொள்ளாத தொழில் இன்னும் இருக்கின்றன. ஆனால் பங்கு கொள்ள முடியாத தொழில்கள் என்று ஏதும் இருப்பதாக தெரியவில்லை.

**சம்சாரம் ஒரு மின்சாரம் படத்தின் சிறப்பு அம்சம் என்ன...?**

மேஜர்தாசன் ஈரோடு, 10

வழக்கமான கூட்டுக் குடும்ப பாடத்தை சொல்லும் கதை... முடிவில் வழக்கத்திற்கு மாறாக ஒரு திருப்பம்- அதை நாம் பாராட்டுகிறோம். ஆனால் படம் அதற்காக ஓடவில்லை...

**பெண்களும் துறவியாகும் நிலைமை (ஒரு சில இடங்களில்) வந்து விட்டதே......**

மேஜர் தாசன் ஈரோடு

துறவி என்கின்ற சொல்லே திருமணம் செய்து கொள்ளாமல் மதப்பிரச்சாரம் செய்வோரை மட்டும் குறிப்பதாக வழங்கி வருகிறது.

புத்தம், சமணம் கிறித்தவம் ஆகிய மதங்களில் இருபாலருமே துறவியாகலாம் ஆனால் இந்துக்களில் மட்டும் பெரும்பாலும் ஆண்களே துறவிகள் - இது மத அடிப்படை. துறவு இதைவிட மகத்தானது. உலகின் இயல்பான சுக போகங்களைப் பெரிது படுத்தாமல் சில இலட்சியங்களுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் கர்மயோகிகள். அத்தகைய கர்மயோகிகள் ஆவதற்கு, பெண்களுக்கும் மட்டும் எந்த அடிப்படையில் தடை விதிக்க முடியும் ?

**அட்டைப்படத்தில் நடிகை நதியாவைப் போட்டதற்கு குறிப்பாக ஏதேனும் காரணம் உண்டோ...... ?**

G. மூர்த்தி, நுங்கம்பாக்கம்

என்ன செய்வது கதாசிரியன் கொடுத்த பாத்திரப் பெயர்களை விட்டு விட்டு அதில் நடித்த நடிகர்களின் பெயராலேயே கதைகளைக் கூறி விமரிசித்து கனவுக் காணும் சமுதாயம் இது......

'சினிமா-பெண்'பற்றிய அட்டைப் பட ஆய்வுக் கட்டுரை- இன்று பிரபலமாக இருக்கும்

ஒரு நடிகை-இதைக் தவிர இந்த விஷயத்தில் ஆய்வு செய்வது மிகவும் கொச்சையானது.

**இலட்சியம் கனவு இரண்டிற்கும் என்ன வித்தியாசம்.....?**

த. சந்திரசேகரன் அயன்புரம்

எல்லாக் கனவுகளுக்கும் இலட்சியம் இருப்பதில்லை.

**'நல்ல தொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்ற சிறப்பைப் பெற பெண்ணின் பங்கு என்னவாகு? ஆணின் பங்கு என்னவாகு...?**

இராணியல் 'கலை' சென்னை-52

பல்கலைக் கழகத்தில், சிலர் அறிவாளிகளாகவும், சிலர் முட்டாள்களாகவும், சிலர் நேரம் போதாமல் உழைப்பதும், சிலர் வேலையில்லாமல் சுற்றி சுற்றி வருவதும்.

சிலர் எல்லாப் பொறுப்புகளையும் தாமே சுமப்பதும், சிலர் பொறுப்பற்று இருப்பதையே பெருமைக் குரியதாகக் கருதுவதுமான நிலைமை இருக்கக் கூடாது....

**தந்தை சொல் தட்டாமல் தாய் என்றும் பாராமல் தாயின் தலையைக் கொய்த பரசுராமனைப் பற்றி......**

இராணியல் 'கலை' சென்னை-57

தன்னை பாதிக்ககூடிய விஷயத்தில் கூட பெற்றோர் சொல்வதைத் தட்டாமல் இருப்பது ஒரு வகை தியாகம் தான். அதற்காக 'பெற்றோர்பணிவின், பெயரால் இன்னொரு உயிரை, அதுவும்தன் தாயைக் கொல்வது மனிதாபிமானமற்ற முட்டாள்தனமானது

இங்கே ஒரு முட்டாளை இன்னொரு மூர்க்கன் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான் அவ்வளவே.

பெற்றோரின் சொல்லுக்காக ஒரு பெண்ணைதன் மனைவியாகிவிட்ட ஒரே காரணத்திற்காக கொடுமைப்படுத்துபவனும் கொலை செய்பவனும் இதே மாதிரியானவர்கள்...

இங்கே தர்மமோ, தாத்பர்யமோ எங்கே வாழுகிறது...... !

# சொர்க்கம் என்பது பர்மா பஜாரா?

# நினைவில் நழுவாத பெண்கள்





பள்ளி நாட்களும் செல்வியின் நினைவும் மலர்கிறது. எவ்வளவு கவர்ச்சியான பெண். மாந்துளிர் மேனியில் அசாதாரணப் பள பளப்பு, துறு, துறு வென்ற கண்கள். வகுப்பில் எப்போதும் முதல் வரிசையில்தான் உட்காருவாள். ஆசிரியை சொல்லித் தருவதை மிகக் கவனமாகக் கேட்பாள். ஆசிரியை கேள்வி எழுப்புமுன் அம்பாக வரும் பதில் கட்டாயம் செல்வியுடையதாகத்தான் இருக்கும்...

செல்வி படிப்பில் மட்டும் புலியில்லை, இனிமையான குரலில் பாடுவாள். தேவாரம் திருவாசகம் ஆண்டாள் திருப்பாவை எல்லாம் மனனம். பள்ளி விழாக்களில் இறை வணக்கம் பாடுவது செல்விதான்... தமிழில் கட்டுரைகள் எழுதுவாள். ஆண்டுதோறும் காந்தி பற்றியும், விவேகானந்தர் பற்றியும் கட்டுரைம் போட்டி நடக்கும்...உயர் வகுப்பு மாணவிகள் பங்கு கொள்ளும் போட்டியில் ஒரு முறை எட்டாம் வகுப்பு படிக்கும் செல்வி முதல் பரிசுப் பெற்ருள்.

ஆரம்ப நாட்களில் படிப்பைவிட கசப்பான விஷயம் எனக்கு வேறு இருந்ததில்லை.

'கொக்கு'என்று நாமகரணம் செய்யப்பட்டிருந்த ஒட்டகச் சிவிங்கி தோற்றம் கொண்டிருந்த எனக்கு எப்போதுமே இருக்கை கடைசி வரிசைதான்..... அதற்குப் பக்கத்தில் பெரிய ஜன்னல் வேறு... மாம்பலம் துரைசாமி பிரிட்ஜ் உருவாகாத நிலையில், கோடம்பாக்கம் செல்லும் எல்லா நடிகை, நடிகர்களின் கார்களும் கிரிப்த் ரோடு வழியேதான் செல்லும்...என் வகுப்பு ஜன்னல் வழியே பார்த்தே, பல நடிக நடிகையர்களின் கார்கள் எனக்கு அடையாளம் தெரியும்...

முப்பாத்தம்மன் கோவிலுக்குச் செல்லும் ரெகுலர் பக்தர்கள் குழாம் அத்துப்படி... வகுப்பறையிலிருந்து வெளி உலகை ரசித்துக் கொண்டிருந்த என்னைப் போன்ற மாணவிக்கு செல்வியிடம் மதிப்பும் பிரமிப்பும் உண்டாவது இயற்கைதானே... ஒவ்வொரு முறை ப்ரோக்ரஸ் ரிப்போர்ட் வாங்கும் போதும் அடுத்த முறையாவது செல்வியைப் போல் படிக்க வேண்டும் என்று பிரசவ வைராக்யம் செய்து கொண்டவள்.

எட்டாவது இறுதியில் திடீரெனச் செல்வி வகுப்பறையிலிருந்து காணாமல் போனாள்...பத்து நாட்கள் காத்திருந்து விட்டு, ஆசிரியை அனுமதியுடன் ஒரு பட்டாளம் அவள் வீட்டைநோக்கி படையெடுத்தோம்.

நாங்கள் எதிர்பாராத எதுவும் செல்விக்கு நடந்து விடவில்லை... தென்னம் பாளைப் பந்தல் போட்டு அவளைத் தனியே உட்கார்த்தி வைத்திருந்தார்கள். நாங்கள் மொத்தமாக அசடு வழிந்து, கி.கி, எனச்சிரித்தோம். எங்களில் பலருக்கும் அப்போதுதான்புதுப்புா வாடை,வெல்லப்புட்டு அத்தை சீர் எல்லாம் பரிச்சயமாகியிருந்தது. ஆனல் செல்வியின் அம்மா சொன்ன விசயம் கேட்டு நாங்கள் திடுக்கிட்டோம். செல்வி இனிமேல் பள்ளிக்கு வரமாட்டாளாம்: சீரெடுத்த அவ மாமா படிப்பு போதும்னு சொல்லிட்டாரு.!எப்படியும் வயவரப்பு பார்க்கிறவனைக் கட்டிக்கிட்டு வாழப் போறவதானே...செல்வி குமுறிக் குமுறி அழுதாள். எங்கள் வகுப்பு டீச்சர் செல்வியின் தாயாரிடம் எடுத்துக் கூறியும் செல்வி பள்ளிக்குத் திரும்ப வேயில்லை.

எப்போதாவது செல்வியை உஸ்மான் ரோடில் அம்மாவுடன் செல்லும் போது சந்தித்தால் ஆர்வத்துடன் பள்ளியைப் பற்றி விசாரிப்பாள். இந்த வருடம் க்ரூப் சிங்கிங்கில் நம் வகுப்புக்குப்பரிசு கிடைத்ததா, என்று கேட்பாள். மனது மிகவும் சங்கடப்படும். செல்வி படிப்பை தொடர்ந்திருந்தால் கட்டாயம் மிகவும் சிறப்பு பெற்றிருப்பாள். ஆனல் பெண்ணுய் பிறந்த பாவம், அவள் உடம்பே, திறமைகளுக்கு முட்டு கட்டை போட்டு விட்டதே.

நாங்கள் எஸ்.எஸ்.எல்.ஸி படிக்கும் போது ஒரு நாள் செல்விஎங்களைத் தன் திருமணத்திற்கு அழைத்தாள், மதுராந்தகம் அருகே அவள் மாமன் வீட்டில் திருமணம் இருபது பேர் பஸ் ஏறிப் போனேம். பதினைந்து வயதுச் செல்வியின் முறை மாமனுக்கு முப்பது வயதாவது இருக்கும். பேச்சில் நாசுக்கு புத்திசாலித் தனம் எதுவுமில்லை, பக்கத்தில் வந்தால் புகையிலை நெடி வேறு. நாசுக்கான உணர்வுகள் கொண்ட ஒரு பெண் இத்தகைய கணவனுடன் சந்தோஷமாக வாழமுடியுமா. அவளுக்குத் திருமணம் ஏதாவது வளர்ச்சிகளைத் தோற்றுவிக்குமா என நான் சிந்தித்தேன். சிரிப்பும், கும்மாளமுமாகத் திருமணத்துக்குச் சென்ற யாருமே திரும்பும் போது வாய்திறக்கவில்லை, மனச்சுமை எங்கள் நெஞ்சை அழுத்தியது.

வாழ்க்கை ஓட்டத்தில் செல்வி ஏதோ ஒரு கரையில ஒதுங்க நான் வேறு கரையைத் தேடிப் போனேன். சில ஆண்டுகளுக்கு முன் என் பள்ளித் தோழி சென்ருள். சொன்னுள். செல்விக்கு ஏழு குழந்தைகளாம். கணவன் படு குடிகாரனும். அவள் படும் துன்பங்களை செவி மடுக்கும் போது கலீர் என்ற சிரிப்புடன், காந்தியைப் பற்றி கட்டுரை எழுதிய புத்தி சாலிப் பெண் பாவடை சட்டையில் தோன்றினுள். சமூகக் கோட்பாடுகள், பெண் என்னும் சக்தியை இப்படிச் சின்னுபின்னப் படுத்திய கோலம் என்னை மிகவும் தாக்கியது. இவற்றிலிருந்தெல்லாம் ஒரு பெண்ணை விடுபட்டுத் தன்னை ஒரு தனித்தன்மை கொண்ட மனுஷியாக நிலை நிறுத்திக் கொள்ளவே முடியாதா என வருந்தினேன், பெண்களுக்குக் கல்வி அறிவு அளிக்காத வரை அவர்களை தாம் ஒற்றைச் சிறகு ஒடிந்த பறவைகளாகத் தான் வைத்திருப்போம் என்ற விவேகானந்தர் வாக்கை நிலைத்துக் கொண்டேன். செல்வி இதே மேற்கோளை மேடையில் வீராவேசமாக முழங்கிப் பரிசு பெற்ற நாளை நினைத்துக் கொண்டேன்.

சமீபத்தில் பெண் போலீஸ் அதிகாரி ஒருவருடன் நட்பு ஏற்பட்டது. ஒரு நாள் அவர் வீட்டில் தேநீர் அருந்தியபடி பேசிக் கொண்டிருந்த போது ஒரு பெண்மணி அவரைத் தேடி வந்தார் ''இந்தப் பெண்மணி சுத்தப் பட்டிக்காடு...படிப்பு எழுத்து கிடையாது வச வசவெனக் குழந்தைகள்...ஆனல் படு துணிச்சல்காரி. இவள் உதவியால் போலீஸ் இலாகா ஒரு பெரிய கேஸை பிடித்திருக்கிறது. அடுத்த வாரம் இவளுக்குப் பரிசும், பாராட்டும் தரப் போகிரும்...என்ருர் அழுக்கும் கிழிசலுமாக இருந்த அந்தப் பெண்மணி நாட்டுப்புற பாஷையில் ஏதோ பேசிச் சென்ருள்.

அவள் விடை பெற்றப் பிறகு போலீஸ் அதிகாரி விளக்கினர். பல காலமாகப் போலீஸை டபாய்த்துக் கொண்டிருந்த ஒரு பயங்கரக் கொள்ளைக் காரன் இவள் கிராமத்துக்கு அடுத்த கிராமத்தில் பணத்துக்காகக் கொலை செய்துவிட்டு மறைவிடம் தேடி வந்திருக்கிருன். பாத்ரூம் இல்லாததால் இருட்டியபின் வெளியே வந்த இந்தப் பெண் மணியைப் பார்த்து அவன் பம்ப் ரூமில் ஒளிந்திருக்கிருன்... யாரோ ஒளிவதைப் பார்த்து இவள் குரலெடுத்துக் கத்தியிருந்தால் அவன் இருட்டின் சுவரில் ஓடியிருப்பான். இவள் அவனைக் காணுதது போல் வயலில் ஒதுங்கிவிட்டு வீட்டினுள் சென்று குதிருக்குப் போகும் பூட்டைப் போட்டு பம்ப் ரூமை மூடிவிட்டாள், இவள் கணவன் குழந்தைகளுக்குக் கூடத் தெரியாது. இருட்டில் மூன்று மைல் ஓடி வந்து போலீஸ் நிலையத்திலும் தெரிவித்தாள். இது சாதாரணத் துணிச்சலா சொல்லு. வெளியே வரத் தெரியாமல் கதவை உடைத்துக் கொண்டிருந்தவனை போலீஸ் பிடித்து விட்டார்கள். இவள் கொள்ளைக்காரனை உள்ளே வைத்துப் பூட்டிய போது அவன் ஒரு தட்டுத்தட்டியிருந்தால் இவள்செத்தே விழுந்திருப்பாள்...ஷி ஈஸ் ரியலி கிரேட், அவளுக்குத் தன் பெண்ணை படிக்க வைக்கணுமாம்.நான்தான் சேவா மந்திரில் இடம் வாங்கித் தந்தேன்...

எந்த ஊரு இவளுக்கு...?

மதுராந்தகம் பக்கத்திலே கிராமம், பேரு செல்வி...

அந்த முகம், நடை அதில் தெரிந்த என்றோ பார்த்த பரிச்சயம்.

செல்வி என்ற சக்தியை எவ்வளவு மூச்சடைக்கச் செய்தும் சமுதாயத்தால் சாகடிக்க முடியவில்லை. பெரிய கதவு மூடப்பட்டும் அவள் வாழ்வில் ஏதோ ஒரு சின்ன ஜன்னல் காற்றை அவள் இன்றும் சுவாசிக்கிருள். முறத்தால் புலியைத் துரத்திய பெண் இவள் வகையைச் சேர்ந்திருப் பாளோ?

உஷா சுப்ரமணியம்

# ஸோயில் ஆசிய விளையாட்டு

இந்த இதழ் உங்களுக்குக் கிடைக்கும்போது "குட்டி ஒலிம்பிக்" ஒன்று நடந்து முடிந்திருக்கும். பத்தாவது ஆசிய விளையாட்டுக்களைத்தான் சொல்கிறேன். 1951ல் புது தில்லியில் மறைந்த பண்டித நேருவினலே துவக்கி வைக்கப்பட்டது. 4 வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. 82ல் ஸோயிலில் சந்திப்போம் என்று கூறிப் பிரிந்த ஆசிய விளையாட்டு வீரர்கள் இந்த வருடம் செப்டம்பர் மாதம் 19ந் தேதி தென் கொரியா நாட்டுத் தலைநகரான ஸோயில் (ஸியோல் என்பது தவறும்) மீண்டும் சந்தித்தனர்.

கோலாகலமான 16 நாள் விளையாட்டு விழா இம்மாதம் (அக்டோபர்) 5ம் தேதி நிறைவு பெறுகிறது. மெடல்கள் எண்ணிக்கையில் முந்திக் கொள்ளப் போவது யார்? சந்தேகமென்ன சைனுதான்.

1982ன் தாரகை P.T. உஷா மாதிரி 1985ல் கஜன்ஸிங், ப்யூலா சௌத்திரி என்று இரு நட்சத்திரங்கள் தோன்றுவார்கள். (இவர்கள் இருவரும் நீச்சல் வீரர்கள்) பி டி. உஷா 6 தங்கப் பதக்கங்களைப் பெறுவார் போன்ற ஹேஷ்யங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கும், இந்த பத்தாவது ஏஷியாட்டில் ஜூடோவும் டைத்வானிடோவும் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பத்தாவது ஆசிய விளையாட்டுக்களின் கண்கவர் ஆரம்ப விழாவை நாமெல்லோரும் தொலைக்காட்சியில் கண்டு களித்திருப்போம். (விஞ்ஞானத்துக்கு நன்றி) இருந்தாலும் அதைப் பற்றி மீண்டும் நமக்குள் பரிமாறிக் கொள்வதில் ஒரு தனி இன்பம் இருக்கிறதல்லவா?

ஒரு லட்சம் பேர் நேரில் கண்டு களித்த துவக்கவிழா. காவஸ்கரும், கபில்தேவும் சுமார் 2 மணி நேரம் இருட்டடிப்பு செய்யப்பட்டார்கள். 27 நாடுகளிலிருந்து 822 விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டனர். வீரர்களின் எண்ணிக்கையே ஒரு புது ரிக்கார்டுதான். சைனுவும், கொரியாவும், ஜப்பானும் மிகப் பெரிய குழுக்களை அனுப்பியிருந்தன.

அதிசயிக்கத்தக்க விஞ்ஞான முன்னேற்றம் தென் கொரிய நாட்டுத் தலைநகரான ஸோலையும், இந்திய நகரங்களையும் இணைத்தது. பத்தாவது ஆசிய விளையாட்டுக்களின் மையக் கருத்து. "காலை நேரத்து அமைதியிலாழ்ந்த நாடு" என்பதாகும். துளிக் கூடக் கணக்குப்பிசகாமல் நடந்தேரிய இத் துவக்க விழாவின் பின்னே ஒரு மாதக் கடுமையான உழைப்பு. 1988ல் ஒலிம்பிக் விழாவும் ஸோயில்தான் நடக்கப் போகிறது. அதற்கான உடை ஒத்திகைதான் (dress rehersal) தான் இந்த பத்தாவது ஆசிய விளையாட்டுகள். இதற்கான ஒத்திகை 1984 வது வருட லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கிலேயே ஆரம்பமாகி விட்டது.

வண்ணமயமான இந்த விழாவை நேரிலும், தொலைக்காட்சிப் பெட்டியிலும் கண்டு களித்தவர்களால் எதை மறக்க முடியும்? சரிந்த, பளபளக்கும் கண்களும், குண்டுக் கன்னங்களும், அருவியாய்ச் சரிந்த முன்நெற்றி முடியுமாய் நடனம் ஆடிய ஆரோக்கியமான பள்ளிச் சிறுவர்களையா, தென் கொரியக் கலாச்சாரத்தின் பழமையையும், புதுமையையும் சித்தரித்துக் காட்டிய நடன மாதுக்களின் கொப்பளிக்கும் உற்சாகத்தையா, ஜப்பான் நாட்டு வீரர்களின் மிடுக்கையா, இந்த வண்ணச் சிதறல்களின் நடுவே வெளிறிப் போய்க் காணப்பட்ட இந்தியக் குழுவினரின் சீருடையையா, எதை விடுவது, எதைச் சொல்லுவது?

பார்வையாளர்களும் இந்தக் கோலாகலத்தில் கலந்து கொண்டனர். விழா துவங்கப் போவதை எதிர்பார்த்து கம்மென்று ஆகிவிட்ட நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு ட்ரம்மர்கள், அவர்களின் பின்னே வெள்ளையுடையில் மணியடித்துக் கொண்டே வந்த தேவதைகள்: டெல்லியின் லெப்டினன்ட் கவர்னர் கபூர் முதலாவது ஆசிய விளையாட்டு ஜோதியை, ஒலிம்பிக் கவுன்சிலின் ஆசியத் தலைவரான ஷேக் ஃபஹாட் அல் ஹமாத் அல் சாபாவுக்கு அளிக்க விழா துவங்கியது. பின் பங்கு பெறும் நாடுகளின் அணிவகுப்பு, பின் ஆணும், பெண்ணுமான இரு கொரிய விளையாட்டு வீரர்கள் ஜோதியை ஏந்தி ஓடி வந்து விளையாட்டு தீபத்தை ஏற்றி வைக்க, தென் கொரிய ஜனதிபதி விளையாட்டுக்களை துவக்கி வைத்தார்.

16 நாட்கள் இளமையும், ஆரோக்கியமும், நேயமும் கோலோச்சின. பகை வென்ற மானுடம் சாத்தியமே இரண்டு மாதங்களில் மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டது. நாகரிகம் என்பதற்குப் புதிய அர்த்தம் கற்பிக்கப்பட்டது. வாயில் நுழையாத சீனப் பெயர்களெல்லாம் பரிச்சயமாகி விட்டன. நமக்கு சந்தோஷத்தைத் தருகின்றன. மொழி, மத, கலாச்சார வேறுபாடுகள் கலைந்து எந்தவொரு விளையாட்டுத் துறையிலும் excellence திறமை ஒன்றே ஏகோபித்த ஆதரவைப் பெற்றது.

விழா நடந்த ஸோயில் நகரம் எப்படியிருக்கும்? நகரின் குறுக்கே ஓடும் ஹான் நதி நகரை இரண்டாக பிளக்கிறது. வடக்கிலும், தெற்கிலும் அணைத்தவாறு எழும் புக்கன், க்வானக் எனும் இரு மலைத் தொடர்கள், நாம்சன் மலை ஸோல் நகருக்கு மேலும் அழகூட்டும்.

சரி, இதனுல் ஏதும் பயன் உண்டா என்ருல் உண்டு. தைவான் இந்த முறை விளையாட்டுக்களில் கலந்து கொண்டது. என்ன பெரிய விஷயம் என்கிறீர்களா? பன்னிரண்டு வருடங்களாக அரசியல் காரணங்களினுல் கலந்து கொள்ளாதிருந்த ஒரு நாடு

இப்போது பங்கு பெறுகிறது. வரவேற்கப்படுகிறது என்ருல், பெரிய விஷயம்தானே!

இருந்தும் உணவில் நெருடும் கல் போல ஒரு அம்சம், எலியும், பூனையுமான ஈரானும், ஈராக்கும் தனிப்பட்ட முறையில் விளையாட்டுக்களில் கலந்து கொண்டும் கூட, எதிரெதிர் துருவங்களாகத்தான் நின்றனர். குழுக்களின் அணிவகுப்பின்போது இவ்விரு குழுக்களுக்கும் நடுவில் மற்ெருரு குழுவை நுழைக்க வேண்டியிருந்தது!

வேறென்ன புதுமைகள் இந்தப் பத்தாவது ஆசிய விளையாட்டுக்களில் Moscot எனப்படும் சின்னம் இந்த முறை தேர்ந்தெடுக்கப்படவில்லை (9வது ஆசிய விளையாட்டுச் சின்னமான அப்புவை ஞாபகமிருக்கிறதா?) இதில் பணி புரிந்த எந்த ஊழியருக்கும் ஊதியம் ஏதும் தரப்படவில்லை!

ஒரு பட்டனின் அழுத்தலில் இந்த உலகையே சுடுகாடு ஆக்கக்கூடிய விஞ்ஞான பயங்கரங்களில் வல்லரசுகள் பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கும் சமயமிது. பொருளாதார தளைகளிலிருந்து பூரணமாக விடுபட்டிராத வளர்ந்துவரும் மூன்ருவது உலக நாடுகள் எத்தனையோ சிரமங்கள், எதிர்ப்புக்கள் நடுவே போர் வெறியைக் குறைத்து, சமாதானமும், நட்புறவும் தழைக்கச்செய்ய மேற்கொண்டுவரும் இது போன்ற முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையே. ஏனெனில் நாளைய உலகம் இன்றைய இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் அல்லவா?

— லக்ஷ்மி





Regd. No. G / 31 TN / MS (N) / 516

Grand Gala Opening

on 9.10.1986

குதுகல ஆரம்பம்



கோஹில்சன்ஸ்

GOHELSONS

EXCLUSIVE SHOWROOM OF
FOOTWEAR & SAREES

HAVE A FASCINATING EXPERIENCE

Shop No. 8&9
Waikiki Complex
289 Purasawalkam High Road
Madras 600007

நவம்பர் 86
மாத இதழ்
விலை ரூ 2/-

# இலட்சியப் பெண்

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
17 DEC 1986
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8.



## தாயின் பங்கு இங்கு தவறாகவேப் புரிந்து கொள்ளப்படுகிறது




# பெண்ணுரிமை இயக்கத்தில் ஆணுக்கு என்ன வேலை ?

ஆணையர் ஆவணக்காப்பகம் ... 17 DEC 1986 தமிழ்நாடு ஆவணக்காப்பகம் எழும்பூர் சென்னை-8.

* தாலி பெண்ணுக்கு வேலி என்கிறார்களே.... சுகந்தி, கம்பம்.

அப்படியென்றால் விதவைகளும் திருமணமாகாத பெண்களும் வேலியற்ற பொதுமந்தைகளா?

அயோக்கியத்தனம் ....

ஒருவகையில் பார்த்தால் யானையைப் பற்றிக் கூறிய குருடர்களைப் போல தாலியைப் பற்றியும் அவரவர்களுக்கு சௌகரியமான வியாக்கியானங்களை சொல்லிக் கொண்டே அலைகிறார்கள். அதிருக்கட்டும் கோயில்களிலுள்ள ஆதிபராசக்தி, அகிலாண்டேசுவரிகளின் தாலிக்கே பாதுகாப்பில்லை. பிறகு தாலி யாருக்கு வேலி ?

* பெண்ணுரிமைப் போராட்டத்தில் ஒரு ஆணின் பங்கு என்ன?
சிவகுமார், திருச்சி.

பாதிக்கப்பட்டவர்களின் போராட்டத்தில் பாதிப்பை உண்டாக்கியவர்களில் சிலரும் சேரும்போது தான் கோரிக்கைகளின் நியாயம் நிருபணமாகிறது. வலுப்பெறுகிறது.

ஒதுக்கப்பட்டவர்களின் போராட்டத்தின் வெற்றி ஆதிக்கக்காரர்களின் தோல்வியிலும் அமையலாம்; அவர்களின் மனமாற்றத்திலும் அமையலாம்; முன்னது வெறியின் முடிவு. பின்னது விவேகத்தின் தீர்க்க தரிசனம்.

மேலும் ஆணாதிக்க எதிர்ப்பு போராட்டத்தின் நோக்கம் பெண்ணடிமைக்கு பதிலாக ஆணடிமையும், ஆணாதிக்கத்திற்கு பதிலாக் பெண்ணாதிக்கத்தையும் நிலை நிறுத்த நடத்தப்படும் ஆதிக்கப் போராட்டம் என்று அர்த்தம் தொனிக்கும்படியாகச் சிலரால் உணர்த்தப்பட்டுவிடுகிறது.

ஆனால் ஆணாதிக்கத்தை எதிர்க்க பெண்ணுரிமை இயக்கந்தான் நடத்த வேண்டுமே தவிர அதைப் பெண்கள்தான் நடத்த வேண்டும் என்பது முடிவற்ற பாலின அடிப்படையிலான வர்க்க போராட்டத்திற்குத் தான் வழி வகுக்க முடியும்.

* பெண்களுக்கு நமது சமுதாயத்தில் கொடுத்திருக்கும் உரிமைகளே போதுமானது.... இப்போதிருக்கும் சமூக அமைப்பால் இந்தியாவிற்கு என்ன குறைச்சல் வந்து விட்டது?
ஸ்ரீராம் சென்னை.

ஒரு மனிதக் கூட்டத்தில் ஒரு பகுதியினர் உரிமையிழப்பதால் ஆதிக்கம் செலுத்துவதாக கூறப்படும் பகுதியும் உண்மையில் வளர்ச்சியுறுவதில்லை.... மாறுக அதன் வளர்ச்சி தேங்கி சமுதாயம் முழுவதுமே நாற்றமெடுக்க ஆரம்பிக்கிறது. இதற்கு இந்திய சமுதயத்தைவிட வேறு என்ன சான்று வேண்டும். ....

இங்கே மானுடம் முழுமைக்கும் பொதுவான தத்துவங்களையும் தீர்வுகளையும் சித்திப்பதே அதர்மமாக முத்திரை குத்தப்பட்டது. இந்திய சிந்தனை சுவாசக் காற்று மண்டலம் அசுத்தப்பட்டுக் கிடக்கிறது. அதனால்தான் இங்கே ஒரு சாக்ரடீஸோ, வால்டேரோ தோன்ற முடியவில்லை.

ஏனென்றால் இங்கே 'மகான்'களும் சாதிக்காரர்களாக சுருங்கினர் 'மாமேதை'களும் ஆணாதிக்ககாரர்களாக நிமிர்ந்தனர்.

* அழகான பெண்ணை ஒருவனும், அடக்கமான பெண்ணை ஒருவனும் அறிவுள்ள பெண்ணை மற்றொருவனும் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். இதில் யாரைப் பாராட்டலாம்?
மேஜர்தாசன், ஈரோடு.

அழகுக்காக என்பவன்போகி; அடக்கத்திற்காகமட்டுமென்பவன் எஜமானன்; அறிவிக்காக என்பவன் துணைவன். போகியின் பயணம் - தற்காலிகமானது. எஜமானனின் வாழ்க்கை சுமையானது; துணையான வாழ்க்கையே சுகமானது; இயல்பானது; நிறைவானது

* பெண்ணுரிமைப் போராட்டம் என்றால் என்ன ?
விமலா, குன்னூர்.

பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற வாழ்க்கை முறைகளை எதிர்த்து பெண் ஏன் இப்படி இருக்க வேண்டும் என்று கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

விமர்சனங்களையும் திறனாய்வுகளையும் பொறுத்துக் கொள்ளாத, சரியாகப் புரிந்து கொள்ளாத இந்திய மனதால் இதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

* திருமணம் செய்து கொள்ளாமல் காலத்தை கழிப்பேன் என்று கூறும் பெண்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது என்ன ?
மேஜர்தாசன், ஈரோடு.

திருமணம் என்பது வாழ்க்கை துணையை அமைத்துக்கொள்ளுதல் என்கிறார்கள். அந்த 'துணை' தேவையா, இல்லையா; தேவை என்றால் எப்போது, எப்படி அமைத்துக் கொள்வது என்பது என்றுமே ஒரு தனி மனித பிரச்சனைதான். இந்தப் பிரச்சனையில் ஒரு ஆணுக்கு என்ன உரிமைகள் உண்டோ, அதே அளவிற்கு பெண்ணுக்கும் இருக்கப்பட வேண்டும்.

**இலட்சியப் பெண் பதில்கள்**



# தாயின் பங்கு இங்கு தவறாகவே புரிந்துகொள்ளப்படுகிறது

ஒருநாள் நான்காவது மாடியில் இருந்த என் வீட்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன், எதிர்வீட்டு ஜன்னலில் ஒரு பெண் மூன்று வயதுக் குழந்தையை ஜன்னலுக்கு வெளியே தலைகீழாகப் பிடித்துக் கொண்டு பயமுறுத்திக் கொண்டிருந்தாள். குழந்தை பயங்கரமாக அலறியது. சில நிமிடங்கள் இந்த தண்டனையை அளித்து விட்டுப் பின்னர் குழந்தையை உள்ளுக்கு எடுத்துக் கொண்டாள். இதைப் பார்த்த எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

குழந்தைக்காக மட்டுமல்ல. அந்தத் தாய்க்காகவும் சேர்ந்து மனம் இரங்கினேன். வருந்தினேன். தாய் இந்த தண்டனையைக் கொடுக்கும் அளவிற்கு ஒரு மூன்று வயதுக் குழந்தை என்ன தவறு செய்துவிட முடியும். அவள் குழந்தையை வெறுமனே பயமுறுத்தினுள் என்பது உண்மை தான், ஒருவேளை அவளது பிடி நழுவியிருக்குமானுல் குழந்தையின் கதி என்ன? உடனே அவள் ஒரு தாயாக இருப்பதற்குத் தகுதியற்றவள் என்று எளிதாகச் சொல்லி விடலாம். அப்படிப் பேசுவது தான் மக்களின் இயல்பும் கூட. ஆனுல் அந்தத் தாய் ஏன் அவ்வாறு செய்தாள்? அதற்கு எது தூண்டுதலாக இருக்க முடியும்? இங்குதான் நாம் நிதானித்துச் சிந்திக்க வேண்டும்.

அந்தக் குடியிருப்பில் இருக்கும் பெரும்பாலான குடும்பத்து ஆண்களனைவரும் மாதத்தில் பல நாட்கள் தொடர்ந்து வீட்டிற்கு வராமல் வேலைக்குச் செல்லக் கூடியவர்கள். எனவே அந்தப் பெண்ணுக்குக் கணவனின் உதவி இல்லாமலேயே எல்லா வேலைகளையும் கவனிக்க வேண்டிய கட்டாயம். அதோடு எந்தவிதத் திறந்த வெளியும் இடமும் இல்லாத பல மாடிக் குடியிருப்புகளில் குழந்தையும் விளையாடுவதற்கு வேறு இடமின்றி தாயையே சுற்றி வந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டிய சூழல், எனவே அந்த உள்ளங்களில் பெரிய மன அழுத்தம் ஒன்று உருவாகி விடுகின்றது.

குழந்தைகள் காரணமில்லாமல் எரிச்சலூட்டுவதாகவும், பிடிவாதம் பிடிப்பதாகவும் இருக்கும். அதோடு அவைகள் எல்லாவற்றிற்கும் பெரியவர்களைச் சார்ந்து இயங்க வேண்டியதாக இருக்கின்றது. குழந்தைக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் துணியும் அதே தாய் அதன் கழுத்தைப் பிடித்து நெறிக்கக்கூடிய சந்தர்ப்பமும் நேரிடுகின்றது. குழந்தைக்கு ஏற்படும் துன்பத்துக்காக அதனிடம் இரக்கங்காட்டுவது போலத் தாயும் இரங்கத்தக்கவளே. அவளும் மனித இனத்தைச் சேர்ந்தவளே.

ஆனுல் ஒரேடியாகத் தாயைத் தெய்வ நிலையில் வைத்துப் பார்க்கும் நாம், மனிதனுக்குரிய உணர்ச்சிகள் அவளுக்கும் இருப்பதாக நினைப்பதில்லை. இரண்டு வயதுக் குழந்தையை அடிப்பது கொடுமைத் தன்மை என்கிறோம். ஆனுல் குழந்தை ப்ளக்கைச் சொருகும் துளையில் விரலைக்கொண்டு நுழைக்கும் போது ஒரு தாய் என்ன செய்ய முடியும். உளவியல் அறிஞர்கள் இது போன்ற பிரச்சினைகள் தொடர்பாக நிறைய விதிமுறைகளை உருவாக்கி இருக்கின்றார்கள். என்றாலும் அவற்றைக் கொண்டு பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு காண முடியவில்லை. ஒவ்வொரு தாயின் சொந்த பொறுப்புகள், கடமைகள், குழந்தையின் தனித்தன்மை ஆகியவற்றைக் கொண்டே அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

டாக்டர் ஸ்போக் என்பவர் குழந்தைப் பராமரிப்பு பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். ஆனுல் அவரே தனது கருத்துக்களைப் பலமுறை மாற்றிக் கொண்டுள்ளார். அதோடு தாய்மார்களுக்குக் குழந்தை பராமரிப்பில் உண்டாகும் பிரச்சினைகளுக்கு மாருத, ஒருமுகமான, சரியான தீர்வைக் காண முடியவில்லை என்பதையும் ஒத்துக் கொண்டுள்ளார். வீட்டில் வேறு குழந்தைகளோ அல்லது பிறரோ இருக்கின்ற பட்சத்தில் ஒரு தாய்க்கும்,குழந்தைக்கும் ஏற்படுகின்ற அதிகமான மன அழுத்தம் குறைவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

மாருக எல்லாப் பொறுப்புக்களையும் தானே தனியாகச் சுமக்க வேண்டிய ஒரு தாய், குழந்தையை ஜன்னலுக்கு வெளியே தூக்கிக் காட்டியவளைப் போலச் செயல்படுகின்றுள். அந்தத்தாய் குழந்தைக்கு அன்பாகச் சொல்லி, பின்னர் கண்டித்து அதற்குப் பின் அடித்துச் சொல்லி எல்லாம் பயன்படாமல் போன பின் இந்த வழியைப் பின்பற்றியிருக்கலாம், இதே தாய் குழந்தையை அவ்வாறு செய்ததற்காகப் பின்னுல் வருந்தலாம். நம்மில் யாரும் அவளை அந்த நிலைக்கு ஆளாக்கிய சூழலைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.



புகைப்படங்கள் : Dr. விஜயசாரதி

அவளுக்கு நேர்ந்த இக்கட்டான நிலைமை பற்றியும் நினைத்துப் பார்ப்பதில்லை. தாய்மைப் பொறுப்பு என்பது மிகவும் கடினமான ஒன்று. அப்படி இருக்கும்போது தாய்மையை இறைமை நிலைக்கு கொண்டு சென்று அதன் காரணமாகத் தாய் என்பவள் அப்படி இருக்கக் கூடாது, இப்படி

தமிழில்
Dr. தமிழரசி



இருக்கக் கூடாது என்றுசொல்வதன் மூலம் அந்தத் தாய்மைப் பொறுப்பு மேலும் கடினமான ஒன்ருக ஆக்கப் படுகின்றது. சில நாட்களுக்கு முன்பு பெண்களுக்கான உதவி மையம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன்.

பலவகையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவியும் ஆலோசனை யும் அளிக்கப்படும் இடம் அது. அன்று அந்த மையத்தில் பணிபுரிய வந்த தொண்டர் ஓர் இளம் தாய்.

அவள் தன்னோடு தனது இரண்டு வயதுக் குழந்தையையும் அழைத்து வந்திருந்தாள். அந்தக் குழந்தை தண்ணீர் வேண்டும் சாப் பிட ஏதாவது வேண்டும் என்று தொடர்ந்து அழுதுகொண்டே இருந் தது. காரணமில்லாமல் சிணுங்கிக் கொண்டே இருந்தது. அந்தத் தாய் அதனைச் சமாதானப்படுத்த எவ்வ ளவோ முயன்று பார்த்தாள்.

அவளது அந்தப் பொறுமை என்னைத் திகைக்க வைத்தது. பின் சிணுங்கிக் கொண்டிருக்கின்ற அந்தக் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு தன் வேலைகளைக் கவனிக்க சென்று விட்டாள். அந்த நிலையி லேயே வருபவர்களுடன் பேசினாள். அவர்கள் கேள்விகளுக்கு விடை யளித்தாள். தாள்களைப் பிரித்து வைத்தாள்.

தன் வசதிக்காக அந்த குழந் தையை இறக்கி மடியில் வைத்துக் கொள்ளக்கூட அவள் முயற்சி செய்யவில்லை. பின் குழந்தைக்குப் பாலைச் சுட வைத்துக் கொடுத்தாள். அந்தக் குழந்தை வெறுப்போடு அதனைத் தள்ளி விட அப்பொழுதும் அந்தத் தாய் தன் வெறுப்பைத் துளி கூட காட்டவில்லை.

இதுதான் ஒரு தாய் நடந்து கொள்ள வேண்டிய முறையா? ஒரு சுயநலப் போக்கை இது அக் குழந்தையிடம் உருவாக்கிவிடாதா? மாருகச் சிறு வயதிலேயே அதற் குரிய பொறுப்பையும், கீழ்படிதலை யும் உணரும் வகையில் வாயால் கண்டித்தும் அடித்தும் எச்சரிக்கக் கூடாதா? எது சரியான வழி? உள வியல் துறையில் ஆயிரம் பி. எச். டி. செய்து விட்ட போதிலும் இதற்குச் சரியான விடை கிடைக்கவில்லை.

காரணம் ஒருவரும் ஒருமுகமான எண்ணத்துடன் சரியான பொறுப்பு டன் இந்தப் பிரச்சினையை அணுக வில்லை. உயிரில்லாத பொருளைப் பார்ப்பது போலவே இந்தப் பிரச் சினையையும் அணுகினர். ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு சமயத்தில் வெவ்வேறு வயதில் வேறுவேறுவித மாகச் செயல்படுகின்றது. அதைப் போலவே தாயும் வெவ்வேறு சமயங் களில் வெவ்வேறு விதமாகச் செயல் படுகின்ருள். இங்கு முதலில்சொன்ன ஜன்னலுக்கு வெளியே குழந்தையை நீட்டிய பெண்ணை நினைவுபடுத்தி கொள்ளுங்கள், இது போன்ற காட் சியைப் பார்க்கும் பார்வையாளர் களுக்கு வெறுப்பும், இரக்கமும் ஏற் படுவது மிக எளிது.

கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணின் மூன்று வயதுக் குழந்தை, அவளிடத்தில் இருக்கின்ற கஞ்சியை விட்டு விட்டு காலை உணவிற்கு முட்டை கேட்டுப் பிடி வாதம் பிடிக்கின்றது. தாய் அதற் காக அதனைக் கடுமையான வெயி லில் நிற்க வைக்கின்ருள். இங்கு அதனுடைய நிலையைப் புரிந்து கொள்ளாததற்காகக் குழந்தையைக் குற்றங் கூறுவதா? அவளுடைய கொடுமைத்தனத்துக்காகத் தாயைக் குறை கூறுவதா? ரூ 55 மாத வருமானமே வருவாயுடைய ஒரு பெண்ணை; வேறு ஒரு ஜீவனோடும் விட்டுச் சென்ற அவள் கணவனைக் குற்றம் சொல்வதா?

ஆதரவு இல்லாதவர்க்கு உதவி செய்ய முன்வராத சமுதாயத்தைக் குற்றம் சொல்வதா? அல்லது வறுமையை ஒழிக்காத அரசாங்கத் தைக் குற்றஞ் சொல்வதா? இந்தச் சூழலில் தாய் என்பவளுக்கும், அவ ளுக்குரிய நியாயமான பொறுப்புகள் எது என்பதற்கும் ஒருவரால் என்ன விளக்கம் கூற முடியும்.

பிச்சையெடுத்து வந்த ஒரு தட்டு உணவை பத்து வயதுச் சிறுவன் தெரியாமல் கீழே தள்ளி வீணாக்கி விட்டான் என்பதற்காக அவனைத் தெருவில் விரட்டி, விரட்டி சூடு வைக்க முயல்கிருள் பிச்சைக் காரத் தாய். தான் பசியோடு இருப்பதற்காக அவள் கோபப்பட வில்லை. தன் மகன் பசியோடு இருக்க வேண்டி நேருமே என்பதற் காக அவ்வாறு செய்கிருள். பொரு ளாலோ அல்லது உழைப்பாலோ உதவி கிடைக்காத தன்மையே இத்தகைய கொடுமைகளைச் செய் வதற்கு அடிப்படைத் தூண்டுதல் களாகின்றன.

தமிழ் எழுத்தாளரான ராஜம் கிருஷ்ணனின் புதிய சிறகுகள் என்ற நாவல் அளவுக்கு அதிகமாக மகனுக் குச் சுதந்திரம் கொடுத்த ஒரு தாயின் நிலையைக் காட்டுகிறது. அதில் ஒரு விதவைத்தாய் தன்னுடைய மகனை மிகுந்த அன்போடு வளர்த்து வரு கிருள், அவன் கேட்கும் எதையும் மறுக்காமல் அவனது "ஆடம்பர செலவுகளுக்கு இடமளிக்கிருள்."

அவன் திருமணமான பின்பும் கூட மிகுந்த செலவாளியாகவே இருக்கிருன். தனக்கு தேவையான செலவு அனைத்துக்கும் தன் தாயைச் சார்ந்தே வாழ்கின்ருன். அவன் மனைவியும் அவனை விட்டுச் சென்று விடுகிருள்.

போகும்பொழுது அவன் தாயி டம் மகனிடம் அன்பு காட்டுவதுஎன் பது அவனது தவருன போக்கிற்கும் ஊதாரித்தனத்திற்கும் இடமளிப்பது அல்ல, அவன் தன் சொந்தக்காலில் நிற்கும் தகுதியை அவனுக்கு உண் டாக்குவதே உண்மையான அன்பு என்று அந்தத் தாயின் குற்றத்தைச் சுட்டிக்காட்டி விட்டுச் செல்கிருள்.







இறுதியில் அவன் தாயின் வீடு, சேர்த்து வைத்த பணம் எல்லாவற் றையும்அழித்து விடத்தாயும்அவனை வெறுக்கத் தொடங்குகிருள். ஒரு குழந்தையின் பிற்கால நலனுக்காக அவனது நல்ல எதிர்காலத்துக்காக அடித்தும், தண்டித்தும் அவன் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டு வது இன்றியமையாததாகின்றது, ஆனால் நியாயமான தண்டனை எது? அளவுக்கு அதிகமான தண்டனை எது?

ஜன்னல் வழியே வெளியேகாட் டப்பட்ட குழந்தைக்கு ஒருவேளை அப்பொழுது ஏற்பட்ட பயத்தின் சுவடு காலம் முழுதும் இருக்க நேர்ந்துவிட்டால் அந்தத் தாய்க்கு எந்த ஒரு உணர்வு அந்தத் தண் டனையைக் கொடுக்கத் தூண்டி யதோ, அதே உணர்வு அவளைப் புத்தி பேதலிக்கும் நிலைக்கும் தள்ளி விடுகின்றது. இங்கு குழந்தைக்கும், தாய்க்கும் இடையே காணப்படு கின்ற உடல் வலிமை வளர்ச்சி ஆகி யவற்றின் காரணமாகவே இந்தத் தாயின் செயலைக் 'கொடுமை' என்று கூறுகின்ருேம். அதோடு தாயை எட்டாத உயரத்தில் வைத்துப் பார்க்கும் பார்வையின் வெளிப் பாடே அவளது செயலை கொடுமை என்று கூறும்படி செய்வதை நாம் உணர்வதில்லை. ஒரு ஆசிரியர், தந்தை, சகோதரன் செய்யும் செயலையே அவளும் செய்கிருள். அதைவிடக் கொடுமையை அவள் செய்து விடவில்லை.

அவளுக்கும் சோர்வு ஏற்படுவ துண்டு, தன் நிதானத்தை இழந்து உணர்ச்சி வயப்படுவதும் உண்டு. இக்கருத்தை மறப்பது அறிவின்மை யாகும்.

ஒரு தாய் கொடுமை செய் கிருள் என்று அருவருப்பதை விட அவளை அந்த நிலைக்குக் கொண்டு சென்ற சூழலைப் பற்றி சிந்தித்துப் பார்த்து அதிலிருந்து அவளை விடு விப்பதற்கான மாற்று வழிகளைப்பற்றி சிந்திக்க வேண்டும் அவளுக்குச் சிறிது வாய்ப்பளித்து, நாமும் கை கொடுத்து உதவி செய்து அதன் மூலம் அவள் மன இறுக்கத்தை நீக்கி, மன நிம்மதி ஏற்படச் செய்ய லாம். மேலும் தாய்மார்கள் என்ற முறையில் அவர்களே அவ்வப் பொழுது சுய பரிசோதனை செய்து மன இறுக்கத்தின் எல்லையை அடையும் போது தானே தன்னை நிதானப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அது அவ்வளவு எளிதான தல்ல.

தேவைகளும், பலவீனமும் கொண்ட மனிதர்களே தாய்மார் களும். பிள்ளைகள் வளர்ந்ததும் அந்தக் கடினமான காலம் கடந்து விடுகின்றது. இருப்பினும் முடிந்த வரையில் இந்தச் சுய பரிசோதனை யைத் தொடர்ந்து மேற்கொள்வது நல்லது.

நன்றி - 'INDIAN EXPRESS'

# காதலுக்கு

சங்கர்

நான் கொஞ்சம் வித்யாசமானவன். எவருக்கும் துன்பம் வரக்கூடாது, எல்லோர் கிட்டேயும் திருப்தியாய் நடந்துக்கணும்னு நினைக்கிறவன் நான்.

ஆனால் என் நண்பன் ரமேஷ் புலம்புவான்.

"டேய் சங்கர், எல்லோரையும் திருப்தி பண்ண நினைக்கிறவன் கடைசியில் தனக்கு நிம்மதி இல்லாமப் பண்ணிக்குவான். நீயும் அப்படித்தாண்டா. கடைசியில் உன்னோட ஆசைகளும் நிறைவேறும, உனக்கும் திருப்தி இல்லாம நீ நடுத்தெருவுலதான் நிற்கப் போறே. கை நீட்டிக் கதறப் போகிறே. தலை தலையாய் அடிச்சுக்கப் போற. இதோ பார்ரு, இந்த உலகத்திலே யாராலியுமே எல்லோரையும் திருப்தி பண்ணிட முடியாது. நாலு பேராவது எட்டி நின்னு குறைபேசவே செய்வாங்க. வேணும்னு அது நாற்பது பேர்களாய் இருக்கட்டும். உனக்காவது நிம்மதி கிட்டுமே. பேசாமல் நீ உஷாவையே கல்யாணம் பண்ணிக்க. லைஃபை என்ஜாய் பண்ணுடா. வேஸ்டாக்கிடாதே. இந்த யுகத்தில் கூட இப்படி ஒரு இடியட்டா! சே ... சே..., ஆனாலும் நீ சுத்த மோசம்டா."

என்று அடிக்கடி பிரசங்கம் பண்ணி என்னை மாற்ற முயல்வான்.

ஆனால்,

நான் மாறவில்லை.

இப்போது அவனைத் தேடிப் பிடித்து அவன் வாயில் ஸ்வீட்டைப் போடவேண்டும்.

அவன் கூறியது 100/100 கரெக்ட்.

இப்போது எனக்கு நிம்மதி வேண்டும்.

ரமேஷின் அறிவுரையை அப்போதே ஏற்றிருந்தால், இப்போது நிம்மதியைத் தேடிக் கொண்டிருக்க வேண்டாம்.

காலம் கடந்த ஞானோதயம்.

சே!

வேஸ்டாகி விட்டேனே?

யாரையெல்லாம் திருப்தி பண்ண வேண்டுமென்று முனைந்து நின்றேனே, அவர்கள் அனைவருமே இப்போது என்னை அலட்சியமுடனும், ஏளனமுடனும் பார்க்கும்படி... அவர்கள் அதிருப்தி கொள்ளும் விதமாக ஆகிவிட்டிருக்கிறேன்.

என்னுடை வீக் பாய்ன்டைக் குறி பார்த்து அடித்து வீழ்த்துகிறார்கள்!

உஷா வந்து விட்டால் எல்லாமே பாழாகப் போய்விடும் என்று கூறியவர்களுக்காக, நான் அவளை வேண்டாம் என்று நிராகரித்துவிட்டு, காந்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்.

அதுவே 'நான் வேஸ்டாகப் போவதற்குப் போட்டுக் கொண்ட முதல் அஸ்திவாரம்.

"டேய் சங்கர். காந்தியைப் போல அடக்கமானப் பெண்ணைக் காணவே முடியாது. வேலைகளில் சுத்தம், விருந்து உபசரணைகளில் அன்பு. அவளை நீ பண்ணிக் கொண்டால் உறவும் நிலைக்கும். எங்களுக்கும் திருப்தி. உஷாவை மறந்துட்டு, காந்தியைப் பண்ணிக் கோடா" என்று கெஞ்சினாள் அம்மா.

நான் அம்மாவைப் பார்த்தேன்.

அப்பாவும் தங்கையும் என்னையும் பார்த்தனர்.

எனது உறுதியான பதில் அவர்களை அயரப் பண்ணிவிட்டது.

அம்மா அழத் துவங்கிவிட்டாள்.

'பாருடா, என் கண்ணீர் கூட வைர மூக்குத்தியின் மீது தாண்டா போய்விழும். கேவலம் வயிற்றைக் கழுவ உத்யோகம் பார்க்கும்ஒரு தரித்திர ஜீவனை எனக்கு மருமகளாய்ப் பார்க்கிறியேடா?'

அவள் பார்வை இப்படி தான் கேட்டது.

உஷாவை மறுப்பது ஏழை என்பதால் மட்டும் தான்.

வருகிறவள் வைரம், தங்கம், வெள்ளி என்று பூட்டிக் கொண்டு உலா வரவேண்டுமாம்!

சொல்வது மட்டும் உறவுக்கு என்று.

இதே பல்லவியைப் பாடிப் பாடி என்னை மூளைச் சலவை பண்ணிவிட்டனர்.

உறவுக்கு முன்னே ஊமையாய் நின்றதற்கு இப்போது தண்டனையை அனுபவிக்கிறேன்.

மணமான புதிதில் மயங்கித் தான் போய்விட்டேன்.

'என்னோட செலக்ஷனுக்கும்! ஒரு மறுவைக் கூட உன்னால் காண முடியாது' என்று நிமிர்ந்து பார்த்தாள் அம்மா!

ஆனால்,

நாட்கள் ஓடிய போது,

தூணிலிருந்து புறப்பட்டு வருவதற்குப் பதிலாக அந்த நரசிம்ம அவதாரம் என் மாமனார் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்திருந்தது.

சகலவிதமான ஆயுதப்ரயோகங்களையும் நடத்தினாள்.

நானோ நிராயுதபாணியாய் நின்றேன்.

நான் உஷாவைக் காதலித்த விஷயம் ஒன்றே இவளுக்குப் போதுமானதாக இருந்தது.

எதிரணியில் கவசம் பூண்டு நின்று கொண்டாள். எனது காதலை மறைத்து அவளுக்கு வஞ்சனை பண்ணி விட்டோமாம். அனைவரும் துரோகிகளாம்.

'ஒரு கை பார்க்கிறேன்!' என்று சவால் விடுகிறாள்.

நானோ,

ஊமையாய் ... செவிடாய் ... அனந்தலாய் ...,

உணர்வற்ற பிரேதமாய்...,

ஓ...என் விழிகளும் மரத்து விட்டன!

வசந்த காலத்து மலர்களை நினைக்கின்றேன்.

ஓ... என் உஷாவே!

உன்னை அநாதைத் தீவாய் ஆக்கியதற்கா எனக்கு இந்தத் தண்டனை?

அவள் வடக்கே மாறுதல் பெற்றுப் போய்விட்டாள் இதயப் புண்ணைத் தொலைவில் போய் ஆற்றிக் கொள்ளலாமென்று.

நான் தெற்கே வந்தேன்,



எங்கே போனாலும், எண்ணங்களும் உடன் தானே பயணிக்கின்றன!

'மனைவியை ஒழுங்கா வச்சு வாழத்தெரியாத பயல்!'

ஊர் சூட்டியபட்டம் இது.

உறவு குறைபாடியது.

இவர்களைத் திருப்தி பண்ண முயன்ற எனக்கு இதுபோதாது. இன்னமும் வேண்டும்.

"வேப்ப மூடு ஜங்ஷன்!" என்ற கண்டக்டரின் குரல் என் சிந்தனையை உதறி விட்டது. பஸ்ஸைவிட்டுக் கீழே இறங்கினேன். நடக்கலானேன்.

எதிரே பகவதி சூபர்மார்கெட்!

அங்கு ஜவுளிப் பிரிவில் பணி புரியும் கோபாலைப் பார்க்க வேண்டும்.

மெடிகல் செக்ஷனைத் தாண்டும் போது என்னிடம் ஒரு தேக்கம்.

நின்றேன்.

உஷாவா?

அவளே தான்!

கையில் சிறிய பார்சலுடன் திரும்பி வந்தாள். அவளின் பார்வை என்னில் இடறிற்று.

ஆனால்,

ஆனால் அதில் சலனமே இல்லை.

நிறையவே அதிர்ந்தாலும்.

"ஹலோ!" என்றேன்.

அவளிடம் எதிரொலிப்போ, எதிரொளிப்போ இல்லை.

நிற்காமல் போய்க் கொண்டே இருந்தாள்.

ஏன் இப்போது இவ்வளவு நிர்த்தாட்சண்ய விலகல்? புறக்கணிப்பு?

எதுவாயினும் பதிலாய் முறுவலித்திருக்கலாம். ஒரு மரியாதைக்காக உத்தேசித்து நின்று பேசிவிட்டுப் போயிருக்கலாம்.

எனினும் மறுபடியும் நானே,

"ஹலோ!" என்றேன்.

நின்றவள் திரும்பினாள்.

காகித முகமாய்த் தெரிந்தது.

"சௌக்யமா உஷா! என்

# வராதீங்க

**உமா கல்யாணி**

மேலே உனக்குக் கோபம் இருக்கும். ஆனால் இப்படி நேர் நேராப் பார்த்தும் பாராதது போலப் போறியே..." என்று மிருதுவான குரலில் கேட்டேன்.

புருவ மேடுகளைக் குவித்து, வியப்போடு என்னை நோக்கினாள்.

"வாட்! உஷாவா? யார் அது? நான் உஷா இல்லே. என் பெயர் உதயா. நீங்க ஏதோ மிஸ்டேக் பண்றீங்க போலிருக்கு" என்றாள் நிதானக் குரலில்.

இப்போது என்னில் நிஜமாய் அதிர்ச்சி!

"வாட்! நீ ..., ஸாரி ... நீங்க உஷா இல்லியா? உதயாவா? அச்சாய் உஷாவைப் போலவே இருக்கீங்க?" என்று வினவிய எனது குரல் தடுமாறிற்று.

"வாட்! என்னைப் போல ஒருத்தியா!"

என்னை விட ஆச்சர்யம் காட்டினாள்.

பிறகு,

"நான் வர்றேன். பஸ்ஸுக்கு டயமாச்சு" என்றவள் விருட்டென்று போய் விட்டாள்.

இவள் உஷா இல்லையா?

அப்படியானால்?

என்ன அபூர்வமான உருவ ஒற்றுமை!

உதட்டின் மேலுள்ள மச்சம் கூடவா அப்படியே இருக்கும்.

இவளிடம் இருக்கிறதே!

நான் நகரலானேன்.

உஷா

நான் உஷாவேதான். உதயான்னு சொன்னது பொய். பணத்துக்கு ஆசைப்பட்டுக் காதலை மறுத்த இவரோட இனிமேல் எதற்கு உறவு கொண்டாடணும்?

இவரால் மனசை மாற்றி, ஆளை மாற்றிக் கல்யாணமும் பண்ணிக் கொள்வார். பெண்டாட்டியோட இப்ப சரியா வாழலேன்னு கேள்வி! அங்கே கசப்பு வந்ததும், பழைய உறவைப் புதுசு பண்ண ஓடிவர்றார்.

தற்செயலாய்ப் பார்த்துட்டு நானும் கண்டுக்காம ஒதுங்க நினைச்சா, பின்னாடி வர்றாரே. திடீர்னு இங்கே டிரான்ஸ்ஃபர் ஆயிடுச்சு. இவரும் இங்கே இருக்கார் போலிருக்கே, இதுவரை கண்ணில் படலே. இப்ப பட்டாச்சு. ஆனாலும் என்ன, இப்ப பூசின கரியே இந்த ஜென்மத்துக்கும் போறுமே. என்பக்கம் திரும்ப மாட்டாரே.

முதுகெலும்பு இல்லாத கோழை!

பணம், பணம்னு அலைகிறவருக்கு காதல் ஒரு கேடா?

ஆளையே மாற்றி செலக்ட் பண்ணினது அவர்.

நான் பெயரை மட்டும்தானே மாற்றிச் சொன்னேன்.

கோழை!

முதுகெலும்பைத் தொலைத்து விட்ட கோழை? இவங்கல்லாம் ஏன் காதலிக்க வர்றாங்க? த்தூ!






# பார்வையைப் பாதுகாப்போம்

மருத்துவப் பகுதி

DR. V.M. லோகநாதன்

நாம் இந்த உலகத்தில் வாழ்கிறோம் என்ற நினைப்பை உண்டாக்குவதே நம் பார்வைதான். ஒரு நிமிடம் கண்ணை மூடிக்கொண்டால் இந்த உலகமே இருண்டு விடுகிறது. கண்ணில்லாவிட்டால் நாம் எங்கிருந்தாலும் ஒன்றுதான். இந்த உலகில் அரிய காட்சிகளை அற்புதங்களை நம் பார்வை இருந்தால்தான் அனுபவிக்க முடியும். எனவேதான் பார்வையைக் காப்பது நம் கடமையாகும்.

கண்நோய்கள் பலவகைப்படும். கண்களில் மட்டும் நோய் ஏற்பட்டு கண்கள் குருடாகலாம். உடம்பில் ஏற்படும் நோய்களான, இரத்தக் கொதிப்பு, நீரழிவு நோய், மது அருந்துதல், கொடிய மருந்துகளை உட்கொள்ளுதல் போன்றவற்றால் குருடாகலாம். கண்களில் மட்டும் வரும் நோய்களான கண்நீர் அழுத்த நோய் (Glaucoma), கண்புரை நோய் (Cataract) கருவிழியில் புண், வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவால் உண்டாகும் மாலைக் கண்நோய், கிட்டப்பார்வை (Myopia) தூரப் பார்வை (Hypermetopia) போன்ற நோய்களுக்கு கண்ணாடி அணியாமல் காலம் தாழ்த்திக் கொண்டு போதல் போன்றவை பார்வையைக் கெடுக்கின்றன.

## வைட்டமின் 'ஏ' சத்துக்குறைவு:

நம் கருவிழியில் உள்ள 'ஒளி'க்கு காரணம் இந்த வைட்டமின் 'ஏ' சத்துத்தான். தினமும் 5000 — 6000 யூனிட்டுகள் நமக்கு தேவைப்படுகிறது. கீரை, பழங்கள், காய்கறிகள், பால், முட்டை, மீன் இவற்றிலிருந்து இச்சத்து நமக்குக் கிடைக்கிறது. விழித்திரையில் உள்ள ராட் (Rods) என்ற ஒளி உணர்ச்சி ஏற்படுத்தும் திசுக்களுக்கு இரவில் கண் தெரிய வைட்டமின் தேவை.

எனவேதான் இச்சத்து குறைவாக உள்ள குழந்தைகளுக்கு, இரவில் கண் தெரியாமல் போய் விடுகிறது. இந்த உணவுவகைகள் உட்கொண்டு, இதைக் குணப்படுத்த முடியும்.

நமது கிராம மக்கள் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் உடனே தகுதிபெற்ற மருத்துவரிடம் காண்பித்து ஆலோசனை பெறுவதில்லை. குழந்தையின் வயிற்றுப் போக்குக்கு காரணம் "தொக்கம்" என்று கூறி "குடல்தட்ட" நாட்டு வைத்தியரிடம் எடுத்துச் செல்கிறார்கள். இல்லாவிட்டால் "சீரடித்து" இருக்கிறது என்று கூறி வைத்தியமே செய்வதில்லை. எனவே உடலில் வயிற்றுப்போக்கின் காரணமாக வைட்டமின் 'ஏ' சத்து குடலிலிருந்து உறிஞ்சப்படுவதில்லை. திடீரென்று ஏற்படும் வைட்டமின் "ஏ" குறைவால் கருவிழியில் புண் ஏற்பட்டு கண்களை திறக்க முடியாமல் கூச்சம் ஏற்பட்டு குழந்தை கண்களை மூடிக் கொள்கிறது. இப்போதுதான் நமது கிராமத்து முதியவர்கள் இந்தக் குழந்தைக்கு "கண் அம்மை" என்று கூறி ஒரு சிகிச்சையும் செய்யக் கூடாது என்று ஆணையிடுகின்றனர். காரணம் "ஆத்தா கோவித்துவிடுவாள்" மூன்று அல்லது நான்கு நாட்களில் குழந்தைக்கு கருவிழியில் புண் உண்டாகி பார்வையை அறவே இழந்துவிடுகிறது. இப்படி பார்வையிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் நமது பாரதம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. எனவேதான் உண்ணும் உணவில் சத்துள்ள, விலை அதிகமில்லா கீரை, பழங்கள் பால் கொடுப்பது அவசியம். நம்மிடையே உள்ள மூடப்பழக்கங்களை மாற்றி, வயிற்றுக்போக்கு ஏற்பட்டால் உடனே தகுந்த தேர்ச்சி பெற்ற மருத்துவரிடம் காண்பிக்க வேண்டியது அவசியம்.

## புரைநோய்:

புரைநோய்! (Cataract): கண்ணில் உள்ளே இருக்கும் குவி வில்லையானது வயதானவுடன் பழுப்பு ஏறி வெளுத்து நிறம் மாறிவிடுகிறது. இதனால் பார்வை சிறிது சிறிதாகக் குறைந்து நாளடைவில் முழுவதும் மறைந்து கண்தெரியாமல் போய்விடுகிறது. வட்ட வடிவத்தில் தெரியும். இதற்குத் தான் புரை நோய், கண்ணில் பூவிழுதல் என்று கூறுகிறார்கள். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குதான் கண் முகாம்கள் நடத்தி அறுவை சிகிச்சை செய்து கண்ணாடி வழங்குகிறோம். நமது தமிழகத்தில் இந்நோயினால் பாதிக்கப்படுவர்கள் ஆண்டுதோறும் 1 லட்சம் பேர் ஆவர். இந்நோய் குணப்படுத்தக்கூடியது.

புரைநோய் 40 வயதுக்கு மேல் தான் வரும். 50 முதல் 60 வயது

உள்ளவர்களுக்கு அதிகம் காணப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவர்கள் புரை முற்றியவுடன்தான் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் எனக்கூறி நோயாளிகளை "புரை முற்றியவுடன் வாருங்கள்" என்று அனுப்பிவிடுவார்கள்.

ஆனால் மருத்துவம் வளர்ந்து விட்ட இந்நாட்களில், நோயாளிகள் புரைநோயால் தினமும் தான் செய்ய வேண்டிய அலுவல்களை நன்கு கவனிக்க முடியவில்லை என்ற நிலை வளர்ந்தாலே அறுவை சிகிச்சை செய்யலாம். மேலும் சமீபத்தில் புரையை நீக்கி அதற்கு பதில் அறுவையின்போது பிளாஸ்டிக் போன்ற சிறிய வில்லையை வைத்து பொருத்தி விடலாம். பின்பு கண்ணாடி அணியவேண்டிய அவசியம் இராது.

குழந்தைகளுக்கும் பிறவியிலேயே புரைநோய் வரலாம். உடனே சிகிச்சை செய்வது அவசியம்.

### கண் நீர் அழுத்த நோய்:

இவ்வியாதியால் கண்ணில் உள் அழுத்தம் அதிகப்பட்டு நரம்பு கெட்டு குருடாகிறார்கள். 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே இது சாதாரணமாக வரும். கண்பார்வை குறைவு. தலைவலி, விளக்கை சுற்றி வர்ண கோடுகள் தெரிதல் இவ்வியாதியின் அறிகுறிகள், முக்கியமாக பக்கப்பார்வை பாதிக்கப்படுவதால் கடைசிவரை கண் தெரிகிறது. ஆனால் நாளடைவில் கண் நரம்புப் பாதிக்கப்பட்டு கண் முழுவதும் மங்கி விடும். எனவேதான் 40 வயது ஆகும்போது கண் மருத்துவரிடம் காண்பித்து நீர் அழுத்தத்தை சோதனை செய்து கொள்ளவேண்டும்.

### காரமான மருந்துகள்:

நமது மக்களிடையே, கண்கள் சிவந்தால் அல்லது உறுத்தினால் நந்தியாவட்டை, பச்சிலை, வெங்காயம், சீனிக்காரம் போன்ற காரமான மருந்துகளைப் போடும் பழக்கம் இருக்கிறது. இந்த மருந்துகள் கருவிழி முழுவதையும் புண் உண்டாக்கி கெடுத்து விடுகிறது. கண்ணில் வேதனை உண்டாகி பார்வை போய் விடுகிறது. இவ்வாறு காரமான மருந்துகளை போடுவதன் விளைவாக தமிழகத்தில் தினமும் இரண்டு பேர் குருடாகி வருகிறார்கள்.

தலைவலி, கண்களில் அடிக்கடி சிவப்பு நிறம், உறுத்தல், அரிப்பு ஆகியவை தூரப்பார்வை குறைவால் உண்டாகின்றன. மருத்துவரிடம் காண்பித்து சீக்கிரம் கண்ணாடி அணிந்து கொண்டால் இக்குறையைப் போக்கலாம்.

### கிட்டப் பார்வை:

(Myopia) மாணவர்களிடையே இக்குறை அதிகம் காணப்படுகிறது. ஆசிரியர் கரும்பலகையில் எழுதும் எழுத்துக்கள் தெரிவதில்லை. ஆரம்பத்தில் கண்கண்ணாடி அணியாவிட்டால் பின்பு நிரந்தரமாக பார்வைக் குறைவு ஏற்பட்டுவிடும்.

### மாறுகண்

பிறவியிலேயே ஏற்படும் மாறு கண்ணுள்ள குழந்தைக்கு ஆபரேஷன் செய்தாலும் பார்வைக் குறைவு ஏற்படும். மாறுகண் அதிர்ஷ்டத்தின் அடையாளமல்ல.

உடன் பிறந்த சகோதரியின் மகளையோ மகனையோ மனம் செய்வதாலும், அத்தைப் பிள்ளையை மணப்பதாலும் கண் கோளாறுகள் உள்ள குழந்தைகள் பிறக்கின்றன. நமது சமுதாய அமைப்பில் தவிர்க்க முடியாத இப்பழக்கத்தை தவிர்க்க முயற்சிப்போம்.

நீரழிவுள்ளவர்களில், 50 சதவிகிதத்தினருக்கு 5 அல்லது 10 ஆண்டுகளுக்குமேல் விழித்திரையில் ரத்த கசிவுகள் ஏற்படும். இதை கண் மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை பெறாவிட்டால் கண்பார்வை முழுவதும் இழக்க நேரிடும்.

### ரத்தக் கொதிப்பு:

தக்க தருணத்தில் ரத்தக்கொதிப்பிற்கு மருந்து உட்கொள்ளாவிட்டால் விழித்திரையில், ரத்தம் கசிந்து பார்வை போய்விடும்.

வாழ்வதோ சில வருடங்கள்! இருக்கும்வரை இந்த அற்புத உலக வாழ்க்கையை முழுவதுமாக கண்டு களிக்க நம் கண்களை நாம் காப்போம்.

– பேட்டி: A.S.K.

### பெண் பைலட்டுகள் தேர்வு

இந்திய விமானப் படையில் பெண் பைலட்டுகளை பணியில் அமர்த்துவதுபற்றி இந்திய அரசாங்கம் பரிசீலித்து வருவதாக ஏர் மார்ஷல் T. J. டெவா அறிவித்திருக்கிறார். சீனு, ரஷ்யா, இங்கிலாந்து இஸ்ரேல் போன்ற நாடுகளில் விமானப் படையில் பெண் பைலட்டுகளை அமர்த்தியிருக்கிறார்கள். இந்தியாவிலும் இத்தகைய முயற்சி வரவேற்கத்தக்க விஷயம்.

### எழுத்தறிவு

இந்தியாவில் உள்ள பெண்களில் முக்கால்வாசிப் பேருக்கு எழுத்தறிவில்லை. இவர்கள் உலகில் உள்ள எழுத்தறிவு கற்றவர்களில் எண்ணிக்கையில் 82 சதவீதம் ஆகும். தங்கள் உரிமைகளை நிலைநாட்ட பெண்களுக்கு வலிமை கல்வி மற்றும் புதிய மதிப்பீடுகள்பற்றி அறிவதனால்தான் வரும்.

யுனிசெப் நிறுவன ஒத்துழைப்புடன் இந்திய அரசு பெண்கள், சிறுமியர்களுக்கு முறைசாரா கல்வி வழங்குவதற்கான திட்டங்களை வகுத்துள்ளது. நகர்ப்புறங்களில் வசிப்போர், ஆலைத்தொழிலாளர் இடையே எழுத்தறிவு இன்மையை ஒழிக்க 'கிராமிக் வித்யாபீத்' அமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்துக்கு நல்ல ஆதரவு உள்ளது.

# வார்ப்புகள்

பாரதி



சந்தியாவுக்கு வளைகாப்பு! தலை கொள்ளாமல் பூவைச் சுற்றி; கை நிறைய வளையல் அடுக்கியிருந்தார்கள்.

கையில் காமிராவுடன் அலைந்து கொண்டிருந்த சந்தியாவின் அண்ணன் "சீக்கிரமே என் பிள்ளைக்கு ஒரு அழகான பெண்ணை பெத்துக் கொடு" என்று அவளைச் சீண்டினான்.

பக்கத்தில் ஆரத்தி தட்டுடன் நின்று கொண்டிருந்த சந்தியாவின் மாமியார் ஷாக் அடித்தவள் போல் அலறினாள். "எங்க வம்சம் தழைக்க ஒரு ஆண் குழந்தை பிறக்காதான்னு நான் ஏங்கிண்டிருக்கேன். நீ என்னடாப்பா. இப்படி ஒரு வார்த்தை சொல்றியே" என்றாள்!

"ஏன் மாமி, பெண் குழந்தை பிறந்தா மட்டும் உங்க வம்சம் தழைக்காதா என்ன?" என்று அவளை வம்புக்கிழுத்தாள் சந்தியாவின் தங்கை!

"வம்சம் தழைக்கிறது இருக்கட்டும்டிம்மா; எனக்கு ஏற்கனவே ஒரு பெண் கல்யாணத்துக்கு காத்திண்டிருக்கா. இதுல என் பிள்ளைக்கு வேற பெண் பிறந்து அவனை கடனாளியாக்கணுமாக்கும். பையன்னா வரவு; பெண்ணா செலவுதான் தெரிஞ்சுக்கோ"என்று நிஷ்டூரமாகச் சொன்னாள் மாமியார்.

மன்னியின் அலங்காரத்தில் லயித்திருந்த அனுவிற்குத் தன் அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டு அவமானமாக இருந்தது. இருப்பு கொள்ளாமல் நெளிந்தாள்.

சந்தியாவின் அம்மா நிலைமையை சமாளிக்க எண்ணி "சம்மந்தியம்மா; நமக்குப் பேரன் பிறக்கணும்னுதான் சுந்தர காண்டம் வாங்கித் தந்து சந்தியாவை தினமும் படிக்கச் சொல்லிருக்கேன். பலன் இல்லாப் போகாது" என்றாள்.

திடீரென்று தான் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டு விட்டதுபோல் தோன்றியது சந்தியாவுக்கு பாஸாக வேண்டுமே; வேலை கிடைக்க வேண்டுமே; நல்ல கணவனாக அமைய வேண்டுமே என்று இதுவரை தான் அனுபவித்த திகலுடன் கூடிய எதிர்பார்ப்புகளை விட தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஆணா பெண்ணா என்பதில் தான் தன் எதிர்கால அந்தஸ்தே தொக்கி நிற்பதாகத் தோன்றியது.

அவளுடன் வேலை பார்க்கும் பவானியின் நிலைமை இன்னும் மோசம். பிரசவத்திற்காக அம்மா வீட்டுக்குப் புறப்பட்ட பவானியிடம் அவள் மாமியார் "ஆண் குழந்தை பிறந்தா திரும்பி இந்த வீட்டுக்கு வா! பொட்டையப் பெத்தா வரவே வேண்டாம், என்று கண்டிப்பாக சொல்லி விட்டாளாம். பவானியின் மாமியாரைவிடத் தன் மாமியார் எவ்வளவோ மேல்" என்று சமாதானம் தேடிக் கொண்டாள் சந்தியா!

வேறு எந்த ஜீவராசிகளிலும் இல்லாத அளவுக்கு ஆண் பெண் பேதம் மனித இனத்தில் மட்டும் ஏன் இப்படி நச்சு வளையமாகப் பற்றியிருக்கிறது, ஆண் ஆளப் பிறந்தவன், பெண் அடங்கி நடக்க வேண்டும் ஆண் பலசாலி, பெண் பலவீனமானவள். ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள். இந்த பேதங்களை நடைமுறையில்அர்த்தமற்றதாக்கிவருபவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவு!

இந்த சமூக அமைப்பில் பாதிக்கப்படும் பெண்கள் சீறி எழாமல் மௌன அங்கீகாரம் அளித்துக் கொண்டிருப்பது தான் அதிர்ச்சியான விஷயம்! இந்த சராசரித்தனமான போக்குக்கு எது காரணம்?

உடல் அமைப்பில் இருபாலாருக்கும் வித்தியாசம் உண்டு; ஒப்புக் கொள்கிறோம். வித்யாசமே பலவீனமாகி விடுமா என்ன? பலவீனமானது, என்பதைவிட பலவீனமாக உணர்த்தப்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது அதனால் தான் இந்த மௌன அங்கீரம்.

ஒரு பெண் பிறப்பதற்கு முன்பே எப்படிப்பட்ட வரவேற்பு பார்த்தீர்களா? அவளை வளர்க்கும் முறை பற்றியும் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போமா?

ஒரு விஷ்யத்தை மறந்து விடக் கூடாது இங்கே; இந்த சமூகஅமைப்பில் எந்த ஒரு பெண்ணும் வளர்க்கப்படுவதில்லை. அவளுக்கென்றே தாயாரிக்கப்பட்ட பிரத்யேகமான அச்சில் வார்க்கப்படுகிறாள்.

ஆம்! நமது பெண்கள் இயல்பாக ஆரோக்கியமான வளர்ப்புகள் அல்ல! வகுக்கப்பட்ட பாதையில் கட்டி இழுத்துச் செல்லப்படும் பயணிகள் அல்ல கைதிகள்; நிர்ணயிக்கப்பட்ட அச்சின் வார்ப்புகள்!.

தொடரும்....



உஷா சுப்ரமணியன்

# நினைவில் நழுவாத பெண்கள்

ஒருவயதுக் குழந்தை கூடக் கையில் வைத்திருக்கும் கிலு கிலுப் பையைப் பறித்தால்வீல், என அலறுகிறது. மழலைப்பேச்சுவந்தவுடனேயே "என்னுதது...... எனக்குத்தா......" என்று தனக்கே எல்லாம் வேண்டும் என்கிறது...... ஐந்து வயதில், பல்ப் பத்திலிருந்து; பறவை இறகு வரை அத்தனையும் தனக்கே என்று சண்டை போடுகிறது. வயதான பிறகோ என் பொருள், என் வீடு, என் குழந்தை என்று சதா தனக்கெனச் சேகரிப்பதிலேயே கவனம்... இந்த சுயதேவை உலகில்விசாலத்தைப் போன்று சிலரும் தப்பித் வதறிப் பிறப்பதுண்டு.

நாலைந்து பெண்களாகப் பிறந்த நடுத்தரவர்க்க குடும்பங்களில் பொதுவாகப் பெண்கள் அதி சாமார்த்திய சாலிகளாக இருப்பார்கள். அவளுக்கு மட்டும் பட்டு பாவடையா அவள் புடவையில் மட்டும் அரை இஞ்ச்ஜரிகை அதிகமா, என்பதிலிருந்து. அக்காவுக்கு மட்டும் ஆயிரம் ருபாய் சம்பாதிக்கும்மாப்பிள்ளை,நான் மட்டும் என்ன குறைந்து போய் விட்டேன் என்பது போல், சீர் வரிசை வரை பெற்றோரி டமிருந்து கறாராகக் கேட்டுப் பெறுவார்கள். இது உலக வழக்கம் மட்டுமல்ல. சர்வைவலின் ஒரு அம்சமும் கூட...

விசாலம் ஐந்து பெண்களில் நாலாவது. மூன்று பெண்களையும் ஓரளவு நல்ல இடமாகத் தேடித் தந்து நொடித்து போயிருந்தார் தந்தை. மிகவும் சாதாரண வேலையிலிருந்த நாராயணன் பெண் பார்க்க வந்த போது, "இந்த இடம் போதுமப்பா.. இதுக்கு மேல் பெரிய இடம் பார்த்தால் அவர்கள் கேட்கும் சீர் செனத்தி செய்ய நமக்கு வசதி போதாது" என்று தானே சொன்னாள்... பெற்றவர்களும் இந்த வரனுக்கு இது போதும் என்று எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்தே சீர் செய்தனர்.

நாராயணன் குடும்பம் பெரிது.... திருமண வயதில் மூன்று தங்கைகள். ஒரு தம்பி...விதவைத் தாயார்... விசாலம் சாமர்த்தியமாகக் குடும்பம் நடத்தினாள். தான் பட்டினி கிடந்தாவது மற்றவர்களுக்கு வயிறுரப் பரிமாறினாள் "வயசுப் பெண்கள், பளிச்சென்று உடுத்துவிங்க." என்று நார்த்திகள் அணிய, தன் புடவைகளைத் தந்தாள். இது கண்ட மாமியார். "அடுப்படியில் வேலை செய்யறவளுக்கு பழம் புடவை போதாதா, வெளியில் வாசலில் போகிறப் பெண்களுக்குத் தான் புதுத்துணி வேண்டும்" என்று விசாலத்தின் கல்யாண புடவைகளைக் கூட மகளுக்குத் தாரை வார்த்தாள்.

விசாலத்தின் முதல் நாத்திக்குத். திருமணம் நிச்சயமாயிற்று. செலவை எப்படி சமாளிக்கப் போகிறோம். என்று நாராயணன் மலைத்து நின்றான். "இதுக்கு ஏங்க, இப்படி கஷ்டப்படறிங்க... எனக்குக் கல்யாணத்திற்குப் போட்ட நகைகள் பீரோவில் தானே இருக்கு... அதை மாலாவுக்குப் போட்டு விடலாம்" என்று முன் வந்தாள் விசாலம், நாராயணன் முதலில் தயங்கினான். "இதுக்கு என்ன யோசனை அப்புறம் வருஷம் ஒண்ணு, செஞ்சுட்டா போச்சு" என்றாள். விசாலம். விசாலத்தின் நகைகளுடனும் நாராயணனின் பிராவிடண்ட் பண்ட் கடனுடனும் நாத்தனார் புக்ககம் போய்ச் சேர்ந்தாள்.

அடுத்தவள் வேறு ஜாதிக்காரனைக் காதலித்த போது விசாலம் அவளுக்குப் பரிந்து மாமியாருடனும் கணவனுடனும் வாதாடினாள். காதலர்களுக்கிடையே தூதுப் போனாள். கடைசியில் எப்படியோ கல்யாணம் நடந்தது. விசாலத்தின் தாலிக் கொடி மஞ்சள் கயிறாக மறுபிரவேசம் செய்தது.

எத்தனையோ விட்டுக் கொடுத்தவள், வாழ்க்கையில் ஒரு பெண் விட்டே கொடுக்கக் கூடாததையும் அல்லவா விட்டுக் கொடுத்தாள்...... திருமணமாகி ஐந்து வருடமாகியும் குழந்தை பிறக்காமல் போகவே, நாராயணனும், விசாலமும் மருத்துவ செக்-அப்பிற்குச் சென்றனர். உலகம் புரிந்த டாக்டரம்மா விசாலத்தை தனியே அழைத்தாள்... "இதோ பாரும்மா...உன் கணவர் நார்மலாகத்தான் இருக்கிறார்.... ஆனால், உன் கர்ப்பபைத்தான் வளர்ச்சி அடையவில்லை, எனவே, உனக்கு குழந்தை பிறப்பதற்கான வாய்ப்பு மிக, மிகக் குறைவு... ஆனால் நான் இதை உன் கணவரிடம் சொல்லப் போவது இல்லை,... இரண்டு பேரும் நார்மலாக இருப்பதாகத் தான் சொல்லப் போகிறேன்" என்றாள்.

ஆனால், விசாலம் வீடுசெல்லும் வழியிலேயே கணவனிடம் உண்மையைப் போட்டு உடைத்தாள். அதோடு அவனை வேறு கல்யாணம் செய்து கொண்டு வம்ச விருத்தி செய்யும்படியும் அறிவுரைக் கூறினாள். "அதெல்லாம் அசட்டுத்தனம்" என்று கணவன் மறுக்க மறுக்கத் தானே தேடிவந்து சரோசியைத் திருமணமும் செய்து வைத்தாள். "பார்வதி;பரமசிவன்மாதிரி என்னப்பொருத்தம்...கணபதி, முருகன் மாதிரி பிள்ளைகளைப் பெற்றுத் தர வேண்டும்," என்று முதலிரவு அறைக்குள் வாழ்த்தி அனுப்பினாள்.

சரோசி, கணேசர், முருகன் மற்றுமின்றி அசுர கணங்களாகவும் நாலும் பெற்றாள். விசாலம் பிரசவம் பார்த்தாள் ... பத்தியம் வடித்துப் போட்டாள். சரோசி அவளை சம்பளமில்லாத வேலைக்காரியாக நடத்தினாள். அவள் அதிகாரம் வீட்டில் கொடி கட்டிப் பறந்தது. அவள் பிள்ளைகள் இவளை இம்சை செய்தனர். விசாலம் அவர்களை "அப்பன் பேரெடுக்க வந்த தங்கக் கட்டிகளா" என்றுக் கொஞ்சினாள், வாழ்க்கையில் தன் ஏமாற்றம் அனைத்தையும் விசாலத்தின்மீது சிடுசிடுப்பாக வீசினான் நாராயணன்...

விசாலம் சந்தோஷமாக, சதா சிரித்தபடி...'எங்க வீட்டில, என் குழந்தைகள்', என்று உரிமையுடன் பேசினாள்...

நாற்பதாவது வயதில் திடீரென ஒரு நாள் நாராயணன் போய்ச் சேர்ந்தான். அவன் வேலை செய்த கம்பெனி மானேஜர் துக்கம் கேட்டு விட்டுப் போகும்போது விசாலத்திடம், "அப்படி நீங்கதான் மனைவி என்றாலும், அடுத்தவளுக்கு நாலு குழந்தைகள் இருக்கு. வயசான அம்மா இருக்கா. பிராவிடண்ட் பணத்தை எப்படி பங்கிடலாம்" என்று கேட்டார். சரோசி குழந்தைக் குட்டிக்காரி."மாமியார் வயசானவ. அவாளுக்கு வழி செய்யுங்கோ. நான் தனிக் கட்டை, எப்படியோ சமாளிச்சுப்பேன்" என்றாள்.

சரோசிக்கு பெரும் பகுதியும், விசாலத்துக்கும், மாமியாருக்கும், அதில் கால் பங்குமாக வந்தது, பணம்.

மாமியாரை வைத்துக் கொள்ள சரோசி மறுக்க, காசையும், அம்மாவையும் கடைசி நாத்தி அழைத்துச சென்றாள் ... தன் பங்குப் பணத்தையும் விசாலம் சரோசிக் குடும்பத்தில் கரைத்தாள். அவர்களுக்காக ஓடாக உழைத்தாள், குழந்தைகள் வளர்ந்த பின், விசாலத்தின் அவசியம் குறைய சரோசி அவளை விரட்டி அடித்தாள் ... மாமியார் படுத்தப் படுக்கையாகிப் பணமும் கரைய, நாத்தி அவளையும் விசாலத்திடம் தள்ளினாள், வீட்டு வேலை, சமையல் வேலை, பட்சணம் செய்தல் என்று விசாலம் பம்பரமாய் ஓடி மாமியாரையும் கடைத் தேற்றினாள் ... நடுநடுவே கையில் காசு கிடைத்தால் சரோசிக் குழந்தைகளுக்குப் பரிசாகவும், பட்சணமாகவும் வாங்கிச் செல்வாள்...

சமீபத்தில் விசாலத்தை சந்தித்தேன் ... இருபது ஆண்டு இடைவெளிக்குப் பிறகு எதிர்பாராத இடத்தில் பார்த்தேன். "அவங்க ஒரு சீரியஸ் ஹார்ட் பேஷண்ட் ... அவங்களுக்குன்னு வந்து பார்க்கக்கூட மனிதர்கள் இல்லை. இவங்க மாத்திரம் அசடு மாதிரி, என் நாத்தனார், என் தங்கை, என் குழந்தைகள் என்று மாசம் பத்து போஸ்ட் கார்டு வீண் செய்வார். இறந்து போனாக்கூட நாங்கதான் கொண்ணிப் போடணும்னு நினைக்கிறேன்" என்றார் அந்த அனாதை முதியோர் இல்லத்தலைவி.

"இவர் சமையல் செய்து கொண்டிருந்த வீட்டார், இவர் உடல் மிகவும் மோசமானதும் உறவினர்களுக்கு எழுதியிருக்கிறார்கள், ஒருவரும் வந்து பார்க்காமல் போகவே இங்கே சேர்த்துவிட்டார்கள். அங்கே பாருங்க விசாலம் மாமியை ... உடம்பு நல்லா இருந்தா சும்மா உட்கார மாட்டா ... சாகப் போகிற கிழவி ஒருத்தி பொங்கல் கேட்டாள் என்று, தன் கைப் பணத்தைப் போட்டுப் பொங்கல் செய்யறு ... இங்க ரொம்ப முடியாமப் போனவங்க மூத்திரத் துணி மாற்றிக் கவனிக்கிறது இவங்கதான்.

விசாலத்திற்கு அந்த நிலை ஏற்படும்போது ... நல்ல வேளை அந்த இல்லத்தில் கைவிட்டு விட மாட்டார்கள்.

விசாலம் விடுதியில் உயில் எழுதி வைத்திருந்தாள் ... அவள் ஒரு பவுன் காதணியை அவள் இறந்த பிறகு சரோசியின் பெண்ணிடம் சேர்க்கச் சொல்லி!...



# கலைக்கப்படும் ஒப்பனைகள்

மணிவண்ணன்

மாலதிக்கு...சிரிப்பு வந்தது... காலை-6க்கெல்லாம் எழுந்து, குளித்து அம்மாவுடன் துவைக்கச் சென்று... காபி-டிபன் தயாரிக்க உதவி... தம்பியின் ஹோம் ஒர்க்...அவனுக்கு அப்போது தான் ஞாகம் வரும்... "மாலு! இந்தக் கழித்தல்... இல 7 போகுமா?" விடை சொல்லிப், புரியாமல் போட்டுக்காட்டி...

...உடை மாற்றி பஸ்ஸுக்கு தவம் செய்ய ஸ்டாண்ட் சென்று காத்திருக்க வேண்டும்... புத்தகம் டிபன் பாக்ஸ் சுமையுடன்.... என்ன வாழ்க்கை........

பஸ்ஸின் புட்போர்டில் தொங்கும் பேண்ட்-பனியன்-லுங்கி வரவேற்புத் தோரணங்களைத் தாண்டி ...விலக நினைத்து இடித்துக் கொண்டு கொள்ள வைக்கப்பட்டு... ஜீன்ஸ்களின் வழக்கமான "ஸாரி"களை வாரிக்கொண்டு உடலை உள்ளே திணித்துக் கொண்டு...

அம்மா காட்டிய காதின இடப்புறம் பவுடரின் அதிகப்படியான தீற்றலைமழுப்பி...முகம் பூசி... திரும்பாதடீ அங்க என்ன பார்வை" அம்மாவிடம் தலைகுனிந்து வாரிக்கொண்டு தாவணி சுற்றி பின் பண்ணிக் கொண்டு... தயாரிப்பு எல்லாம் ஐந்து நிமிட பஸ் நுழைவுப் போரில் சிதைந்து போலதாய் வருந்துவாள்.

நடத்துநரின் பொறுமையை வியப்பாள்... "உள்ளே போய்யா அவங்கதான் புட்போர்டிலயே தவம் செய்றாங்கன்னு...நீவேற உள்ளே ஏறும்மா, வண்டி எடுக்கப் போகிறேன்" பத்தாயிரத்தி யோராவது தடவையாக உச்சரிக்கும் அன்றாட வழக்கமாகிப் போன கம்ப்யூட்டர்த் தன சலிப்புகள்.



புரசைவாக்க மூச்சுத் திணறும் நெரிசலில் நொறுங்கிப் போவாள்... இந்த நெரிசலோடு சந்தர்ப்பத்தை இழக்க விரும்பாத 'குமார்' கூட்டங்கள்...

நேற்று இதே நேரத்தில் பஸ்ஸுக்கு நிற்கும்போது...குமார் தன்னிடம் 'கேட்டது' நினைவிட்டது.

இவ்வளவு நாள் தூரமாய் நின்று ஓரப் பார்வையில் ரசித்தவன் பக்கத்தில் வந்தான். 'மாலதி...' மிக மெல்லிய குரலில் தேனூற நீண்ட புள்ளி வைத்து அழைத்தான். 'நீ தப்பா நினைக்கலன்னா நான் ஒண்ணு கேட்கணும்' கமா போட்டு...

அவன் என்ன சொல்ல வருவான் என்று இத்தனை காலைகள் அவன் பார்வைகளைப் படித்து... எதிர்பார்த்திருந்தாளோ 'அதை'ச் சொல்ல உள்ளுக்குள் வேர்க்கிறான் என்பதைப் புரிந்துக் கொண்டாள்

பக்கத்துத் தெரு பாக்கியத்தின் ஒரே பையன் ... நந்தனத்தில் அரசினர் கல்லூரியில் — 'போய் வருகிறான்' — 'படிக்கிறான்' என்றால் ஜீரணிக்க முடியவில்லை.

'நீங்க சொல்ல வர்றது தெரியுது.' கொஞ்சம் திரும்பி இந்த பஸ் ஸ்டாண்ட் பக்கம் பாருங்க ... எல்லோரும் தெருவோரப் பண்டத்தில் ஈ மொய்க்கிற மாதிரி நம்மையே பாக்குறாங்க, அந்தப் பார்வைகள் உங்கள மாதிரி ஆண்களைப் பாதிக்காது. உங்களைப் பொறுத்தவரை இது எத்தனாவது தூண்டிலோ? எங்கெங்க சான்ஸ் கெடக்கிதோ அங்கல்லாம் தூண்டில் போட்டுடு வீங்க ... 'மாட்டற மீன் மாட்டட்டும்'னு...!

'மொத்தத்தில் நீங்கள்லாம் காலேஜ் போறது படிக்கிற ஒரு வேலயத்தவிர மற்றெல்லா வகையருக்களை செய்துக்கறதுக் குத்தான்னு தீர்மானிச்சு 'குரூப்'பா அலையறீங்க— 'ட்ராகுலா' மாதிரி ... ரத்தம் உறிஞ்சத் தயாரா!"



வேர்த்துப் போறான்; திணறுறான்.

'எத்தன '18' கிட்ட இப்படி ரொம்ப சுபாவமா நடிச்சுக் காரியம் சாதிச்சுக்கத் திரியறீங்க.'

'இல்ல ... வந்து நான் அப்படிப் பட்டவன் இல்ல.'

'தெரியும்!', அதனால்தான் நான் உஷாவும், சாருலதாவும், விமலாவும் உங்களையும்—உங்க சகாக்கள் பத்தியும் சொன்னத நம்பல.விஷமமாகப் பார்வையைப் படர விட்டாள் அவன் மீது.

பாலை போலத்துப் போய் விட்டான் ... இது போன்ற தாக்குதலை அவன் இதுவரை எந்தப் பெண்ணிடமும் சந்தித்ததில்லை.... உபத்திரவம் தாங்காமல் ஒதுங்கிப் போன பெண்களைத்தான் அவன் அறிந்திருக்கிறான் ... அதற்கு மேலும் அவளிடம் நிற்பது வீண் என்று நடுங்கும் கால்களோடு கழட்டிக் கொள்ள நினைத்தான்.

விட்டால்தானே 'விரிவுரை' இன்னும் சொல்லி முடிக்கவில்லை— மாலதி!

'தோ பாருங்க இந்த பஸ் ஸ்டாண்ட் சுவத்து மலையாள சினிமா போஸ்டர் ... படிக்கிற சரோதேவி புக்... பாக்குற 'காமராத்திரிகள்'லாம் உங்க பார்வைக்கு படுற பெண்ணுங்கள்லாம் இணங்கிடுவாங்கற தைரியமும் எண்ணமும் தந்துடுது...

உங்க நமைச்சலையும்...சொறிஞ்சுக்க விரும்பற சுகத்தையும் 'காதல்'னு சொல்லி எங்கள ஏமாத்தி நம்பவைக்க நினைக்கறீங்க! நாம இங்க பேசிக்கறத பிச்சில தியேட்டர்ல சந்திச்சுக்க நேரம் குறிக்கறேம்னு இந்த அந்நிய பார்வைகள் எடை போடறது உங்களப் பாதிக்காது ... எங்களுக்குத்தான் 'பட்டம்' கட்டும். சொல்லிக்காம உடனே எடத்த காலிப்பண்ணுங்க!'.. நிமிர்ந்தவள் கண்ணில் அவன் இல்லை. விரைந்து வண்டி பஸ்ஸில் திணித்துக் கொண்டாள்.

காலேஜ் நிறுத்தத்தில் இறங்கிக் கொண்டாள் மாலதி. காலையில் செய்த அத்தனை அலங்கரிப்பும் வியர்வையில் கலந்தது. தான் மட்டுமின்றி இந்த சமுதாயம் மொத்தமே ஒப்பனையில்லாமல் முகங்காட்ட மறுப்பதை எண்ணி வருத்தப்பட்டாள்.

மாணவ சமுதாயத்திற்கு ஏன் படிப்பதில் அக்கறை அழிந்து விட்டது?

கல்லூரி நோக்கி வரும் வழியில் தன்னை உரசிக் கொண்டு போன உதவாக்கரை கல்லூரி மாணவன் நினைவில் பட்டான். ஆணவம் படைப்பதற்கே மாணவப் பருவம் என்று இலக்கணிக்கும் கூட்டத்தில் ஒருவன்.

ஐந்து மணிநேர வகுப்புச் சிறைவாசம்—சிந்திக்கவிடாத பாடத் திட்டங்கள்... சலிப்பினைச் சந்திக்க வைக்கும் "சிலபஸ்" முறை...

இலக்கியம் படைக்க விரும்பும் மாணவன் அல்ஜீப்ராவும் கம்ப்யூட் சாதனைக்க விரும்பும் ஒருவன் கம்பராமாயணமும் படிக்க வேண்டிய கட்டாயத் திணிப்பு குமட்டியது.

அதோ பஸ் வந்து விட்டது... அந்த பட்டாம்பூச்சி கும்பலோடு இவளும் முண்டியடித்து விரைகிறாள்......

ராஜம் கிருஷ்ணன்

# சநாதனத்தின் முரண்பாடுகள்

"இவள் என் அண்ணு பெண் மாமி, ஆசீர்வாதம் பண்ணுங்கள்! சுப்பு நமஸ்காரம் பண்ணு!"

நான் கண்ணிமைக்க மறந்து அந்தச் சிறுமியையே பார்த்தேன்.

"பன்னிரண்டு வயசு இருக்குமா இவளுக்கு?

பாவாடை சட்டையணிந்த அச் சிறுமி கழுத்திலிருந்த பவளமாலை சங்கிலி மற்றும் தொங்கும் தாலிக்கயிறு எல்லாம் தரையில் படிய நிலத்தில் விழுந்து வணங்கினுள்.

"......இவளுக்குக் கல்யாணமாயிட்டுதா?"

எனக்கு வார்த்தைகளே நெஞ்சில் சிக்கிக் கொண்டன. சிறுமியை கூட்டிவந்த அவள் தமக்கை புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"போன தை மாசம் கல்யாணமாச்சு" எங்கள் . வீட்டில் ரொம்ப வைதீகம். எனக்கும் இவளைப்போல் வயசில் தான் கல்யாணம் நடந்தது. கௌரி பிறந்தப்ப எனக்குப்பதினஞ்சு வயசு. ராமன் பதினேழு வயசிலே பிறந்தான். டென்த் பரீட்சை அப்புறம்தான் எழுதினேன்..."என்ருள். ஒரே தெருவில் குடியிருக்கும் பெண் என்று அவளைத் தெரியும். இடுப்பில் பையனையும், கைவிரலில் பெண்ணையும் கோத்துக் கொண்டு நர்சரிப் பள்ளி ஆசிரியையாக அவள் தெருவில் செல்கையில் என்னைப் பார்த்து புன்னகை பூப்பாள்; நானும் புன்னகையுடன் தலையசைப்பேன். சில நாட்களில் மாலைநேரங்களில் இளைஞுன கணவன் சைக்கிளில் உட்கார்ந்து ஓட்ட, முன்னே பெண்ணும் பின் இருக்கையில் இவள் பையனையும் வைத்துக் கொண்டு செல்வதைப் பார்த்திருக்கிறேன்.

இருபத்திரண்டு வயசுக்குள் ஏழும் ஐந்துமாய் இரண்டு குழந்தைகளுக்கு அன்னையாகிவிட்ட விவரம் இப்போது தான் தெரிய வருகிறது.

"இப்படிப் பன்னிரண்டு வயசில் கல்யாணம் பண்ணுவது சட்டத்துக்கு விரோதம் இல்லையா? பண்ணலாமா? இப்போதைக்கு நான் கேள்விப்பட்டது கூட இல்லையே?"

"ஆ... சட்டம் பார்த்திண்டு நிறுத்திருத்தான் எல்லாம் தாறுமாருப் போறது. காலாகாலத்துல் பெரியவளாகும் முன்ன கல்யாணம் பண்றது தர்மம்னு எங்கப்பாம்மா ஒரே புடியா இருந்தா, மடத்துல ரொம்ப ஈடுபாடு, நெருக்கம்,ஆசாரிய சுவாமிகள் ஆசிர்வாதம் பண்ணி, கூறையும் தாலியும் குடுத்தா. கல்யாணத்தின் போது அவருக்குப் பதினெட்டு வயசு. எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணிட்டு டைப் அடிச்சிருந்தார்.... அவா வீட்டிலும் ரொம்ப ஆசாரம்.... ஆனு, குழந்தை பிறந்த உடனே குழந்தையையும் யாரும் வச்சுக்க மாட்டேன்னுட்டா. அவருக்கு இருநூறு ரூபா தான் சம்பளம். நான் படிச்சுத்தான் வேலை செய்யணும். கஷ்டம் எத்தனையோ...ன்னுலும், குலாசாரம் விடலன்னு ஒரு திருப்தி..." என்று மூச்சுவிடாமல் பொரிந்தாள்.

"இவள் படிக்கிருளா?"

"ம். ஆருவது முடிச்சு ஏழாவது போரு. அவன் ப்ளஸ்-டு போகணும். போதும் படிச்சதுன்னுட்டா. அவா வீட்ல கடை ஓட்டல் ரெண்டு நடத்தரு. ஆச்சு, ஏதானும் ஒண்ணுல உட்கார இந்தப் படிப்புப் போதும் னுட்டா. இவள, வேணுன்னு படி, இல்லாட்டா வேண்டாம்னு, என்னைப் போல வேலை செஞ்சு தான் சம்பாதிக்கணும்னில்ல. ஏதோ, எட்டோ பத்தோ படிக்கட்டும், பெரியவளாயி குழந்தை குட்டின்னு ஆனு. தன்னுல வீட்டிலதானே இருக்கப்போரு. அது வரை ஸ்கூலுக்குப் போகட்டும் னேன்."

எனக்கு எந்த காலத்தில் இருக்கிரேம் என்று ஒருகணம் தடுமாற்றமாக இருந்தது.

"குங்குமம் கொடுங்கள். நேரமாகிறது. அவருக்குச் சனிக்கிழமை லீவு. அடுப்பில் குழம்பு வைத்துவிட்டு ஓடிவந்தேன். சமையலைமுடிச்சிட்டு அவருக்கு எல்லாம் பரிமாறி எடுத்து வச்சுட்டு நான் ஸ்கூலுக்கு ஓடணும். குழந்தைகள் இரண்டும் ரகளை பண்ணிண்டிருக்கும்." நான் குங்குமத்தை நீட்ட, அவசரமாக இட்டுக் கொண்டு தங்கைப் பெண்ணுடன் விரைந்தாள். தெருவில் கழுத்தில் தாலி தொங்கச் செல்லும் சிறுமி அதைப் பற்றிய உணர்வுடன் நடந்ததாகத் தெரியவில்லை. ஆனுல், குலாசாரம் மீட்கும் அவசியத்தை அறிவுறுத்த, இந்தப் பெண்கள், ஒன்பது கஜமும் ஆசாரிய மடமும் நெறிகளாகக் கொண்ட சில பெருமாட்டிகளுக்குத் தாண்டுகோல்களானுர்கள்.

"இதுதான் கண்ணுக்கு லட்சணமாயிருக்கு. தெம்மாடிகளாட்டம் பொங்களை வளர்த்து வச்சிண்டு கண்டமானிக்கும் டிரஸ்ஸைப் போட்டு வேலைக்கு அனுப்பரு. அதது அநாகரிகமா கண்டவனையும் இழுத்துண்டு போறது. எப்ப, கல்யாணத்தைத் தள்ளிப் போட்டாளோ, அப்பவே ஆசாரம் போச்சு!"

தருமம் நிலைநாட்ட திமுதிமுவென்று வளர்ச்சியடையும் பெண்களைப் பிடித்திழுத்து, ஒன்பது கஜத்தைச் சுற்றி உட்கார வைத்து, ஒருவன் கையில், கயிற்றைக் கொடுத்துக் கட்டுடா' என்று சொல்ல படைபடையாக எல்லாரும் கிளம்ப வேண்டும் என்று அவர்கள் சொல்லாமல் சொன்னுர்கள்.

தஞ்சாவூர் நந்தியைப் பற்றிச் சிறுவயசில் நான் ஒரு கதை கேட்டதுண்டு. கல்லால் பணித்த நந்திகேசுவரர் வளர்ந்து கொண்டே போனுராம். வளர்ந்து வளர்ந்து மண்டபக் கூரையை முட்டிக்கொண்டு உடைத்து விடுவார் போல, அப்போது இறைவன் சிற்பியின் கனவில் வந்து ஓர் உபாயம் சொன்னுராம். அதன்படி இரண்டு கொம்புக்கும் நடுவில் நெற்றிப்பொட்டில் ஓர் ஆணியை வைத்து இறுக்க, நந்தி குறைந்து கொண்டே வந்து நிலைத்ததாம்.

எனக்கு அந்த கதை நினைவுக்கு வந்தது.

அறிவு, திறமை, ஆளுமை, ஆற்றல் இதெல்லாம் பெண்ணுக்கு வளர்ந்தால் அவளுக்கென்று தனித்த சிந்தனை, தன்னுணர்வு மிகுதியாகும். நம்பிக்கை எல்லாம் வந்துவிடுமே? எனவே, உடல் வளர்ச்சியுடன் ஏனைய இதய அறிவுமலர்ச்சிகள் எய்திவிடாமல், உடல் பரமாகவே அவள் தன்னை இழந்து விடவேண்டுமென்ருல், இழுத்துவைத்து மனையில் உட்கார்த்தி, கல்யாணம், கற்பு, சம்சாரம் என்ற முக்கூட்டு ஆணியை பலமாக அவளுள் இறுக்கிவிட்டால், பிறகு அசையமுடியாதல்லவா?

ஆனுல், இந்த சநாதனத்துக்கு மறுபக்கம் என்ற ஒன்றைஇவர்களால் நினைக்கவே முடிவதில்லை. சநாதன மரபு. பெண்ணைப் பன்னிரண்டு வயசில் கையில் குழந்தையைக் கொடுக்கும் தாயாக்கி, முப்பது வயசில் மூத்தகிழவியாக்கிலுைம், புருஷன் அவளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும், பொருளீட்ட அவளை வெளியே அனுப்பலாகாது என்று கருதியதே அதைப் பற்றிய நினைவே அழிந்து விட்டது. பெண் பொருளீட்டி வர எந்த வேடம் போட்டாலும் அது அனுமதிக்கப்படுகிறது.

பொருள் மட்டும் அவளுக்கு உரிமையானதல்ல. அதற்காக அவள் பெற்ற மதலையையும் எவரிடமேனும் விட்டுச் செல்லலாம். பதிக்கேற்ற சதியாக அவன் சொல்லும் சுகமே தனது வாழ்க்கை இலட்சியங்களாக நடக்க வேண்டுமென்று சநாதன தருமத்துக்குப் புதிய பரிமாணங்களைக் கண்டிருக்கிருர்கள்,



உபநயனம் மறுக்கப் பெற்று அது சம்சாரப் பிணிப்புச் சடங்காக மாற்றப்பட்டதற்கு என்ன காரணம், அந்த நெறி எப்போது எப்படித் தொடங்கப் பெற்றது என்பது ஆராய்வு எங்கெங்கோ நம்மை எட்டிப் பார்க்கச் செய்கிறது. வேதம் ஓதுவதும்; வேள்வி புரிவதும், சமுதாய தன்மையை முன்னிட்டென்ற கருத்தில் மக்களில் ஒரு சாராரும், தோள் வலி பெருக்கி எதிரிகளாய் இன்னல் கொடுப்போரை எதிர்த்துப் போராடும் வலிமையுடன் இன்னெரு சாராருமாக இயங்கி வந்த காலத்து, மக்களிடையே வருணபேதங்கள் ஆழ்ந்து பிரிவுபடுத்தியிருக்கவில்லை,

வேள்விக்கும் வேதத்துக்கும் முதன்மையாக நின்ற குலத்துக்கன்னியர், தோள்வலிமையினுல் சமுதாய நலன்காத்த வீரரை மணந்தார்கள். அவ்வாறே வீரர்குலத்து மங்கையர் முனிகுமாரர்களுக்கு மனைவியாவதில் தடையேதும் இருந்ததில்லை. உபநயனம் ருக்வேத ஆரியருக்கு மட்டுமே உரிய சடங்காகவும், அறிவும் ஞானமும் அவர்களுக்கே உரித்தான செல்வங்களாகவும் கருதப்பெற்றிருக்கவில்லை.

தொன்மையான ஆரிய் சமுதாயத்தில். எல்லாப் பிரிவு மக்களுக்கும் பெண்களுக்கும் உபநயனம் இன்றி

யமையாத சடங்கென்று தான் கருதப்பட்டது. உபநயனச் சடங்கின் விதிமுறைகளில் ஊமையருக்குச் செய்வதற்குரிய முறைகளும் காணப்படுகின்றன. ஆசானே மந்திரங்களை உச்சரித்துக் கற்பிக்கும் முறை விரிக்கப் பெற்றிருக்கிறது.

வீரியமற்றோர், குருடர், வலிப்பு முதலிய நோயினால் பீடிக்கப் பெற்றோர் யாராக இருந்தாலும் உபநயனம் அவருக்கு விலக்கானது அல்ல, மேலும் பாரதநாட்டில் அப்போது வாழ்ந்த நாகரீகமற்ற வேடர், மற்றும் மலை வனங்களில் வாழ்ந்த பல்வேறு இன மக்களுக்கும் உபநயனச் சடங்கு விரும்பினால் மேற்கொண்டு ஆரிய சமுதாயத்தில் இணைவதற்குரிய விதிமுறைகளும் நெறிபடுத்தப் பட்டிருக்கின்றன.

'விராட்ய ஸ்தோமம்' என்ற சடங்கினால் அவர்கள் புனிதமாக்கப் பெற்று உபநயனம் பெறுவதற்குரிய தகுதியை அடைந்தார்கள், சமுதாயத்தில் மானிடராகப் பிறக்கும் ஒவ்வொருவரும் தத்தம் அறிவை துலக்கிக்கொண்டு மேன்மை பெறவும், ஈனமற்ற தொழில் புரிந்து நல்வாழ்வும் வாழ்வும் பெற்ற அடிப்படை உரிமை உபநயனம் மறுக்கப்படும் போது, பறிக்கப் பெறுகிறது.

ருக்வேதம் காட்டும் சான்றுகளில் இவ்வாறு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதன் பிரதிபலிப்பு எதுவுமே இல்லை.

ஆனால், ருக்வேதத்தில் பொதிந்துள்ள 'புருஷ ஸூக்தம்' நான்கு வர்ணத்தவர்களைப் பற்றி விவரிக்கிறது.

ஆதிபுருஷனின் நெற்றியிலிருந்து முதல் வருணத்தவரும், தோள்களில் இருந்து இரண்டாம் வருணத்தவரும் தொடைகளில் இருந்து மூன்றும் வருணத்தவரும், பாதங்களில் இருந்து நான்காம் வருணத்தவரும் உண்டாயினர் என்று கூறப்படுகிறது.

முதல் வருணத்தவர் தன்னலமின்றி சமுதாய நலனுக்காக, பிரும்மத்தை கேட்கவும், வேதம் பயில்விக்கவும் வேள்விகள் நடத்தவும், உரிமை பெற்றவரென்றும், இரண்டாம் வருணத்தவர். தோள்வலி கொண்டு சமுதாயம் காக்க உரிமை கொண்டவரென்றும், மூன்றும் வருணத்தவர் பொருள்வளம் கண்டு சமுதாயம் பேண உரிமை பெற்றவரென்றும், நான்காம் வருணத்தவர், முதல் மூன்று வருணத்தாருக்கும் ஊழியம் செய்வதே கடமையாகக் கொள்ள வேண்டும், வேறு எதற்கும் உரிமையற்றோர் என்றும் சமுதாயத்தில் பெரிய மானுடப் பிளவைத் தோற்றுவிக்கிறது.

உபநயனம் மற்றும் உரிமைகள் மறுக்கப்படும் நிலைமை ஏற்படுகையில் பெண்ணும் நான்காம் வருணத்தவரின் இடத்தில் தள்ளப்பட்டாள்.

ருக்வேதம் காட்டும் சமுதாய உயர்வில், இந்தப் புருஷ ஸூக்தம் ஒரு பாய்ச்சக் கல்லாக அடிபடுகிறது.

"நான்காம் வருணத்தவர் யாவர்? இந்த வினாவை எழுப்பி அதற்கு விடையாக சமூக வரலாற்று அறிவியல் மேதையான டாக்டர் அம்பேத்கார் ஓர் அகன்ற, ஆழ்ந்த ஆய்வை மேற்கொண்டு, மிக ஆச்சரியமான சில கருத்துக்களை முன் வைத்துள்ளார். அது நம்முடைய பார்வைக்கு, மிக இசைவாக உள்ளது. அதைக் கூர்ந்து பார்ப்போம்.

## பலாத்காரமா? கற்பழிப்பா?

காலங்காலமாய் பல்லாயிரம் வார்த்தைகளும், வாக்கியங்களும், பழமொழிகளும், பிரம்மோபதேசங்களுமாய் பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாகவே புரிபட வைத்து வருகின்றன. உதாரணத்திற்கு Chairmen (Chair-person இன்னும் புதியதாகத் தான் உள்ளது.) All men are ... Men & Matters ... மனிதன் என்று கூறிக் கொண்டே போகலாம். மனிதன் என்பது இருபாலரையும் குறிக்கிறது என்ற விவரத்தைவிட அவன் — அதாவது ஆணைக் குறிக்கிறது என்ற விவரம் தான் விரைவில் நம்மை எட்டும். ஆரம்ப நிலைகளில் விரிவான அர்த்தம் புரிவது கடினம். ஆரம்பத்தில் புரிபட்டது இறுதிவரை மாறுமல் வருவதும் இயல்பு. கலைஞன், Show—Man, என்பதாய் எத்தனை வார்த்தைகள்.

இவ்வகையில்தான் 'கற்பழிப்பு' என்ற வார்த்தையும் குறைபட்டது என்று முன்னொரு காலை கருத்துத் தெரிவித்தவர் பெண்ணுரிமை இயக்கத்தின் செயலாளர் ஷியாமளா என்பவர். அழிப்பு என்ற சொல்லே, பாதிக்கப்பட்டவள் எதையோ இழந்து விட்டதாக, அவளை ஒரு குறைப்பட்ட ஜீவனாய் (Inferior quality) அறிவுறுத்துகிறது. 'கற்பு' என்ற சொல்லைப் போலவே, அதை விடத் தீர்மானமாக தீமை பயப்பது 'கற்பழிப்பு' என்ற சொல். கற்பழித் தவனை விட, அவனால் பாதிக்கப் பட்டவளை பகிஷ்கரிக்கும் இந்தச் சமூகத்தை சாடி, எதிர்ப்பதன் முதல் கட்டமாய் பேச்சிலும், எழுத்திலும் 'கற்பழிப்பு' என்ற வார்த்தையை அறவே ஒதுக்க வேண்டும். 'பலாத்காரம்' என்ற வார்த்தையை மாற்றுகப் பயன்படுத்தலாம் என்று அவர் குறிப்பிட்டது சரியாகப் பட்டது. ★

- லதா ராமகிருஷ்ணன் -

அனுமிகா

# [illegible]

ஐந்திலிருந்து ஆறு வரை முன்பெல்லாம் இடையே மூன்று பேருந்துகள் விடப்பட்டு வந்தன. இப்பொழுது என்ன காரணத்தினாலோ, ஒன்று குறைந்து விட்டது. முன்பு ஐந்தரை மணிக்குள் வீட்டிற்கு வந்துவிடலாம், இப்பொழுது ஐந்தே முக்கால் ஆறு என்றாகிவிடுகிறது. ஸ்கூட்டரில் வருவதால் கணவன் முன்னதாக வந்து விடுவதும் வழக்கமாகி விட்டது.

உள்ளே நுழைந்ததுமே, கணவன் முகம் உறுத்தலில்லாமல்விரிந்து வரவேற்பது விவரிக்க முடியாத மகிழ்ச்சியை உருவாக்குகிறது. காம்ப்ளெக்ஸ் இல்லாதகணவன்! ஸ்கூட்டருடன் அவன் அலுவலகத்திற்குப் போய் அவளை அழைத்துக் கொண்டு வர முடியும். ஆனால் அதிலாகும் நேரத்தை வீட்டில் செலவழிப்பது இன்னும் பயனுள்ளதாக இருக்கும் என்று இருவருக்கும் பட்டதால் அவள் பேருந்தில் சற்றே பின்னால் வர, அவன் ஐந்தரைக்குள் வீடு சேர்ந்து, குழந்தைகளும் அவனுமாக முகங்கழுவி, உடைதிருத்தி, அவளை வரவேற்கத் தயாராயிருப்பார்கள். பாலைக் காய்ச்சுவதும், டிகாஷன் போடுவதும் பிரமாதமான வேலையொன்றும் இல்லையாததால் தனித் தனியே இரண்டு ஃபிளாஸ்குகளில் இரண்டும் தயாராக இருக்கும்.

கணவன் நல்லவன், பெண் விடுதலைப் பிரசாரகனாக தன்னைக் காட்டிக் கொள்ளும் முனைப்பும், ஆனால் அடித்தளத்தில் அதை ஏற்க முடியாத போலித்தனமுமாய் திணறுபவனல்ல. பெண்ணை மனிதப் பிறவியாக மதிக்கத்தெரிந்தவன். சமமாக மனிதர்களை நடத்துவதில் இயல்பாயுணர்பவன். வலிந்து வரவழைத்துக் கொண்ட குணாதிசயங்கள் என்றால் மனைவிக்காகத் தான் காப்பி போட்டு வைப்பதும், தயாராகக் காத்திருப்பதும் ஒருவித தியாகமாய், வீரமாய், தனித்தன்மையாய் அவற்றிற்காகத் தன்னை அநியாயத்திற்குத் தட்டிக் கொடுத்துக் கொள்ள, தலையைச் சிலுப்பிக் கொள்ள வைக்கும். இவனிடம் அந்தப் பிரக்ஞை இயல்பாயிருந்தது. தனது வீட்டிற்காக, குடும்பத்திற்காக தான் ஆற்றும் செயல்களை "சமரசம்." என்ற ரீதியில் பொருள்படுத்தித் தன்னைப் பெரியவனாய்க் காட்டிக் கொள்ளும் பிரயத்தனத்தில் இறங்காமல் எப்பொழுதும் போல இருக்க வைத்தது!

காபியை எடுத்துக் கொண்டு வெளியே வந்து கணவன் இருக்கைக்குஎதிரேஅமர்ந்துகொண்டாள். "ரொம்ப மோசம் நீங்கள்! நான் வந்ததுமே, 'நீ உட்காரு நான் போய் காபி போட்டுக் கொண்டு வருகிறேன்' என்று அரக்கப் பரக்க உள்ளே போய் எடுத்துக் கொண்டு வந்திருக்க வேண்டாமா!"

"உடம்பு சரியில்லையா? கேட்டிருந்தால் கொண்டு வந்திருப்பேன், ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேனே சாரு, நம்மிடையே சம்பிரதாயங்கள் இல்லை."

கரிசனத்தோடு அவன் முகம் அவளை உறுத்துப் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

"ஜுரமோ ஜுரமில்லையோ, நீங்க காபித் தம்பளரோடவருவதைப் பார்த்து நான் புடவைத் தலைப்பால் வாயைப் பொத்தி அழுதிருப்பேனில்லையா? அந்த சந்தர்ப்பம் போச்சு!"

"எதுக்கு அழணும் நீ!"

"சே, என்ன கணவன் நீங்கள். கணவன் ஸ்தானத்தை assert பண்ணிக் கொள்ளத் தெரியாமல்! காபியைக் கொண்டே வந்தாலும் 'இது என் வேலையில்லையே!' என்ற கருத்தோடு, அந்தக் கருத்தை எந்தவிதத்திலாவது புலப்படுத்த வேண்டும். நீங்கள் புலப்படுத்துகிறீர்களோ இல்லையோ, 'ஐயோ! இது ஒரு கணவன் செய்யக்கூடிய வேலையா' என்றுநான் குற்றவுணர்வு குறுகுறுக்க கரகரவென்று அழவேண்டும்... அப்போது தான் நம்மைப் பார்ப்பவர்கள். நம் பிள்ளைகள் — இவர்கள் செயல்படுவதில் இயல்பிற்கு மாறாய் எதுவோ இருக்கிறதே — என்பதைப் புரிந்து கொண்டு போவார்கள்...!"

அவன் இன்னும் விழிக்கக்கண்டு ஆனந்தமாக இருந்தது அவளுக்கு!

"என் மனைவிக்கு நான் காபி கொண்டு வந்து தருவதில் இயல்பிற்கு மாறாக என்ன இருக்கிறதுசாரு? எனக்குப் புரியவில்லை. எப்படியும் பிற வீட்டு வேலைகளையெல்லாம் நீதான் செய்கிறாய், "செய்கிறேன் என்று சொன்னீர்களே அதுவே போதும். தேவையான போது நானே கேட்கிறேன். அப்போது மனங்கோணாமல் செய்து தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று கல்யாண சமயத்திலே கூறிவிட்டாய்.

"பாவம் பிரபு நீங்கள்! பிழைக்கவே தெரியாதவர். உண்மையைப் பேசுகிறீர்கள்!"

"என்ன புதிர் போடுகிறாய்? எனது அலுவலகத்தில் பார்க்கிறேனே நான்! கணவன் குடிகாரனாய், நோயாளியாய் — குடும்பப் பொறுப்பு முழுவதையும் தாங்கிய பெண்கள் எனது பிரிவிலேயே இருக்கிறார்கள். இரவுப் பணி முடிந்து வீட்டிற்கு வரும் வசந்தா — அது தான் வாசுவின் மனைவி - வேலையெல்லாம் முடித்து குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பி தூங்க மத்தியானம் ஆகிவிடும். ஒரு முணுமுணுப்பு, முகஞ்சுளிப்பு - ஆயாஸப் பெருமூச்சு கிடையாது, தேவையான சமயம்



வாசு காய்கறி நறுக்கிக்கொடுப்பான். கடை கண்ணிக்குப் போவான்...... என் நீ இருக்கியே!'

''நீங்கள் பிரயோஜனமில்லை! பவுடருக்கும், பட்டுப்புடவைக்கும், மேக்கப்பிற்கும், மேனுமினுக்கலுக்கும்தான் பெண்கள் வேலைக்குப் போகிறார்கள். இவர்கள் வேலைக்கு வருவதால் குடும்பம் நாசமாகிறது. பிள்ளைகள் தறிகெட்டுப் போகிறார்கள். ஆண்களுக்கு வேலை வாய்ப்பு குறைகிறது - அப்படியிப்படியென்று ' அடுக்கிக் கொண்டே போக வேண்டாமா?......"

"நீ செய்வது வஞ்சப் புகழ்ச்சிக்கு எதிரிடை என்று நினைக்கிறேன்! எதற்காகச் சொல்கிறாயோ, பரிகசிக்கிறாயோ— என்றால் அப்படியெல்லாம் யாரையும் பொதுப்படையாகப் பரிகசிக்க முடியாது. தனது சம்பளத்தில் சிறுகச் சிறுக சேர்த்து கலியாணத்திற்கு வழி செய்யும் பெண்கள், தன் தம்பி, தங்கையரைப் படிக்க வைத்து , பெரிதாக்கும் பெண்கள் என்று எத்தனையோ பெண்களுக்கு வேலை மிக மிக அத்தியாவசியமான ஊன்றுகோலாய் இருப்பதையும் எனக்குப் பார்க்க முடிகிறது... அப்படிப் பார்த்தால் வேலைக்கு போகாத பெண்கள் கடன்பட்டாவது அலங்கரித்து கொள்வதில்லையா என்ன.... யுகயுகமாய் அலங்கரித்து அழகு பார்க்கப்படும் பதுமைகளாக, மனமும், அறிவும் மறக்கடிக்கப்பட்டவர்களாய் வாழப் பழகியவர்கள், பழக்கப்படுத்தப்பட்டவர்கள்... அதுவும் ''ப்ரீச்சி'' மாதிரி அலுவலகம் போக முடியுமா என்ன... தவிர, செய்கிற ஆயத்தங்களை செய்து கொண்டால் பெண்டாட்டி வேலைக்கும் போவதால் குடும்பமொன்றும் சீரழியாது நம் பிள்ளைகள் நோஞ்சானாகவும் இல்லை, தறி கெட்டும் போகவில்லை, எப்படி....? அவர்களுக்கென்று நேரம் ஒதுக்கும் விதத்தை நாம் இருவருமாகப் பேசி வழி செய்தோம். ஆமாம், யார் சொல்வது பெண்கள் வேலைக்கு வருவதால் ஆண்களுக்கு வேலை வாய்ப்பு குறைகிறது என்று? இரண்டு நாள் முன்னும் பேப்பரில் புள்ளிவிவரம் கொடுத்திருந்தான், படித்திருப்பாயே. அரசாங்க அலுவலர்களில், மொத்தத்தில் ஐந்து சதவிகிதமோ என்னவோதான் பெண்கள்...... பெண்கள் வேலைக்குப் போவது அவளுக்கு வெளியுலகம் பார்க்கும் வாய்ப்பு, தன் காலில் நிற்க ஒரு வாய்ப்பு. தன் காலில் நிற்பதாலேயே தான்தோன்றி என்று கரிப்பதா? யாராவது அப்படியெல்லாம் பேசினார்களா, உன் அலுவலகத்தில்...!''

—பத்து வருடங்களுக்கு முன்,

இருவரும் பேசிக் கொண்ட அந்த தினம் ஞாபகத்தில் வந்து நெகிழ்வூட்டியது. அதே தெளிவு, தீர்க்கம் சேவகனிடம் காட்டுவதில்லாமல் சினேகிதனிடம் காட்டுவதான கரிசனம், அன்பு தோழமை—இதோ இன்னும் தொடருகிறது....



# அளவுக்கு மிஞ்சினால்

ஆந்திராவில் ஒரு கிராமத்தில் பெண்களை கேலி செய்த பெண்ட, வீரண்ணா என்ற இளைஞரை அந்த கிராமத்து மக்கள் அனைவரும் சேர்ந்து தண்டித்திருக்கிறார்கள்.

கூட்டமாக ஒன்று திரண்டு அவன்மீது கல்லை விட்டெறிந்து கொன்று விட்டார்கள். கிராமத்துப் பெண்களும் கூட கல்லை விட்டெறிவதில் பங்கெடுத்துக் கொண்டார்களாம்!



''—திருமணமான பின் நீங்கள் வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயமில்லை, எனில் போகக்கூடாது என்று நான் சொல்ல மாட்டேன். முடிவெடுக்க வேண்டியது நீங்கள். உங்கள் சௌகரியம் போல் செய்யுங்கள்... நம்மிடையே சம்பிரதாயச் சொற்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் இல்லாமலிருப்பது நல்லது.... உங்கள் முடிவு உள்ளத்திலிருந்து வருவதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்..."

''என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாயிருந்தால் நீ இன்னின்னது செய்ய வேண்டும் என்று மறைமுகமாய் கட்டளையிடவில்லை. மூன்றாமவர் வழியாக தனது விருப்பு, வெறுப்புகளைத் தெரிவிக்கவில்லை. நேர்மையானவன், நினைத்தால் பெண்களை சமமாக மதிப்பவன் என்பது புரிய, சந்தோஷம். சுகமாயிருந்தது. எப்பவும் போல் வேலையைத் தொடர்வதாகவும், குழந்தைகள் பிறந்த பின் சிரமமாயிருந்தால் விட்டு விடுவதாகவும் கூறியபோது சரியென்றான். இன்று இரண்டு குழந்தைகள். சிரமமாயிருந்தபோது நீண்ட விடுப்பில் இருந்தாள். சிரமமாயில்லாததால் இன்னும் வேலையைத் தொடர்கிறாள்.

அன்று இன்னும் நிறையப் பேசினான். ஆர்வமாய் அவள் விருப்பு, ரசனைகளைப் பற்றிக் கேட்டுத்தெரிந்து கொண்டான். அவரவர் ரசனைகள் அவரவருக்கு. ஒருவர் ரசனையை மற்றவர் மீது திணிக்க முயலக் கூடாது என்று ஒரு மனதாகக் கருத்துத் தெரிவித்தனர். உதவி வேண்டுமெனில் ஒருவரிடமொருவர் கேட்பதில் கௌரவப் பிரச்னையேதும் பாராட்டக்கூடாது என்ற தீர்மானமும், பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆடம்பரமில்லாமல் பதிவுத் திருமணம் நடந்தேறியது.

ஆரம்பகாலத்தில் அவனுடைய தீர்மானங்களை சரியாக செயல்படுத்துவானா என்றிருந்த கொஞ்சநஞ்ச சந்தேகமும், நாளாக ஆக முற்றும் புரிந்தது அவளுக்கு. சமத்துவத்தை அளித்திருப்பது தனது தனிச்சிறப்பு என்பதாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை சொல்லிக் காட்டும் கணவர்களிடமிருந்து முற்றிலுமாக மாறுபட்டு, அப்படியிருப்பது இயல்பு! இன்றியமையாதது! என்பதாய் அதைப்பற்றிய பிரக்ஞையேயில்லாமல் இயங்கிய துணை இனிமையிலும் இனிமையான அதிசயமாக இருந்தது அவளுக்கு!

அன்று அவன் பேச்சைக்கேட்ட கணத்தில் கண்கலங்கியது போல் இன்றும் கலங்குகிறது.

''ஏய், என்ன சாரு இது...?'' ஒளியும்,ஒலியும், பார்த்து; தமிழ் சினிமா பார்த்து, நம் பிள்ளைகள் இப்போ வந்து நீ அழுது கொண்டிருப்பதைப் பார்த்தால் எனக்கும், உனக்கும் சண்டையென்று சஞ்சலப் படுவார்கள்! ஏற்கனவே அன்றைக்கு பாபு, "அப்பா ,நீயும், அம்மாவும் மரமெல்லாம் சுற்றி கண்ணே, மணியே என்றெல்லாம் பாடியிருக்கிறீர்களா. என்று கேட்கிறான்!" சில பல கதைகளையெல்லாம் படித்து, "என்னப்பா நீ அம்மாவை கடாமாடே, கிடாரியே, கொடுக்காபுளி, கிட்டிப்புள் என்றெல்லாம் செல்லங்கொஞ்சிக் கூப்பிடறதேயில்லையே?'' என்று சலித்துக் கொள்கிறான்!

சொல்லிவிட்டு கடகடவென்று பெரிதாக அவன் சிரிக்க, பளபளத்த விழிகளுடன் அவளும் சிரிக்கிறாள்!''

# தெரிந்தே நெருப்பது உறவாகும்

சமீபத்தில் Joint Women's Programme (JWP) என்ற அமைப்பு (தில்லியைச் சார்ந்தது) பெண்கள் சிற்றின்பத்திற்காக, விற்கப் படுவதற்கும், விபச்சாரத்தில் ஈடு படுவதற்கும், படுத்தப் படுவதற்கு மான காரணங்களைக் குறித்த புள்ளி விவரங்களை சேகரித்து, பனிரெண்டு, மாநிலங்களிலும். இரண்டு யூனியன் பிரதேசங்களிலுமாக கணக்கெடுத்த தில் பெற்ருேரும், உற்ருேருமே பெண் களை விற்கும் செய்தி தெரிய வந்தது. அதிர்ச்சியாக இருந்தது.

வறுமை மட்டும் இதற்குக் காரணமில்லை. ஜாதிபேதங்களுக் கும் பங்குண்டு. இத்தகைய பெண்- வியாபாரத்தில் தாழ்ந்த ஜாதிப் பெண்கள் பலர் சிறுமிகளாக இருக் கும் போதே நிலச் சுவான்தார்களுக் குத் தாரை வார்க்கப்படுகிருர்கள். பெங்களூர் போன்ற நகரங்களில் கூட கருவிலிருக்கும் போதே அக் குழந்தைகளுக்கு 3,000 ரூபாய் வரை விலை பேசப்படுகிறது. அது ஆணே, பெண்ணே எதுவாயிருப் பினும் சிற்றின்பத்திற்கென சிறு பிராயத்திலேயே விற்கப்படும் வழக் கம் இன்றும் நிலவி வருகிறது. மொத்தமாக நிரந்தரமாக ஒருவருக்கு விற்கப்படுவதும், இல்லை பலரின் நுகர் பொருளாகும் அவலமும் ஆக இருவகையில் பெண்கள் அவமானப் படுத்தப்படுவது இன்றும் அதிக அளவில், தொடர்ந்து நடைபெறு கிறது.

ஒரு இளம் பெண் பம்பாயில் 70,000 ரூபாய் வரை விலை போகி ருள். தமிழ் நாட்டில் ஒரு இரவுக்கு 3,500 ரூபாய் முதல் 2 ரூபாய் வரை யில் பெண்கள் விற்கப்படுகிருர்கள். மற்ற எந்த வியாபாரத்தையும் போல மனம், மனுஷி என்பதெல்லாம் மறக்கடிக்கப்பட்டு பெண்களும் நவீன உலகில் வெறும் வியாபார மாகியிருக்கிருர்கள்.

பம்பாயும், தில்லியும் பெண்களை ஏற்றுமதி செய்யும் மையங்கள். இங் கிருந்து பெண்கள் அரபு நாடுகள், பாகிஸ்தான் மற்றும் உத்திரப்பிர தேச பகுதிகளுக்கு விற்கப்படுகிருர் கள். தென்னிந்தியாவிலிருந்து வட இந்தியாவுக்கு பெண்கள் ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. அதிக அளவில் இந்த கேவலமான வியாபாரம் உத்திரப் பிரதேசத்திலும், அதற்கடுத்து தமிழ் நாட்டிலும் (தாய்க்குலம் பேசுவோர் தலைகுனியட்டும்!) பிறகு கர்நாடகா விலும், ஆந்திரப்பிரதேசத்திலும் இந்த அவலம் நடந்து வருகிறது.

நான்கு வருடங்களாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஒரு பிரதேசத்தில் இவ்வகை கேடுகெட்ட தொழில் அதிக அளவில் நடந்து வருவதற்கான காரணங்களாக சில தரப்பட்டுள்ளன. ஒன்று ஜீவாதாரத்திற்காய் தொழில் நாடி இடம் பெயர்தல் (Migration) 'இப்படி இடம் விட்டு இடம் செல்லுபவர்கள் பொரு ளாதார நெருக்கடிச்குட்படுவது வழக்கம். எளிதில் பணம் கிடைக்க வழி செய்யும் 'பெண் விற்பனை' அவர்களை தங்கள் சிறு பெண் குழந்தைகளை விற்க வைக்கிறது. அதே போல் பஞ்சம், வறட்சி காரண மாகப் பாதிக்கப்படும் குடும்பங்களும் இவ்வகை வியாபாரத்தில் ஈடுபடு கின்றன.

கிழக்கிந்தியாவிலிருந்து பெண் கள் பெரைஸிற்கு அதிக அளவில் அனுப்பப்படுகிருர்கள். ஆய்வின்படி எல்லா திருத்தலப் பிரதேசங்களிலும் இந்த 'இழிதொழில்' பெருத்த அள வில் நடைபெறுகிறது. ஆக்ரா, கான் பூர், வாரநாசி, அலகாபாத் பகுதி களில் மிக அதிகமாக நடைபெறு கிறது.

பெண்களை அடித்தும், பயமுறுத் தியும் அறைகளில் அடைத்துப் பட் டினி போட்டும், சித்திரவதை செய் தும் இத்தொழிலில் ஈடுபடச் செய் யும் பல கும்பல்கள் நம்மிடையே இருந்து வருகின்றன. பெண்களைக் கடத்திச் சென்று விலைக்கு விற்பதும் வாங்குவதும், அதிக அளவில் நடை பெறுகிறது. தவிர, கடத்திச் சென்று கற்பழித்து விட்டு, பின் அதை வைத்து 'பிளாக்மெயில்' செய்தே பலப்பல பெண்களை விபசாரத் தொழிலில் ஈடுபட வைக்கின்றனர். விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களில் 67 % சதவிகிதம் இவ்வகை நிர்ப் பந்தத்தினுல் இத்தொழிலுக்கு வந்த வர்களாகவே இருக்கிருர்கள். 11 சத விகிதத்தினர் வன்முறையேதுமின்றி இத்தொழிலுக்கு வருபவர்கள். மனம் விரும்பி வந்தவர்கள் என்று அர்த்தப் படுத்திக்கொள்ள வேண்டாம். பொய் நம்பிக்கைகள், வாக்குறுதிகளுக்கும் பலியானவர்களே. ஹோட்டல்களில் வேலை செய்பவர்கள், காபரேநடனம் ஆடுபவர்கள் உபநடிகைகள் முதலி யோர் இவ்வகையில் அடங்குபவர் கள்.

இந்தப் பெண்களில் பதினேரு சதவிகிதம் மட்டுமே ஓரளவிற்காவது கல்வியறிவு உடையவர்கள், பிறர் படிப்பறிவற்றவர்கள். ஆய்வுக்கட் டுரை, இவ்வகைப் பெண்கள் தாங் கள் எவ்விதமான சம்பந்தமும் இல் லாமல் இயந்திர ரீதியில் தங்களைவரு பவர்களிடம் ஒப்படைப்பதாகக் கூறி யதாகக் குறிப்பிடுகிறது. திரைப்படங் களில் தான் வருபவன் ஒருவனிடம் மையல் கொண்டு அவனையே மணப் பதாக வரும். உண்மை நிலை அது வல்ல என்ருர்களாம்.

இவ்வகை வியாபாரத்தில்பெண் களே அதிகம் விற்பனைப் பொருளா கிருர்கள் என்ருலும் சிறுவர்களும் சிற்றின்பத்திற்காய் விற்கப்படுகிருர் கள் என்று ஆய்வு புலப்படுத்தியது. வறுமையதிகமாகி,விற்பதற்கு பெண் இல்லாதபோது ஆணையும் விற் கிருர்கள்.

பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது இவ்வகை இழிவை ஓரளவாவது தடுக்க வழி வகுக்கும் என்று மேற்கண்ட JWP அமைப்பின் ஆய்வு ஆலோசனை கூறுகிறது. அவர்களின் ஆய்வு ஒரு புத்தகமாக விரைவில் வெளிவர இருக்கிறது.

– லதா



# தீக்குச்சிகள்

**சிலுவை . . .**

தங்கள் பெயரையே
தானமாகத்
தருவதாகச் சொல்லி

தானமாய்ப்
பெண்ணைப் பெற்று
மேலும்
பிச்சை போல்
வரதட்சணை கோரும்
பித்தர்காள்!
உண்மை கேளீர் !

இங்கு
பெண்கள்
உங்கள் பெயர்களை
அணிந்து கொண்டிருக்கவில்லை;
சுமந்து கொண்டிருக்கிறார்கள்
உங்கள் பெயர்களில்
ஒளிந்து கொண்டிருக்கவில்லை
கரைந்து கொண்டிருக்கிருர்கள்.

- கமிஷனர் திலகவதி I. P. S.

**வளை கழற்ற . . .**

பாதையோரச் சுவர்கள்
உங்களின்
ஆடையற்ற மேனிகளை
அலங்கரித்துக் கொள்ளவா..!

அன்று.
'கல்பனா தத்தும்'
'கைமன் விடியும்'
'துர்க்கா தேவியும்'
'சுசிலா தேவியும்'
பருவ வயதிலேயே
கருகலாயின

அன்று
அந்த இளம் நிலவுகள்
இருட்சிறையில்...

ஒருகாம் வளை கழன்றது
ஓரளவு சமத்துவம் வந்தது
இருகாம் வளை கழற்றி
இயந்திரப் பொறியில்
இயக்கக் கற்றால்

சமத்துவம்
உங்களிடம்
சரணாகதி அடையும்...!

— கவிஞர் "செந்தமைலன்"



# மனதை உறுத்துவது



பெண்கள் பிரச்சினைகளைப்பெரிதாக எடுத்துக் கொள்ளாத எனது எண்ணத்தில், பெண் விடுதலை என்று பேசுவதை அர்த்தமற்றதாக, கேலிக்குரியதாக நினைத்த எனது சிந்தனையில் அன்றுதான் புதிய திருப்பம் நிகழ்ந்தது. இந்தியப் பெண்களின் நிலைமை என்ன? அவளுக்கு வாழ்விலும், சாவிலும் நல்ல அந்தஸ்தைப் பெற வழி இருக்கின்றதா? என்ற கேள்விகள் என் மனதை அரிக்கத் தொடங்கி விட்டன.

சுகாதார முகாமிற்காகவும், முதியோர் பள்ளிக்காகவும், பம்பாயில் நான் வேலை செய்து கொண்டிருந்த சமயம், பஞ்சசீல நகர் என்ற குடிசை வாழ்பகுதியில் மலர்க்கொடி என்ற பெண் எனக்கு அறிமுகமானாள். அப்பகுதியிலிருந்த பெண்களுக்கு நல்ல திறமையான தலைவியாக விளங்கினாள் அந்த இளம் பெண். வெகுசீக்கிரத்தில் அவள் எங்களோடு அன்பாகப் பழகத் தொடங்கி விட்டாள். அதோடு சுகாதார முகாமில் எங்களோடு சேர்ந்து முடிந்த உதவிகளையும் செய்து வந்தாள். அப்பகுதியில் நடந்த பொதுக் கூட்டங்களில் அவளோடு அவள் கணவனும் சேர்ந்து பங்கெடுத்துக் கொண்டனர்.

இருபத்தைந்து வயதான மலர்க்கொடிக்கும், அவள் கணவன் தர்மலிங்கத்திற்கும் இரண்டு குழந்தைகள். அவள் உடை உடுத்திக் கொள்வதிலும், ஒப்பனை செய்து கொள்வதிலும் மிகுந்த கவனம் செலுத்தவில்லை என்றாலும் அவளும் ஒரு அழகான பெண்தான். எல்லாவற்றையும் விட அவள் மிகுந்த தன்னம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் விளங்கினாள். இன்றைக்கும் சிரித்த முகத்தோடு எங்களை அவள் வரவேற்றது எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. நகராட்சி அலுவலகத்தில் வேலை செய்யும் தர்மலிங்கத்திற்கு மாத வருமானம் ரூ. 600. அதில் சரிபாதி அவர்கள் சொந்த ஊரான சென்னைக்குச் செல்வதற்காக வாங்கிய கடனுக்காகக் கொடுக்கப்பட்டு விடும். ஆனாலும் அவன் தன் மனைவியை வேலைக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. 1982 பிப்ரவரி மாதம் எனக்குத் தெரிந்த மருத்துவமனையில் வேலைக்கு ஓர் ஆள் தேவையாயிருந்தது. அந்த வேலைக்குச் செல்ல மலர்க்கொடி விரும்பினாள். ஆனாள் அவள் கணவன் அனுமதிக்கவில்லை. இது நடந்தது அவளது இறப்பிற்கு ஒரு நாள் முன்னதாக.

அன்று ஞாயிற்றுக் கிழமை. வழக்கம் போல், அன்று மாலை அப்பகுதியைச் சுற்றிப்பார்த்து வரச் சென்றோம், அப்பொழுது வழக்கத்துக்கு மாறாக மலர்க்கொடியின் வீட்டுக்கதவு மூடப்பட்டிருந்தது. நான் கதவைத் தட்டினேன். சில பெண்கள் வந்து என்னை உள்ளே அழைத்துச் சென்றனர். அங்கு மலர்க்கொடி உடல்காயங்களோடு, சுயநினைவின்றிக் கீழேகிடந்தாள். நல்ல காய்ச்சலும்இருந்தது. அவளது. மேல் உதட்டிலிருந்து இரத்தம் வழிந்து. கொண்டிருந்தது உடல் முழுதும் வீங்கி நடுங்கி கொண்டிருந்தது. எதனால் அவளுக்கு இப்படி நேர்ந்தது என்பதை என்னால் .. புரிந்து கொள்ள முடியவில்லை.

அங்கிருந்த பெண்களும் எனது கேள்விகளுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. காக்கை வலிப்பு காரணமாகக் கீழே விழுந்து அதனால் அடிபட்டு விட்டது என்று ஒன்றிரண்டுபெண்கள்சொன்னார்கள் அதோடு அவர்கள் அவசர அவசரமாக இது அவருக்குப் பழக்கமானது தான் என்பதைச் சேர்த்துக் கொள்வதிலும் மிகக் கவனமாக இருந்தார்கள். நானும் இந்தக் கதையை முட்டாள்தனமாக நம்பி விட்டேன். பிறகு எனது நண்பர்கள் சிலரும் அவளைப் பார்க்க வந்தனர். ஆனால் ஒருவரும் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை.

அன்று ஞாயிற்றுக் கிழமைவேறு ஆதலால் எல்லாமருத்துவமனைகளும் மூடப்பட்டிருந்தன. அது காக்கை வலிப்பாக இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியும் என்னுள் எழுந்தது. ஆனால் அப்பகுதியில் வழக்கமாக நடைபெறும் கூட்டம் அரைமணி நேரத்திற்குள் நடக்க இருந்ததால் அவளைப் பார்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டுக் கூட்டத்திற்காக நாங்கள் சென்று விட்டோம். அன்று மிகவும் அதிகமான வேலைகள் இருந்த போதிலும் கூட மலர்க்கொடியை அந்த நிலையில் பார்த்து விட்டு வந்த பின்னர் என்மனம் எதிலும் நிலை கொள்ளவில்லை. அதற்குள் மலர்க்கொடி வீட்டின் அருகிலிருக்கும் ஒருவன் ஓடி வந்து அவள் இறந்த செய்தியைச் சொன்னான். அவள் அவளது குடிகாரக் கணவனால் நன்றாக அடிக்கப்பட்டு உள்ளுக்குள்ளேயே இரத்தக்கசிவு ஏற்பட்டது என்பதையும் அவனால் . அவள் கொல்லப்பட்டாள் என்பதும் தெரிய வந்தது. பின் சீக்கிரமே முழுக்கதையையும் தெரிந்து கொண்டோம்.

சில நாட்களுக்குமுன் மலர்க்கொடி அவளது பழைய நண்பனோடு சென்னைக்குச் சென்று விட்டாள். பிறகு தர்மலிங்கம் சென்று இனி அவள் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அழைத்து வருகின்றான். ஆனால் அதன் பின்னர் அவன் அடிக்கடி அவள் ஓடிச் சென்றதைச் சொல்லிச்சொல்லி குடித்து விட்டு அடிக்கத் தொடங்கினான். இது வழக்கமாக நிகழுகின்ற ஒன்றாதலால் சுற்றியிருப்பவர்களும் இதனை நன்றாக அறிந்திருந்தனர். ஆனால் இந்த ஞாயிற்றுக் கிழமை வழக்கமான நிகழ்ச்சி ஆபத்தானதாக மாறி அவளும் இறந்தாள், அவளது அந்தச் சாவை விட ஒரு மனிதனைக் கட்டாயத்திற்காகத் திருமணம் செய்து கொண்டு, இரண்டு குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு பின் அவனது கோபத்திற்கும், சந்தேகத்திற்கும் ஆளாக நேர்ந்த அந்தப் பெண்ணின் அவல வாழ்க்கை என்னை மிகவும் பாதித்தது. அதோடு சுற்றிலும் உள்ளவர்கள் எந்தவித உணர்வும் இன்றி இதில் தலையிடாத காரணத்தால் இந்தக் கொடுமைக்குத் துணைபோன தன்மையை நினைத்துப் பார்க்கும் போது அது எனது வருத்தத்தை மேலும் அதிகமாக்கியது.

அன்றாட வாழ்வில் பெண்களுக்கு நேரும் கொடுமைகளிலிருந்து விடுபட அவர்களிடத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையையும், ஒரு கூட்டு அமைப்பின் மூலம் அதைச் செயல்படுத்த முடியும் என்பதையும் உணர்ந்தேன். இவ்வாறு செயல்படும்போது ஆண்களை எதிர்க்க வேண்டிய சந்தர்ப்பம் நேரும். இருப்பினும் ஒரு நல்ல நிலையான பலனைப் பெற இந்த எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டி இருக்கின்றது.

மலர்க்கொடியின் இறப்புக்கான காரணங்களைப் பலரிடத்திலிருந்தும் சேகரித்தோம், அப்பகுதியில் வாழ்ந்த பெரும்பாலான பெண்களுக்கு, அவள் இறந்ததற்கான உண்மைக் காரணம் தெரிந்திருந்தும், அதை வெளியில் சொல்ல அவர்கள் தயங்கினர்; அஞ்சினர்.

ஒருசில ஆண்களை அணுகி, 'நீங்கள் ஏன் இதில் தலையிட்டு தீர்க்கவில்லை' என்று கேட்டதற்கு, 'அது அவர்கள் குடும்பச் சண்டை என்பதே பதிலாக வந்தது. இதற்கு ஒருபடி மேலாக வந்த பதில், 'அவள் தன் கணவனால் கொல்லப்பட்டாள், அதனால் நாங்கள் ஏன் இதில் தலையிடவேண்டும்" என்பது.

குடிசைப் பகுதியில் வாழும் ஆண்கள் மட்டும்தான் இப்படி நடந்துக் கொள்கிறார்களா? இல்லை, நான் பார்த்த வரையில் அவர்களது சாதி, வேலை. அந்தஸ்து ஆகியன எதுவாக இருந்தாலும் எல்லாரிடத்திலும் இதே போக்கையே காண முடிகின்றது. மலர்க்கொடி கொலை தொடர்பாகத் திலக்நகர், காவல் நிலையத்துக்குச் சென்றபோது, அந்த இன்ஸ்பெக்டர், "எதற்காக இதனை நீங்கள் 'பெரிது படுத்துகிறீர்கள்? அவள் ஒரு ஒழுக்கங் கெட்ட பெண், இல்லாவிட்டால் எந்த ஒரு நியாயமான கணவனும் இவ்வாறு செய்ய மாட்டான்" என்று கேட்டது என்னை மேலும் சிந்திக்க வைத்தது.

மனைவி வதைப்பை எதிர்த்து அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து காவல் நிலையம் சென்று அவளது, இறந்த உடலைக் கேட்டபோது, தெருவில் சென்று கொண்டிருந்த இரண்டு நல்ல மனிதர்கள் வந்து, "போயும் போயும் அவளைக் கொலை செய்தது அவளது கணவனே, அப்படி இருக்க நீங்கள் ஏன் இவ்வளவு பெரிதாகக் கூப்பாடு போடுகிறீர்கள்?" என்று கேட்டனர். பின் எனது வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கே இதனை விளக்கியபோது கூட, "அவளைக் கொலை செய்தது அவளது கணவனே, எனவே நீங்கள் என்ன செய்ய முடியும்" என்பதே பதிலாக வந்தது.

பெண்ணைப் பொறுத்தவரை அவளது தாலியே அவளுக்குச் சாவின் வாயிலாகவும் இருக்கின்றது. கணவன் என்பவன் அவளது வாழ்வையோ, அல்லது சாவையோ, அவளுக்குப் பிச்சையாக இடும் கடவுளாக எட்டாத உயரத்தில் இருக்கின்றான். இந்த நியாயமற்ற நம்பிக்கையை எதிர்த்துப் போராடவில்லையென்றால் எவ்வாறு நாம் உண்மையான மனிதத் தன்மையை ஒவ்வொரு பெண்ணிடத்திலிருந்தும், ஆணிடத்திலிருந்தும் வெளிக் கொண்டு வரமுடியும்.

நன்றி மனுஷி



"பார்த்தீங்களா மிஸ்டர் ஆனந்த், போலீஸ் டிரெயினிங் காலேஜ்ல தன்கிட்ட மிஸ்பிஹேவ் பண்ண ஒரு ஆணை அடிச்சு வீழ்த்தியிருக்காங்க ப்ரீதி அரோராங்கற ஒரு ஐ. பி. எஸ். டிரெய்னி!!"

"பேப்பர்ல படிச்சேன் மேடம் சாந்தி!"

"அதுல வேடிக்கை என்னன்னு தன் கூட டிரெய்னிங்ல இருக்கறவரை 'மேன்ஹாண்டில்' பண்ணிட்டாங்கன்னு ப்ரீதியை டிரெயினிங் காலேஜ்லயிருந்து விலக்கிட்டாங்களாம்!"

"மேடம் கீதா, அத 'மேன்—ஹாண்டில்''ங்கறதைவிட 'வுமன்-ஹேண்டில்''னு சொன்னால் பொருத்தமாயிருக்கும்!"

"என்ன மிஸ்டர் ராம், எவ்வளவு சீரியஸான விஷயம் உங்களுக்கு "ஜோக்"கா இருக்கா?"

"அதுல இன்னொரு சமாச்சாரம் என்னன்னு, ப்ரீதியோட பிரதரும் அதே டிரெயினிங் காலேஜ்ல 'டிரெய்னி' யா இருந்திருக்காரு! பிரதர் கூட இருக்கற இடத்துலேயே இப்படி நடந்திருக்கு!"

"சரசு, ஏதோ அந்தப் பொண்ணுக்கு கராத்தே தெரிஞ்சிருக்கு, தைரியம் இருந்திருக்கு. அதனால துணிஞ்சு அடிச்சிட்டா! இல்லேன்னு, அங்கேயிருக்கற இதர டிரெயினீஸ், இன்ஸ்ட்ரக்டர்ஸ், இவங்க எல்லாமா சேர்ந்து அந்தப் பொண்ணை 'எக்ஸ்ப்ளாய்ட்' பண்ணியிருப்பாங்க!"

"சாந்தி. அதுல இன்னும் வருத்தப்பட வேண்டிய விஷயம், சம்பந்தப்பட்ட ஆண் டிரெய்னியை விட்டுட்டு பாதிக்கப்பட்ட பொண்ணை மட்டும் உடனே விலக்கியிருக்காங்க. அப்புறம் பிரச்னை பெரிசாப் போய்' பத்திரிகைலல்லாம் விஷயம் வெளில வந்ததும், நிதானமா அந்த ஆளையும் 'சஸ்பெண்ட்' பண்ணியிருக்காங்க!"

"சரசு, கூடப் படிக்கிற பொண்ணை, அதுவும் ஐ. பி. எஸ். டிரெயினிங் எடுத்துக்கற பொண்ணையே இவுங்கவிட்டு வைக்கலேயே, இவுங்க டிரெயினிங் முடிஞ்சு போலீஸ் அதிகாரியா வெளில வந்ததும் இவுங்ககிட்ட மாட்டிக்கிட்டு எத்தனை அபலைப்பெண்கள் என்ன பாடுபடப் போறாங்களோ போட்டிருங்களா?"

'இப்ப மட்டும் என்ன கீதா, பெண்களை எந்தக் காரணம் கொண்டும் ராத்திரி நேரத்தில போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கிட்டு வந்து விசாரிக்கக் கூடாதுன்னு ரூல் இருக்கு, ஆனா போலீஸ் டிபார்ட்மெண்ட்டுல இந்த ரூலை மதிக்கிறதேயில்லை!"

"அதே மாதிரி விபச்சாரத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தறபோது கூட, பெண் போலீஸ்காரங்கதான் சோதனை நடத்தணும்னு சட்டமிருக்கு! ஆனா நடக்கறது என்ன? ஆண் போலீஸ்காரங்கதான் விபச்சாரம் பண்ற பெண்களை மிரட்டி அடிக்கடி 'மாமூல்' வாங்கிக்கறாங்க, அத்தோட போலீஸ் ஸ்டேஷன்ல வைச்சே 'எக்ஸ்ப்ளாய்ட் பண்றாங்க!"

"ஏன் மேடம் சரசு, குற்றம் பண்ற பொண்ணை ராத்திரில விசாரிக்க கூடாதுன்னு, ஒருபொண்ணு ராத்திரி ஒன்பது மணிக்கு ஒருவீட்டுக்குள்ளே நுழைஞ்சு திருடிட்டா அவளை விசாரிச்சுத்தானே ஆகணும்? ராத்திரியாச்சேன்னு அவளை விட்டுட்டா அவஓடி போயிட மாட்டாளா?"

"இது என்ன கேள்வி மிஸ்டர் ஆனந்த்! அவளை" அபய நிலையம்" மாதிரி இடங்கள்ல ஒரு ராத்திரி வைச்சிருந்து மறு நாள் காலைல விசாரிக்கறது; இல்லை-தே வைப்பட்டா கோர்ட்ல ஆஜர்படுத்துறது. இதுக்கெல்லாம் பெண் போலீஸ்காரங்கள உபயோகப்படுத்துறது.

"பெண்போலீஸ்காரங்க மட்டும் என்னமேடம்? சமீபத்துல ஒரு எக்ஸிபிஷன்ல ஒரு பொண்ணு நகையைத் திருடிட்டான்னு இரண்டு லேடி கான்ஸ்டபிள்ஸ் அந்தப்பொண்ணை பட்டப்பகல்ல நூத்துக்கணக்கான பேருக்கு மத்தில டிரஸ்ஸெல்லாத்தையும் அவுத்து 'சோதனை' போட்டிருக்காங்க! அவ நிர்வாணமா நின்னுக்கிட்டிருந்திருக்கா கையில் ஒரு. கொழந்தை வேற! சந்தேகப்பட்டா சோதனை போடட்டும்! வேணுங்கலை, ஏர்போர்ட்ல செய்ற மாதிரி மறைவான இடத்துல வைச்சு அந்த சோதனையை நடத்தியிருக்கலாம் இல்லையா? இரண்டு பெண்களே, என்னதான் திருடியாயிருந்தாலும். அந்தப் பொண்ணை அப்படி செய்யலாமா?"

"ஐ அக்ரீ வித் யூ மிஸ்டர் சாரதி! என்னதான் இருந்தாலும் ஒரு பொண்ணை நடு ரோட்டில் மானபங்கப்படுத்துறதுக்கு யாருக்குமே உரிமை கிடையாது, பெண்போலீசாவே இருந்தாக்கூட! இப்பதிருமதி திலகவதி குமரன் மாதிரி லேடீஸ்லாம் ஐ.பி.எஸ். அதிகாரியா வந்திருக்கறதால, இந்த மாதிரி விஷயங்களைக் கவனிப்பாங்கன்னு எதிர்பார்ப்போம்!"

"நார்த்ல ஒரு கிரண்பேடி மாதிரி நமக்கு திலகவதி குமரன். இவங்களும் கிரண்பேடி மாதிரிப் புகழ் பெறட்டும்னு வாழ்த்துவோம்!

"எங்கே மேடம் சாந்தி, போலீஸ்காரங்க அவங்க கடமையைச் செய்யறதுக்கு அரசியல் வாதிங்க விட்டாத்தானே?!"

"ஆமா சரசு, சமீபத்துல பெசண்ட்நகர் ஏரியாவுல, ஒரு நாலு வயதுப் பெண்குழந்தையை நாலு ஆண்கள் சேர்ந்து கெடுத்துட்டாங்கன்னு பேப்பர்ல வந்திருக்கு...... நாலுவயதுப் பெண் குழந்தைய...... என்ன 'வக்கிர உணர்ச்சி' அவங்களுக்கு. அதை விட, இன்னைக்கு வரைக்கும், யாரையுமே போலீஸ் கைது பண்ணலேங்கரதுதான் வேதனையா இருக்கு!

"ஆமா சாந்தி கேரளாவில கூட ஒரு பாதிரியார் பல வருஷமா கேரளப் பெண்களை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி பண்ணிக்கிட்டிருக்காராம்! அதை இன்னைக்கி வரைக்கும் கேரள அரசோ, மத்திய அரசோ தடுக்க முடியல! என்ன காரணம்? அரசியல் வாதிங்களோட சப்போர்ட்! ஒருலிமிட்டே இல்லாம போயிட்டிருக்கு......!

"ராம், உனக்கு ஞாபகம் இருக்கா?! அதே பெசண்ட்நகர் ஏரியால சில வருஷங்களுக்கு முன்னாடி நடந்ததால் பேப்பர்லல்லாம் வந்துதே! அதாவது—பெசண்ட்நகர் எலியட் பீச்சுல ஈவினிங் டயத்துல புதுசாக் கல்யாணம் பண்ணிக்கிட்ட தம்பதிகள் ஜாலியாக் காத்து வாங்கிக்கிட்டிருக்கறப்போ, நாலு பேரு வந்து சுத்தி வளைச்சுக்குவாங்களாம்! 'நாங்க மஃப்டியில் இருக்கற போலீஸ், உங்களை விபச்சாரத் தடைச் சட்டத்துல அரெஸ்ட் பண்ரேம்'னு மிரட்டுவாங்களாம்! அப்புறம் கொஞ்சம் பேரம் பேசி, 'அதோ எங்க இன்ஸ்பெக்டர் இருக்கார், அவரை இந்தப் பொண்ணு 'சாடிஸ்ஃபை' பண்ணிஞப் போதும்! மறுத்தா போலீஸ் ஸ்டேஷன், கேஸ் எல்லாம் வரும்,"என்ன சொல்றீங்க" அப்படீன்னு மிரட்டுவாங்களாம்!

"என்ன சொல்றீங்க சாரதி?! இப்படியெல்லாம் கூடவா நடந்தது?"

"ஆமா மேடம் சரசுவதி, அந்தப் பொண்ணு நிலையை நினைச்சுப் பாருங்க — ஒண்ணு, அந்த இன்ஸ்பெக்டருக்கு உடன்படணும், இல்லை, 'பிராத்தல் கேஸ்'ல மாட்டிக்கணும்! இது மாதிரி பல தம்பதிகள்! இதில உடன்பட்டவங்களும் உண்டு, கேஸ்ல மாட்டிக்கிட்டவங்க உண்டு, சொல்லாமல் கொள்ளாமல் தற்கொலை பண்ணிக்கிட்ட பொண்ணுங்க உண்டு, மனைவியைக் காவு கொடுத்துட்டு விழிச்ச ஹஸ்பெண்டுகள் உண்டு! இதுக்குப் பின்னணில அரசியல்வாதிங்க, போலீஸ் அதிகாரிங்கல்லாம் இருந்திருக்காங்க! எப்படியோ பத்திரிகைகளுக்கு செய்திப் பரவி அதுக்கப்புறம்தான் இந்த அக்கிரமத்துக்கு ஒரு முடிவு வந்தது!"

"இதெல்லாம் எப்படி இத்தனை நாளா நமக்குத் தெரியாம இருந்தது?!"

"ஏன்னா போலீஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவங்களே இதில சம்மந்தப்பட்டிருந்ததால்தான் எல்லாப் பத்திரிகைகளுக்கும் நியூஸ் போகலை! போனாலும் விஷயத்தை அமுக்கச் சொல்லி பிரஷர்! அதனால எல்லாப் பத்திரிகைகள்லயும் கிடைக்க வேண்டிய முக்கியத்துவம் கிடைக்கலை!"

"சரசு, நீ விபச்சாரத்தைப் பத்திச் சொன்னதும் சமீபத்துல பார்லிமெண்ட்டில கொண்டுவரப்பட்ட ஒரு மசோதா ஞாபகத்துக்கு வருது. அது நிறைவேறினா, விபச்சாரத்துல ஈடுபடுற ஆண்களுக்கும் கடுமையான தண்டனை காத்திட்டிருக்கு!"

"நியாயம்தானே கீதா, ஒரு பெண், ஆண் இல்லாம எப்படி விபச்சாரத்துல ஈடுபட முடியும்?!"

"ஏன் மேடம், என்னதான் கடுமையான சட்டங்கள் போட்டாலும் விபச்சாரத்தையெல்லாம் ஒழிச்சுட முடியும்னு நினைக்கிறீங்களா? கடுமையான சட்ட திட்டங்கள் கொண்ட சோவியத் நாடு, சைனா, கல்ஃப் நாடுகள்லகூட விபச்சாரத்தை முழுதுமா ஒழிக்க முடியல, இன்னமும் மறைமுகமா நடந்துகிட்டிருக்கறதாந்தான் பேப்பர்லல்லாம் அப்பப்ப நியூஸ் வருதே!"

—எஸ். ராஜேஸ்வரி





பெண்
ஆறுமாத சந்தா ரூ 12/-
வருட சந்தா ரூ 24/-
ஆயுள் சந்தா ரூ 250/-
பிரதிகளை உறுதி செய்து கொள்ளுங்கள்


# இரும்பு

குளோரியா நைலர்

தமிழில்: மாலன்

யுத்த காலத்தில் கறுப்பர்களை போருக்கு அழைத்துச்செல்லப் பயன் பட்ட அந்த கிழட்டு பஸ் ரொம் பத்தான் லொட லொடத்தது. பழகின வீடு, விடை கொடுத்த அம்மாவின் விசும்பல், தொடை ரணத்தைப் போலவே இப்போதும் ஊமைக் காயமாய் வலிக்கும் அப்பாவின் முறிவு, முன் பின் அறியா ஊரில் வரவேற்கக் காத்திருக்கும் தோழி எட்டா எல்லாம் நினைவில் திரும்பத் திரும்ப மோதின. மேட்டிக்கு எதையும் யோசிக்க விருப்பமில்லை. பிறந்த குழந்தைகளைப் போல் நினைவே அற்று இருந்தால் தேவலை போல் இருந்தது.

வயிற்றுக்குள் குழந்தை மெல்ல அசைந்தது. தாமாகவே அவள் கைகள் வயிற்றைப் பற்றிக்கொண்டன. இறந்து போன நேற்றையும் வரப் போகும் நாளையையும் இணைக்கத் தனக்கு இருக்கும் ஒரே பாலம் இந்தக் குழந்தை என்ற எண்ணம் எழுந்த போது ஏனோ நெஞ்சு துடித்தது.

"உனக்கு ஞாபகம் இருக்கா மேட்டி?" எட்டாவிற்கு எப்போதுமே உரத்த குரல். "குழந்தைகளை கடவுள் சொர்க்கத்தில் இருந்து தபாலில் அனுப்புகிறார்" பாட்டியைப் போல் குரல் மாற்றிக் கேலி செய்தாள் எட்டா. உடனே குழந்தையான நீ கேட்பாய், "ரொக்கத்திற்கா தவணைக்கா பாட்டி?" குழந்தை எங்கிருந்து வருகிறது என்று உனக்கு இப்போதாவது புரிந்ததா?"

"குழந்தைகள்—எத்தனை அழகான ஆச்சரியம் இல்லையா எட்டா?"

"அழகு! தோலைப் பார் குரங்குக் குட்டி மாதிரி சுருக்கம் சுருக்கமாய்! புதுசா பிறந்த குழந்தைகளைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கிறதில்லை. உன் பையன் ஜம்னு இருக்கான். யார் கண்டா? இவன் தான் அமெரிக்காவின் முதல் கறுப்பு ஜனாதிபதியோ என்னவோ?"

எட்டாவின் குரலையும் சிரிப்பையும் கேட்டுக் குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. "ஆரம்பிச்சுட்டாண்டியம்மா! இந்தா நீயே வைச்சுக்கோ!"

மேட்டி குழந்தையை வாங்கிக் கொண்டு மென்மையாகத் தட்டினாள்.

"இதுக்கெல்லாம் எனக்குப் பொறுமையே கிடையாது. இதனால் தான் நான் குழந்தையே பெத்துக்கிறதில்லை"

"பொறுமையாருக்கும் கிடையாது எட்டா. ஆனால் அது தானே வரும். உனக்கே உனக்கு இந்தப் பரிசு என்கிறபோது பொறுமைத் தானே வரும்."

"ஆமாண்டி அம்மா, உனக்கே உனக்கு இன்னும் இருபது வருஷத்திற்கு இந்த நெஞ்சு வலி உனக்கே உனக்கு காயம் பட்டுக்கத்தான் வேணும்னு அதற்கு எனக்கு குழந்தைகள் வேண்டாம் நினைச்ச நிமிஷத்தில் உதறிவிட்டுப் போகிற ஆண்கள் இருக்கிறார்களே—பென்னட் போல"



"என்னது, எட்டா இது?"

"ஆமாம் ஒரு மாசம் ஆச்சு நானும் கிளம்பிண்டே இருக்கேன்"

"எங்கே?"

"வேறெங்கே? நியூயார்க்தான். யுத்தம் முடிஞ்சு, பாக்கெட் நிறைய பணத்தோட "பசங்கள்" எல்லாம் வியட்நாமில் இருந்து திரும்பி வந்துண்டு இருக்காங்களாம். ஒரு மாப்பிள்ளை கிடைக்காமலா போவான்?"

"முதலில் செயிண்ட் ஜாயிஸ், அப்புறம் சிகாகோ, இப்போ நியூயார்க். எதைத்தேடி ஊர் ஊரா அலையறே? எட்டா, உனக்கு என்னதான் வேணும்.?"

"அது எனக்கே தெரியலையே! எப்படியிருந்தாலும் சரி, நீயும் சீக்கிரம் கிளம்பற வழியைப் பாரு. இந்த ஊர்லமனுஷன் இருக்க முடியாது."

"எனக்கு எதுவும் வேண்டாம். கடவுள் கொடுத்திருக்கிறதே போதும்" குழந்தையை எடுத்து மெல்ல முத்தமிட்டாள் மேட்டி.

"எப்படியோ போ. எனக்குக் கிடைச்ச 'லேட்டஸ்ட் நியூஸ்' சொல்றேன் கேள். ஏசு பிறந்ததோட' குழந்தைகள் தயாரிக்கிற பாக்டரியை கடவுள் இழுத்து மூடிட்டாராம்."

கதவை இழுத்து மூடிக் கொண்டு கிளம்பினாள் எட்டா.

"அது எனக்கும் தெரியும். இது சொர்க்கத்தில் இருந்து ரொக்கத்திற்கு வாங்கின குழந்தை. அந்தக் கடனை அடைப்பதற்கு நான் ஆயுசு பூரா உழைத்தாகணும்."

எட்டா போன பிறகு தனிமை சூழ்ந்து கொண்டது. அவளுடைய இடத்தை யாருமே நிரப்ப முடியவில்லை, அம்மா வந்தால் குழந்தையைப் பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கும். அம்மாவிற்கு கடிதம் எழுதிப் போட்டாள் மேட்டி, 'எனக்கும் ஆசைதான். ஆனால் அப்பாரொம்ப தளர்ந்து போயிருக்கிறார். அவரைத் தனியாய் விட்டு வர முடியாது, நீ குழந்தையை இங்கு அனுப்பிவை' என்று பதில் வந்தது. குழந்தை அச்சு அசல் புச்சின் சாயல் வளர வளர அது துல்லியமாய்த் தெரிந்தது. அப்பா இருக்கும் வரை குழந்தையை அங்கே அனுப்ப முடியாது.

ஒரு பைண்டிங் கம்பெனியில் வேலை கிடைத்தது. மாடியில் இருந்த கிழவியிடம் குழந்தையை விட்டு விட்டு வேலைக்குப் போனாள். கிழவியின் சேவை இலவசமில்லை, கூலிக்குத்தான். வருகிற சம்பளத்தில் பாதி கிழவிக்கு கூலியாகப் போயிற்று. மத்தியான சாப்பாட்டு நேரத்தில் வேர்க்க விறுவிறுக்க வந்து குழந்தையைப் பார்த்து விட்டு போவாள். அதனால் மத்தியில் சாப்பிட முடியாமல் போனது.

வெறும் வயிற்றோடு வேலை செய்யும் போது வஜ்ஜிரப் பசையின் நாற்றம் குமட்டிக் கொண்டு வந்தது. அதனால் வருகிற வழியில் நொறுக்குத் தீனியை மென்று கொண்டு வருவதே சாப்பாடாக ஆயிற்று. அப்படியும் குழந்தை நடக்க ஆரம்பித்து வைத்த முதலடியைப் பார்க்கக் கிடைக்கவில்லை. பேச ஆரம்பித்த குழந்தை, வேலைக்கார கிழவியை "அம்மா" என்று அழைத்ததைக் கேட்டு விம்மி, விம்மி அழுதாள் மேட்டி.

ஒரு நள்ளிரவு மேட்டியின் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு புரண்டது குழந்தை. அதன் வாயிலிருந்த பாட்டில் பெட்ஷீட்டிற்கு அருகில் உருண்டோடியது. டிரஸ்ஸிங் டேபிள் கீழிருந்து ஒரு எலி வெளிப்பட்டு சுற்றும் முற்றும் பார்த்தது, பாட்டில் சொட்டியிருந்த பாலின் வாசனை மூக்கை ஈர்க்க மெல்ல முன்னேறியது. மனித



வாசனை உணர்ந்து சற்று ஸ்தம்பித்தது.

அசையாத உடல்கள் தைரியம் கொடுக்க, பசி வயிற்றுக்குள் இருந்து விரட்ட குடு குடுவென்று ஓடி பாட்டிலின் ரப்பரைக் கவ்வி இழுத்தது தன் சிறு நாவால் நக்கிப் பார்த்தது.. இனிப்பு மிகுந்த பால் பக்கத்தில் இருந்த அதே வாசனை குழந்தையின் ரகவாய், உதடு மெல்ல மெல்ல நக்கிப் பார்த்தது. பால்வராத ஏமாற்றத்துடன், அந்த பூஞ்சதையில் ஆடிப் பல் பதித்தது.

குழந்தையின் அலரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள் மேட்டி. இருள் திடுமென எழுந்த குழப்பம். அருகில் கை நீட்டி தடவிப் பார்த்தாள். குழந்தையைக் காணோம். பதறி எழுந்து விளக்கைப் போட்டாள். திடுமென்று வெளிச்சம் கண்டு மிரண்டு குழந்தை உரக்க அழுதது. அள்ளி எடுக்கப்போனவள் மார்பில் எட்டி 'உதைத்தது. வலியிலும் குழப்பத்திலும் துடித்தது.

உதட்டோரத்தில் பூத்திருந்த இரண்டு இரத்த மொட்டுக்களைக் கண்டு அலறினாள். அவள் பயத்தைக் கண்டு குழந்தை மேலும் மிரண்டது. உள்ளிருந்து விஸ்கி எடுத்து வந்து இரத்தத்தைத் துடைத்தாள் முனகியபடியே குழந்தையைத் தூங்கியது மேட்டி விளக்கைக் போட்டபடியே இரவு முழுவதும் விழித்திருந்தாள்.

மறுநாள் துணிகளை ஒரு பெட்டியில் திணித்துக் கொண்டு இடத்தைக் காலி செய்தாள் மேட்டி. இன்னொரு இடம் தேடி புறப்பட்டாள். கேள்விகள். கேள்விகள். நுழைகிற ஒவ்வொரு வாயற்படியிலும் கேள்விகள்.

"நாங்கள் குழந்தைகளுக்கு இடம் கொடுப்பதில்லை."

"உன் கணவன் எங்கே?"

நடந்து நடந்து கால்கள் வலுத்தன. சூட்கேஸ் உள்ளங் கையை அழுத்தியது. பழைய இடத்திற்கே திரும்பி விடலாமா? உதட்டோர ரத்த மொட்டுகள் மனத்தில் மின்னி பயமுறுத்தின, பையில் அந்த வாரச் சம்பளம் இருந்தது ஒரு நாள். இரண்டு நாள் தாங்கலாம். ஒரு நாள் பட்டினியிருந்தால் இன்னொரு நாள் தங்கலாம். தேவை ஒரு வீடு. சின்ன தாய் ஒரு இடம்.

"எங்கே போகிறாய் பெண்ணே? பஸ் ஸ்டாண்ட் என்றால் அதற்கு எதிர் திசையில் போக வேண்டும். இரயில்வே ஸ்டேஷன் என்றால் அடுத்த கிராமத்திற்குப் போக வேண்டும்."

குரல் கேட்டுத் திரும்பினாள் மேட்டி. சிரித்த முகத்துடன் ஒரு கருப்புக் கிழவி.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)







# வதனா உஷாவாக முடியுமா?

இரு மாதங்களுக்கு முன்னால் முன் மாலைப் பொழுது இடம் பழைய மூர்மார்க்கெட் எதிரேயுள்ள மாநகராட்சி உள் விளையாட்டரங்கம். அரங்கத்தினுள்ளே தவிக்க வைக்கும் புழுக்கம், கசகசப்பு. உள்ளேயிருந்த பாட்மின்டன் காலரிகளில் கடுகு தாளித்தது மாதிரிப் பார்வையாளர்கள்.

இவர்கள் யாவரும் மிக ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஜூனியர் பெண்கள் இறுதியாட்டம் துவங்கியது. சாம்பியன் யார் என்பது பற்றி பார்வையாளர்களிடையே சந்தேகம் ஒன்றும் கிடையாது. எவ்வளவு சீக்கிரம் அந்த மாட்ச் முடியும் என்பதில்தான் ஆர்வம், எதிர்பார்ப்பு.

இறுதியாட்டத்தில் வென்று தமிழ்நாடு மாநில ஜூனியர் பெண்கள் சாம்பியனானவர் குமாரி. பி.வதனா. இதற்கு முன்பு நடந்த பெண்கள் சாம்பியன்ஷிப்பை வென்றவரும் இவரே. 1981-ல் சப்-ஜூனியர் பெண்கள் சாம்பியனும் இவரே.

எதிராளியைத் திணற வைக்கும் ஆட்டம் இவருடையது. எதிராளியைத் திகைக்க வைக்கும் Smashes. ஏமாற்றி அலைக் கழித்து அயர்த்திவிடும் drops. ஈடு கொடுக்க முடியாத Strokes. இவையே வதனாவின் வெற்றிக் கருவிகள், எந்த விளையாட்டிலும் வெற்றி பெற வேண்டுமானால் நல்ல கற்பனையும், புத்திகூர்மையும் வேண்டும். இயற்கையாகவே இவையிரண்டும் அமையப் பெற்ற வதனா, கடும் பயிற்சியின் மூலம் இவற்றை மேலும் கூர்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

1980-ல் முதல்தர மாட்சுகளில் விளையாட ஆரம்பித்ததிலிருந்து "ஜெயித்து கொண்ட" வதனாவாகவே ஒளிர்ந்து வரும் இந்தப் பெண்ணின் பின்னணிக்குள் எட்டிப் பார்ப் போமேயானால் இவரது சிறப்புக்குக் காரணம் சட்டென்று புரிந்து விடும்.

இவரது தந்தை சேலம் ஜில்லா பாட்மின்டன் அசோசியேஷனின் காரியதரிசி, முன்னாள் மாநில ஆட்டக்காரர். வதனாவின் சகோதரர் பி. சந்திரசேகர். இவரும் மாநில சாம்பியன்.

இந்த விளையாட்டுப் பின்னணி இவருக்கு இந்த குறிப்பிட்ட விளையாட்டில் ஒரு இயல்பான ஆர்வத்தை உண்டாக்கி வளர்த்தது. ஆனால் அதற்கும் மேல் இதில் அபார சிறப்புப் பெறுவதற்குதான் எத்தனை தடைகளை இந்தச் சின்னப் பெண் தாண்ட வேண்டியிருந்தது! அதைப் பற்றி வதனாவே சொல்கிறார்.

"நான் இருப்பது சேலத்தில். ஆர்வம் இருந்தாலும் வசதிகள் இல்லாத ஊர். ஒரு Indoor Stadium கூடக் கிடையாது. நான் முழுக்க Outdoor கோர்ட்டில் விளையாடித்தான் பயிற்சி பெற்றேன். பெறுகிறேன்."

"மாட்சுகளில் விளையாடும் சமயம் Indoor Court-ல் விளையாட வேண்டுமே. கஷ்டமாக இருக்காது?"



என்ன கேள்வி என்பது போலச் சற்றே என்னை உற்று நோக்கி விட்டுப் பின் வெகு இயல்பாக "இல்லை" என்று தலையசைக்கிறார் வதனா.

"Steel Authority of India குடியிருப்பில் Indoor Court இருக்கிறது. அது சற்றே தொலைவில் இருந்தாலும் அங்கு போய் விளையாடுவேன்.

கிளப் உறுப்பினர்கள் விளையாடி முடித்த பின்பே எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். சில சமயம் இரவு பத்துமணி கூட ஆகிவிடும், நான் வெளியாள் தானே?"

"நான் பயிற்சி பெற்றது என் தந்தையுடனும் என் அண்ணனோடும்தான்.

தினமும் 10, 15 ரவுண்ட் ஜாக்கிங் செய்யும் வதனா தனிப்பட்ட உணவு ஷெட்யூல் எதுவும் வைத்துக் கொள்வதில்லை. காலை வேளைகளில் உடற்பயிற்சியும், மாலை வேளைகளில் விளையாட்டுமாக இருக்கும் வதனாவிற்கு வேறு எதற்கும் நேரமிருப்பதில்லையாம். உடற்பயிற்சிகளில் எடை தூக்குவதும் உண்டு. எடை தூக்குதல் கைகளுக்குத் தனி வலு தருவதால், பந்தை அடிக்கும் வேகம் அதிகரிக்கிறது, வதனா ஆடும் போது பார்க்கையில் இது புரிகிறது.

ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசீய அளவிலான பாட்மின்டன் பந்தயங்களிலும் வதனா கலந்து கொண்டு வென்றிருக்கிறார். வதனா சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டிய இன்னொரு விஷயம் — அக்டோபர் மாதம் இங்கிலாந்தில் நடக்கவிருக்கும் சால் ஷெங்கர் போட்டிகளில் இந்தியாவின் சார்பாகக் கலந்து கொள்ள வதனாவைத் தேர்ந்தெடுத்திருக்கிறது இந்திய பாட்மின்டன் சங்கம்.

சங்கடம் தரும் இன்னொரு விஷயமும் உண்டு இதில். வதனாவைத் தேர்ந்தெடுத்து விட்டுக் கடையைக்

கட்டிவிட்டது BAI (Bad minton Association of India) போக, வர இங்கிலாந்தில் தங்க, இதற்கெல்லாம் பணம்? மகளே உன் சமர்த்து என்று ஒதுங்கிக் கொண்டு விட்டது BAI. "அதற்காகச் சில நிறுவனங்களின் உதவியைத் தான் நாடவிருக்கிறோம்" என்கிறார் வதனா.

"இந்திய அரசு ஏதாவது"... என்று நாம் இருக்கும் போதே.

"ஓ, அமைச்சர் மார்கரட் ஆல்வாவிற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். ஆனால் அதை Forward செய்ய வேண்டியதே BAI-தான்."

சரி வதனாவைப் பற்றி வேறு என்ன? இப்போது +1 படிக்கிறார். இங்கிலாந்து போகும் தருணத்தை வெகு ஆர்வமாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். இவரை மிகவும் கவர்ந்த பெண் பாட்மிண்டன் ஆட்டக்காரர் — ஏமிகியர் "அவரது Strokes மிகவும் அருமையானவை" என்று கூறி மகிழ்கிறார் வதனா. சர்வ தேச அளவில் இவ்விளையாட்டில் புகழ் பெறவேண்டும் என்பது இவரது விருப்பம். வாழ்த்துவோம்.

ஏனினில் நாமெல்லாமும் கையாலாகாதவர்கள். நமது தேசீய குணமோ ஒரு மாதிரி. சாதனை புரியத் துடிக்கும் ஆர்வத்தைப் புரிந்துக் கொள்ளுதலோ சாதனையாளரைத் தேர்ந்தெடுக்கும் பக்குவமோ, அந்த ஆர்வத்துக்குத் தக்க தீனி போட்டு வளர்க்கும் சாமர்த்தியமோ நமக்கு இல்லை. ஆனால் ஒரு சாதனையாளர் தன் சுய முயற்சியால் முன்னுக்கு வந்து விட்டால் அவரது புகழில் பங்கு கேட்க மட்டும் ஓடோடி வந்து விடுவோம். இன்று பி. டி. உஷாவைக் கௌரவிக்க நான், நீ என்று போட்டி. கான்டெஸ்ஸா காரென்ன, மாருதி காரென்ன, பண முடிப்பு என்ன என்று திக்கு முக்காட வைக்கும் பரிசுப் பட்டியல். இந்த மாதிரியான கொண்டாடுதல் கௌரவித்தலின் நோக்கம் என்ன என்பதை நன்றாக ஆராயப் புகுந்தால் நோக்கத்தின் உண்மை சொரூபம் பல்லிளிக்கும். இன்று இந்த உஷாக்களை நம்மால் உருவாக்க முடியும். அந்தப் பிஞ்சுகளை இனங்கண்டு கொள்ளும் மனம் நமக்கிருந்தால் வதனாவுக்கு பின்னால் வதனா வரிசையே உருவாக்கமுடியும். இதற்கு மனம் வேண்டும், உண்மை வேண்டும். நாம் செய்யும் செயல்களின் முக்கியத்துவம் சரியான விகிதத்தில் உணரப்பட வேண்டும். அதுவரை பாட்மிண்டன் போன்ற விளையாட்டுக்கள் பரம்பரைச் சொத்தாகவும், பார்வையாளர்கள் குடும்பத்தினராக மட்டும் இருக்கும் பரிதாப நிலை தொடர்ந்து கொண்டிருக்கும்.

பெண்

சிறப்பு ஆசிரியர்:
டாக்டர் ஜகதீசன்

ஆசிரியர்:
கண்மணி

யாழ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக தென்றல் பிரிண்டர்ஸில் அச்சிட்டவர்: பாரி, வெளியிட்டவர்: ஜகதீசன்
எண் - 33 க்ளமென்ஸ் சாலை
புரசைவாக்கம்
சென்னை-600007

ஆண்டு : 1
மலர் : 10

சென்னை-600 008
128584

அன்புடையீர்,

'ஆண்மை என்றால் ஆளும் திறன், பெண்மை என்றால் பேணும் திறன்' என்று வாதிடும் மனோபாவங்கள் இன்றும் இருக்கின்றன.

ஆனால், இருபதாம் நூற்றாண்டில் இந்திரா நிமிர்ந்து நின்று நடந்தபோது, இதிகாச காலத்து 'மனு'வும் மனு சூத்திய வைதீக சிந்தனைகளும் அவர் காலடிபட்டு நொறுங்கி, சிதைந்து கரைந்தன.

அரசியலில் அவரின் கொள்கை, நடவடிக்கை, விட்டுச் சென்ற பாதைகள் - இவை இருபுறமிருக்கட்டும் -

'பெண்ணால் முடியும்' - இதை நிரூபித்தார்.

ஆனால் அவரின் ஆற்றலை, ஆளுமையை ஆண்கள் உணர்ந்த அளவுக்கு இங்குள்ள பெண்களும் உணரத் தலைப்பட்டால்....?




UNI CHEM
INDUSTRIES
MADRAS-112
RELIEVES
ALL KINDS OF
BODY PAINS
Curex
Pain Balm
SIDHA
UNI CHEM INDUSTRIES
MADRAS-112
உடல் வலி
நிவாரணி